இரண்டாம் பதிப்பு விலை: 20 பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 277 ஆடி 14ஆம் நாள் புதன்கிழமை 30 ஒகஸ்ட் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்

# தலைவர் பிரபாவை தவறாக பேசிய பொலிஸ் அதிகாரிக்கு மக்கள் கடும் எதிர்ப்பு

## கொற்றாவத்தையில் நேற்றுமுன்தினம் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 30

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைப் பற்றித் தவறாகப் பேசிய பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக மக்கள் கடும் எதிர்ப்பைக் காட்டினர். இதனால் அவர்களை அமைதிப்படுத்திச் சாந்தப்படுத்தும் நிலை ஏற்பட்டது. சம்பவம் வடமராட்சி, கொற்றாவத்தை என்ற இடத்தில் நிகழ்ந்தது. பொலிஸாரின் நடமாடும் சேவையிலேயே இந்தச் சம்பவமும் இடம்பெற்றது.

வடமாரட்சி கொற்றாவத்தைப் பகுதியில் பொலிஸாரின் நடமாடும் சேவை இரண்டு தினங்கள் இடம்பெற்றது. அதன் முதல் நாளான நேற்றுமுன்தினம் ஆரம்ப விழா இடம்பெற்றது. நிகழ்வில் காங்கேசன்துறை மூத்த பொலிஸ்அத்தியட்சகர் முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

நிகழ்வில் அவர் அங்கு உரை நிகழ்த்தினார். அந்த உரையில் அவர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைப் பற்றியும், அதன் தலைவர் வே.பிரபாகரன், மற்றும் முக்கிய தளபதிகளைப் பற்றியும் வசைபாடினார். அவருடைய பேச்சை அடுத்து நடமாடும் சேவையில் குழப்பம் ஏற்பட்டது. மக்கள் கொந்தளித்ததுடன் பேச்சு மேடையில் இருந்து உடனடியாக அவரை வெளியேறுமாறு கூச்சல் இட்டனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டது. நீண்ட நேரத்தின் பின்னர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸார் இணைந்து மக்களை சமாதானப்படுத்தினர். நீண்ட நேரத்தின் பின்னர் நிலமை சுமுகமடைந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (உ-21,8,26)

# பன்னாட்டுச் சமூகத்தின் ஊடான நீதிக்கான எதிர்பார்ப்பு பிசுபிசுப்பு

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடம் சம்பந்தன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஓக. 30

போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க உலகம் உதவும் என்று எதிர்பார்த்தோம், ஆனால் அது நிறைவேறவில்லை என்று ஆதங்கம் வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.



எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை தன்னைச் சந்தித்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடம் அவர் இந்த ஆதங்கத்தை வெளிப்படுத்தினார். சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:

போரின்போது இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நாவில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அமெரிக் 04

## வடமராட்சி கிழக்கை கலக்கிய யானை அகன்றது

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தை கடந்த இரண்டு தினங்களாக அச்சுறுத்தி ஆட்டிப்படைத்த 04

# காணாமல் ஆக்கப்பட்டோரின் கதியை அறிவதற்கு மக்களுக்கு உரித்துண்டு

## எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 30

படையினரிடம் தங்களால் கையளிக்கப்பட்டவர்களுக்கு அல்லது கடத்தப்பட்டவர்களுக்கு அல்லது காணாமற் போனவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பது மக்களுக்குத் தெரியவரவேண்டும்: அது அவர்களது உரிமை. இந்த அடிப்படை உரிமையைக் கவனத்திற் கொள்ளாமல்விடமுடியாது.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டதனால் பாதிக்கப்பட்டவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கும், இலங்கை அரசு வழங்கிய உறுதிமொழிகளைச் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கும், நாம் பன்னாட்டுச் சமூகத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம். 04

## கடும் எதிர்ப்பை அடுத்து 20ஐ திருத்த அரசு முடிவு

கொழும்பு, ஓக. 30

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு வலுத்துவரும் எதிர்ப்பை அடுத்து அதில் திருத்தங்களைச் செய்ய அரசு தயாராகி வருகின்றது 04

இந்தியாவிலிருந்து மற்றொரு அச்சுறுத்தல்

# மலேரியா நுளம்பு மன்னாரில் மீண்டும்

இலங்கையில் இருந்து மலேரியா முற்றுமுழுதாக ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில் மன்னாரில் மலேரியா காவி நுளம்பின் பரம்பல் அதிகமுள்ளதாக சுகாதாரத் துறையினர் எச்சரித்துள் 04

## மாணவர்களின் குருதி மாதிரிகள் சோதனைக்காக கொழும்புக்கு

மது அருந்தினரா என்பதை ஆராய்வதற்காக 04




# அமைச்சர் விஜயகலா என்னைக் காப்பாற்றினார்

## சுவிஸ்குமார் நேற்று நீதிமன்றில் சாட்சியம்

"வேலணையில் மக்கள் என்னை மின் கம்பத்தில் கட்டிவைத்து அடித்தார்கள். அந்தவேளை அங்கு வந்த விஜயகலா மக்களை அடிக்கவிடாது தடுத்து எனது கட்டுக்களை அவிழ்த்து விடுமாறு கோரினார். நீயா சசியின் அண்ணா? என என்னிடம் கேட்டார். நான் ஆம் என்றேன். பொதுமக்கள் என்னை அடிக்கவிடாது தடுத்து நிறுத்தியதுடன் என்னை மக்கள் அடிக்காமல் தடுப்பதற்காக இரண்டு மணி நேரம் அந்த இடத்தில் நின்றார். அப்போது நள்ளிரவு 12 மணி"

இவ்வாறு தீர்ப்பாயத்தில் நேற்றுச் சாட்சியமளித்தார் வித்தியா படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியெனக் கூறப்படும் சுவிஸ்குமார்.

மாணவி வித்தியா கொலை வழக்கில் எதிராளிகளின் சாட்சிகள் நேற்றும் பதியப்பட்டன. சுவிஸ் குமார் என 25

## 15ஆம் திகதி தீர்ப்பு வரலாம்

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் வழக்குத் தொடுநர் மற்றும் எதிரிகள் தரப்புச் சாட்சியப் பதிவுகள் நேற்றுடன் நிறைவடைந்தன. இரு தரப்பு 25



## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி நாகசுலோஜன்

(யா/சென்ஜோன்ஸ் கல்லூரி - கணிதப்பிரிவு 2019)



உரும்பிராய் கிழக்கு முருகன் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகசுலோஜன் (யாழ்/ சென் ஜோன்ஸ் கல்லூரி கணிதப் பிரிவு 2019) 28.08.2017 திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் சின்னத்தம்பி - விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் டக்சன், பிரதீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெயசீலனின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2017) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காட்டு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகலிங்கம் இராசரத்தினம்

(ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசரத்தினம் 29.08.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு சிரேஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் மாரிமுத்து தம்பதியரின் மருமகனும் யோகேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) யின் அன்புக் கணவரும் குகராஜாவின் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) பாசமிகு தந்தையும் தயாமதியின் (ஆசிரியர்) பாசமிகு மாமனாரும் கிரிஷ்த்காந், ஜத்ஷா, ஹாசினி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, யோகம்மா, இராசேந்திரம் மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நேசரத்தினம் மகேஸ்வரி விஜயம்மா மற்றும் சபாரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2017) புதன்கிழமை மு.ப 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.30 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி.
0776660698

தகவல்: குடும்பத்தினர்.
இ. குகராஜா (மகன்)

### தேவகுமார் தனுரதன் (முருகா)

*(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, 2016 கணிதப்பிரிவு மாணவன்)*



வேலணை, வங்களாவடி, காளிகோவிலடியைச் சேர்ந்த அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவிலைவசிப்பிடமாகக்கொண்ட தேவகுமார் தனுரதன் கடந்த (28.08.2017) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் தேவகுமார் (தேவன் - ஆசாரி) - தில்லைநாயகி (ஆசிரியை - யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்) தம்பதியரின் அன்பு மகனும் மாதுரி, கனிதரன் ஆகியோரின் அன்புச் சகோதனும் காலஞ்சென்றவர்களான நடராசா - கமலாம்பிகை மற்றும் சுந்தரம்பிள்ளை - தனலட்சுமி (பவளம்) தம்பதியரின் அன்புப் பேரனும் நேசகுமார் - இராஜமலர், இராம்குமார் - பிறேமா, வரதகுமார் - வித்தியா,நடனகுமார் - சுதா, தயாளகுமார் - சுகிர்தா, சுரேந்திரகுமார் - ரஜனி, சுகந்தன் - சிவநாயகி, சுதாகரதாஸ் -சுதாநாயகி ஆகியோரின் பெறாமகனும் விக்கினேஸ்வரநாதன் -குகனேஸ்வரி (ரூபா), லோகேஸ்வரன் - கவிதா, ஜெகதீஸ்வரன் - சுரேகா, ஜெயகரன் - தேவசேனா, புவனேஸ்வரி (புஸ்பா) ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2017) வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.தேவகுமார் (தேவன் தந்தை)
077 628 2710
ந.நேசகுமார் (நேசன் பெரியப்பா)
077 308 6884

அச்சுக்கூட வீதி.
கொக்குவில்.

# முன்னாள் அமைச்சர் அஸ்வர் காலமானார்

முன்னாள் முஸ்லிம் சமய விவகார இராஜாங்க அமைச்சரும் முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலாளருமான ஏ.எச்.எம். அஸ்வர் நேற்றிரவு 7.15 மணியளவில் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் காலமானார். உயிரிழக்கும் போது அவருக்கு வயது 80.



நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர், லங்கா சமசமாஜக் கட்சி மூலம் அரசியலுக்குப் பிரவேசித்து பின்பு ஐக்கிய தேசியக் கட்சி மூலம் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகவும், முஸ்லிம் சமய விவகார இராஜாங்க அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற விவகார இராஜாங்க அமைச்சர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

அத்துடன், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசகராகவும் இவர் பணிபுரிந்துள்ளார்.

ஆசிரியராக மட்டுமல்லாது பிராந்திய செய்தியாளராக தனது பொது வாழ்வை ஆரம்பித்த இவர், கலாநிதி ரீ.பி. ஜாயா, டாக்டர் எம்.சீ.எம்.கலீல், எம்.எச்.முஹம்மத், எம்.ஏ.பாக்கிர் மாக்கார் உட்பட முஸ்லிம் தலைவர்கள் பலரோடு நெருங்கிச் செயற்பட்டார்.

முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேமதாஸவின் நம்பிக்கைக்குரிய நபராகவும் விளங்கினார்.

முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் பாக்கீர் மாக்காரின் அந்தரங்க செயலாளராகவும் பணியாற்றினார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தைக் கட்டியெழுப்புவதில் பாக்கீர் மாக்காருடன் இணைந்து இவர் அரும்பணியாற்றினார்.

மர்ஹூம் எஸ்.எல்.எம். சாபி மரைக்காரின் அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் ஆரம்பகால உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் கல்விப் பணிகளுக்கு ஆற்றிய பங்களிப்புக்கள் அளவிட முடியாதவை. முஸ்லிம் மீடியா போரத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் இவர் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் ஜனாஸா இன்று மாலை தெஹிவளை பெரிய பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்படும்.

தெஹிவளை, பாத்தியாமாவத்தை, இலக்கம் 04 என்ற முகவரியிலுள்ள இவரது வீட்டிலிருந்து ஜனாஸா நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். (க-ச)

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு
18 . 06 . 1970



இறப்பு
28 . 08 . 2017

### திருமதி இந்திரவதனி புவேந்திரன்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திரவதனி புவேந்திரன் நேற்று (28.08.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பழனி செல்லையா சுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும் புவேந்திரனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்புமருமகளும் சரணியா (வைத்திய கலாநிதி, லண்டன்), அரவிந்தன்(UK) ஆகியோரின் அன்புத் தாயும் ரஜனி, இந்திரகுமார், பவானி, காயத்திரி (பிரதேச செயலகம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தவேந்திரன், சேனாதிராஜா, கமலரூபி, சற்குணராஜா, சுகந்தன், உமாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

156, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
077 267 9817

தகவல்: சு. காயத்திரி
(சகோதரி)



### லிங்கநாதன் றஜீவ்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லிங்கநாதன் றஜீவ் (28.08.2017) திங்கட்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் லிங்கநாதன் - இராசகுமாரி தம்பதியரின் அன்புமகனும் மிதுனன் நிரஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுந்தரம் - மகேஸ்வரி தம்பதியரின் மற்றும் இரத்தினம் - இராசம்மா தம்பதியரின் பேரப்பிள்ளையும் நாகேந்திரம் - ராஜேஸ்வரி தம்பதியரின் பெறாமகனும் ரஜீந்திரன், ஜெந்திரன், பாலசந்திரன், மதிவதனி, கலாவதி ஆகியோரின் பெறாமகனும் ரவீந்திரனின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2017) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதவராயர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அப்பாபிள்ளை கந்தசாமி



தோற்றம் . 22. 02. 1942
மறைவு . 28.08.2017

மட்டுவிலை பிறப்பிடமாகவும் பருத்தித்துறை தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற அப்பாபிள்ளை பார்வதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அப்பா பிள்ளை கந்தசாமி கடந்த (28.08.2017) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அமுதரத்தினம் (துரையம்மா) வின் அன்புச் சகோதரனும் யோகேஸ்வரியின் அன்புக்கணவரும் விஜயகாந்தன் (கனடா), உதயகாந்தன் (UK), பைந்தமிழ்ச்செல்வி (UK), திருநிறைச் செல்வி, சத்தியகாந்தன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனுப்பிரியா (கனடா), ரூபகாந் தினி(UK), பிரதீபன் (UK), இளந்திரையன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனீஷா, அக்ஷயா, நிதுஷா,அனிஸ்(UK),தர்ஷாந் (கனடா), சயூரி,சாய்ரிதன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2017) வியாழக்கிழமை ஒருதானை ஒழுங்கை ,தும்பளை பருத்தித்துறை இல்லத்தில் மு.ப 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

தகவல்:
குடும்பத்தினர்.

ஒருதானை ஒழுங்கை,தும்பளை ,
பருத்தித்துறை.

# சிகரம் ஏறும் சாரணருக்கு அரச தலைவர் நிதியுதவி

உலகின் இரண்டாவது உயரமான சிகரமாகக் கருதப்படும் கே2 சிகரத்தைச் சென்றடைய வுள்ள கண்டி தர்மராஜ வித்தியாலய சாரணர் அணியினருக்கான அரச தலைவர் நேற்று நிதியுதவி வழங்கினார். அரச தலை வர் செயலகத்தில் வைத்து நிதியுதவி வழங்கப்பட்டது என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

பாகிஸ்தான் வடக்கு மாகா ணத்திலுள்ள உலகின் இரண்டாவது உயரமான சிகரத்தை அடைவதற்கு இலங்கை சாரணர் அணியினர் முதற்றடவையாக முன்வந்துள்ளனர். இந்தக் கடினமான சாத னைக்காக அரச தலைவரால் 10 லட்சம் ரூபா நிதியு தவி மற்றும் கே2 சிகரத்தில் ஏற்றுவதற்கான இலங்கைத் தேசிய கொடி ஆகியன வழங்கப்பட்டன. மலையேறும் 21 நாள் பயணத்துக்காக இலங்கை சாரணர் அணி நாளை செல்லவுள்ளது. நிகழ்வில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்க நாயக்க, மத்திய மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் திலினபண்டார தென்னகோன், இலங்கை சாரணர் சங்க பிரதி ஆணையாளர் ஜே.பெர் னான்டோ. கண்டி தர்மராஜ கல்லூரி அதிபர் ஜகத் கருணாரத்ன. சாரணர் அணிபொறுப்பாசிரியர் அனில் கொண்டனர்.

(ஐ -10)

# துன்னாலையை சிறப்புக் கிராமமாக அறிவிக்க கோரிக்கை

துன்னாலை, ஓக. 30

துன்னாலைப் பிரதேசத்தைச் சிறப்புக் கிராமமாக அறிவிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எஸ் சுகிர்தன் கோரிக்கை விடுத்தார். கரவெட்டி ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடந்தது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"துன்னாலைப் பகுதி சிறப்புக் கிராமமாக அறிவிக்கப்பட்டு, அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். துன்னாலைப் பிரதேசத்தின் கல்வி தொடர்பில் அதிக கவனம் செலுதடதப்பட்டு ஏனைய கிராமங்கள் போன்று இந்தக் கிராமமும் வளர்ச்சி பெறவேண்டும்" எனவும் தெரிவித்தார்.

(ஐ-26. ரி2)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 595 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 29.08.2017
வெற்றி இலக்கங்கள்
11 29 38 50 M
04 34 57 59
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்போட்
ரூ.33,071,867/-

## 9 ஆவது ஆண்டு நினைவலையும் 27 ஆவது பிறந்த நாளும்

அன்னையின் மடியில்
30 . 08 . 1990

ஆண்டவன் அடியில்
15 . 08 . 2008



### செல்வி பத்மஜா கணேசலிங்கம்

(யாழ்.வேம்படி மகளிர்கல்லூரி மாணவி)

ஆண்டுகள் ஒன்பது ஆனதம்மா எம்மகளே !
ஆண்டவன் அடி சென்றாய் விம்முகிறது எம் மனமே !
கள்ள மில்லா உன் முகத்தை காண்பதற்காய் ஏங்குகின்றோம் .
கண்மணியே ! எம் துயர் துடைக்காயோ !
மாயும் உலகினிலே நோயினால் வீழ்ந்தவளே !
கரையும் நொடியெல்லாம் உன் நினைவில் கரைந்து போகின்றோம் .
கண்ணீரில் உன் நினைவுகளால் !!

புத்தூர் கிழக்கு, புத்தூர்.
077 977 3624

ஈரவிழிகளுடன்....
குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
06 . 12 . 2000

ஆண்டவன் அடியில்
30 . 08 . 2012



### செல்வி துஷாந்தி சிறிசோமாஸ்கந்தன்

[ வேம்படி மகளிர் கல்லூரி மாணவி - 7F ]



ஆண்டைந்து ஆனாலும் ஆறுதல் கொள்ள
மனம் இல்லை
சிரித்த முகமும் கனிவான பேச்சும்
காதுகளில் ரீங்காரம் ஒலிக்கிறது.
பிரிந்து விட்டீரே எமைவிட்டு - ஆனால்
பிரியாது உங்கள் நினைவுகள்
பழகிய இடமெல்லாம் பார்க்கையில்
பதற்றம்தான் குடிகொள்கிறது
சொர்க்கத்தில் அமர்ந்து விட்டீர்
ஆனால் நம் சோகமோ ஆறவில்லை
தீராத வேதனையால் தினம் தினம்
துடிக்கும்.

அன்பான
அப்பா, அம்மா,
தம்பி, தங்கைமார்.

செ.சிறிசோமாஸ்கந்தன்
புதிய செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு.
சிறிசோமாஸ் அரைக்கும் ஆலை,
300, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 182
சீட்டிழுப்பு திகதி: 29.08.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்போட்
ரூ. 100,133,120/-
F 01 09 19 65
03 08 20 45

ராசி
திகதி 2017.08.29 வெற்றி வாரம் 2178 வர்ணம் நீலம்
மகரம்
வெற்றி இலக்கங்கள் 16 21 43 48
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4, 655, 448/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
24 56 57 58
2017.09.01 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை
சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் அருணாசலம்



தோற்றம் 15.04.1939 மறைவு 26.08.2017

சாவகச்சேரி நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சட்ட வழக்கறிஞரும், ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியினதும், பின்பு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினதும், பின்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கிய பிரமுகராகவும், 1977 ஆம் ஆண்டு முதல் லண்டனில் வாழ்ந்து வந்தவருமான நாகலிங்கம் அருணாசலம் 26.08.2017 அன்று காலமானார்.

அன்னார் சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பதிகளான வேலாயுதம் - பொன்னம்மா நாகலிங்கம் ஆகியோரின் இளையமகனும், Dr.கமலாதேவி அருணாசலம் (UK) அவர்களின் அன்புக்கணவரும் Dr.வேலாயுதகுமரன் அருணாசலம் (Basel, Switzerland) கமலக்கண்ணன் அருணாசலம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகுந்த தந்தையும், Dr. ஸொரிட்ஸா ட்ராஜிக் அருணாசலம் (Basel, Switzerland) ஸ்வேதா வேல்பிள்ளை (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், வெட்ரன், மிலான் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், இராஜபூபதி (Sydney) புனிதவதி (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற கமலாதேவி, சீத்தா தேவி (Kent,UK), Dr.இராமச்சந்திரன் (Cambridgeshire), திலகவதி (கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான தம்பையா, இராமலிங்கம், பேராசிரியர் வித்தியானந்தன் மற்றும் கெங்காதரன், திருமதி. சுகிர்தராணி இராமச்சந்திரன் (Cambridgeshire), சோதிலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், அருளம்பலம் சண்முகரட்ணம் (கொழும்பு), மகேஸ்வரிஅம்மா அருமைநாயகம் (கொழும்பு), புவனேஸ்வரி அம்மா சோமசுந்தரேசன் (கொழும்பு), காலஞ்சென்ற பராசக்தி குருசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.08.2017 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு (நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், கலந்துகொள்வதற்காக) அவரின் இல்லத்தில் இடம்பெற்று பின்னர் பிற்பகல் 1.15 மணிக்கு City of London Cemetery and Crematorium, Aldersbrook Road, Manor Park, London, E125DQ UK மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

T.P: 00442084180818

தகவல்:
குடும்பத்தினர்

பிறப்பு
08 . 01 . 1979

இறப்பு
28 . 08 . 2017



### அன்பரசி அன்னலிங்கம் (வவா)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்பரசி அன்னலிங்கம் (வவா) 28.08.2017 அன்று காலமானார்.

அன்னார் அன்னலிங்கம் - பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும் பிரபாகரன், சத்தியசீலன், தமயந்தி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகதீஸ்வரன் (கிளி), பிரியதர்சினி (றாஜி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிந்துஜா, கம்ஷாயினி ஆகியோரின் அன்பு மாமியும் பரதன், லக்ஷ்மன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2017) புதன் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் இடைநிறுத்தம்

வவுனியா, ஓக.30
நிரந்தர நியமனம் கோரி சுகாதாரத் தொண்டர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டம் நேற்றுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. வவுனியா சுகாதார அதிகாரிகள் பணிமனைக்கு முன்பாக கடந்த மே மாதம் 4 ஆம் திகதி முதல் சுகாதாரத் தொண்டர்கள் தொடர் போராட்டம் நடத்தி வந்தனர்.
நேற்றுடன் அவர்களது போராட்டம் 118ஆவது நாள்களைக் கடந்துள்ளது.
அவர்களது போராட்ட இடத்துக்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் , வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் , வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜீ.ரி.லிங்கநாதன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்றுச் சென்றனர். அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் அவர்கள் கலந்துரையாடினர்.
இன்னமும் ஒரு மாத காலத்துக்குள் உரிய தீர்வைப் பெற்றுத்தருவதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் உறுதியளித்தார்.
அதனையடுத்துப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது என்று சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர். "ஒரு மாதகாலம் அவகாசம் வழங்கப்பட்டு எமது போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகின்றது. எமக்குச் சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் எமது போராட்டத்தைப் புதிய வடிவில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்" என்று போராட்டத்தில் ஈடுபட்ட சுகாதாரத் தொண்டர்கள் மேலும் தெரிவித்தனர்.
போராட்டக்காரர்களால் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் , வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன. (ஐ-10)



## மாணவர்களின்...

யாழ்ப்பாணம், ஓக. 30
மண்டைதீவுக் கடலில் படகு கவிழ்ந்து உயிரிழந்த ஆறு மாணவர்களினதும் குருதி மாதிரிகள் பரிசோதனைக்காக இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
விபத்து நடந்தபோது மாணவர்கள் மது அருந்தியிருந்தார்களா என்பதைச் சோதிப்பதற்காகவே அவை கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று போதனா வைத்தியசாலையின் சட்ட மருத்துவ நிபுணர் உ.மயூரதன் தெரிவித்தார்.
மாணவர்களின் சடலங்கள் ஆரம்ப விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டன.
"உயிரிழந்த மாணவர்களின் சடலத்தில் மது சாரத்தின் நாற்றம் காணப்பட்டது. அதனை உறுதிப்படுத்தவே அவர்களது குருதி மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னரே அவர்கள் மது அருந்தினரா என்பதைப் பற்றிக் கூறமுடியும்" என்று மயூரதன் மேலும் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 18 வரையான மாணவர்கள் 7 பேர் தமது சகபாடிகள் இருவரின் பிறந்த தினத்தைக் கொண்டாடினர். மண்டைதீவு கடற்கரைக்குச் சென்று கடற்கரையில் கயிற்றால் கட்டியிருந்த படகை அவிழ்த்து அதில் பயணித்துள்ளனர். படகு திடீரெனக் கவிழ்ந்து 6 மாணவர்கள் உயிரிழந்தனர். ஒருவர் மட்டும் நீந்திக் கரைசேர்ந்து கரையிலிருந்தவர்களிடம் விடயத்தைக் கூறிய பின்னரே மீட்புப் பணி தொடங்கியது. மூழ்கியவர்கள் தப்பிக்க முயன்றபோதும் அவர்களால் முடியவில்லை. ஒருவர் பின் ஒருவராக 5 பேர் கடலிலேயே உயிரிழந்தனர். ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி சிறிது நேரத்திலேயே உயிரிழந்தார். (உ-4-8)

## காணாமல்...

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான உலக தினம் இன்றாகும். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டதனால் பாதிக்கப்பட்டவர்களது இன்னுமொரு பன்னாட்டுத் தினத்தை நாம் எதிர்கொள்கின்றோம். பலவந்தமாக அல்லது சுயவிருப்பத்துக்கு எதிராகக் காணாமற்போகச் செய்தலால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோர் இந்த நாட்டில் உள்ளனர்.
கடந்த பல வருடங்களாகக் காணாமற்போகச் செய்தலால் பாதிக்கப்பட்டவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைதி வழியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்துள்ளனர். தொடர்ந்தும் அத்தகைய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் கோருவதெல்லாம், தங்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மைகளைக் கண்டறியவேண்டும் என்பதே.
ஆயுதக் கலவரங்கள் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டபோதும் காணாமற்போகச் செய்யப்பட்டவர்களுடைய பிரச்சினைகள் இதுவரை திருப்திகரமான வகையில் கவனம் செலுத்தப்படாத நிலையே இருந்து வருகின்றது.
இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களும் பல வருடங்களாகத் தமது அன்பானவர்கள் பற்றிய உண்மை நிலையை அறியமுடியாதவர்களாகவும் நீதி மறுக்கப்பட்டவர்களாகவும் தொடர்ந்தும் இருந்துவரும் நிலமை கவலை தருவதாக உள்ளமை கவனிக்கத்தக்கது.
இந்த விடயம் தொடர்பாக தனது உயர்ந்தபட்ச கவனத்தைச் செலுத்துமாறு நாம் அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.
குற்றம் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்திப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் அரசைக் கேட்டுக்கொள்வதோடு, இந்த நாட்டில் எதிர்காலத்திலும் இத்தகைய பலவந்தமாகக் காணாமற்போகச் செய்தல் இடம்பெறாது நிறுத்தப்படுவதையும் உறுதிசெய்யுமாறும் கோருகின்றோம் என்றுள்ளது. (உ-5)

## பன்னாட்டுச்...

காவே மும்முரமாகச் செயற்பட்டது. தீர்மானத்தையும் அதுவே கொண்டு வந்தது. இலங்கை அரசையும் அந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கச் செய்து அதனை நிறைவேற்றியது.
பாதிக்கப்பட்ட எங்கள் மக்களுக்கு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பன்னாட்டுச் சமூகத்தின் மூலம் நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். எமது எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அதற்காக நாம் தளர்ந்து போய்விடவும் இல்லை.
இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்ற நம்பிக்கையுடனேயே செயற்படுகின்றோம். ஆனால், இதுவரையில் நாம் எதிர்பார்த்த கருமங்கள் நடைபெறவில்லை. பன்னாட்டுச் சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து அதனைச் செய்விக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.
தமிழ் மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்துதான் கூட்டு அரசு ஆட்சியமைத்தது. வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. காணி விடுவிப்பில் கொஞ்சம் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால், பெருமளவு காணிகள் இன்னமும் இராணுவ ஆக்கிரமிப்பிலேயே உள்ளன.
தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் சிறைக்குள் வாடுகின்றனர். அவர்களின் விடுதலை கேள்விக்குறியாகவே உள்ளது.
காணாமல்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.
பன்னாட்டுச் சமூகம் இந்த விடயங்களிலும் கூடுதல் அழுத்தம் கொடுக்கவேண்டும்.
புதிய அரசமைப்பு உருவாக்க விடயம், ஆரம்பத்தில் வேகமாக இடம்பெற்றாலும் இப்போது மந்தமாகிவிட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை கடந்த வாரம் சந்தித்தபோதுகூட இதனைப்பற்றி கூறியிருந்தேன். புதிய அரசமைப்பு ஊடாக நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினேன் - என்றார். (உ-5)

## வடமராட்சி....

யானை அந்தப் பகுதியைவிட்டு அகன்றிருக்கலாம் என்று மருதங்கேணி பிரதேச செயலக வட்டாரத்தினர் தெரிவித்தனர். இயக்கச்சி மாசார் வெளிப் பகுதியில் அந்த யானை நேற்று அதிகாலை நடமாடியமை அவதானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.
வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு திடீரென புகுந்த யானையால் மக்கள் அச்சமடைந்தனர். யானையை விரட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் தோல்வியடைந்தன. மருதங்கேணிச் சந்தியிலிருந்து உடுத்துறைநோக்கிச் செல்லும் வீதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை நடமாடிய யானை, அந்தப் பகுதியைச் சேர்ந்த மூவர் மீது தாக்குதல் நடத்தியது. இதில் ஒருவர் உயிரிழந்திருந்தார். ஏனையோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்னர்.
வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலையிலிருந்து பிரதேசத்தின் எந்தவொரு பகுதியிலும் யானையின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. யானை அதிகமாக உலாவித் திரிந்த மருதங்கேணிச் சந்தியிலிருந்து உடுத்துறை நோக்கிய வீதியிலும் நேற்றைய தினம் அதனை அவதானிக்க முடியவில்லை என்று மக்கள் தெரிவித்தனர் .
இதேவேளை, யானை வந்த பாதையின் ஊடாகவே திரும்பிச் சென்றிருக்கலாம் என்று பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். இயக்கச்சி மாசார் வெளிப் பகுதியில் நேற்று அதிகாலை யானை ஒன்று சென்றமை அவதானித்து உறுதிப்படுத்தப்பட்டதாகப் பிரதேச செயலக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (உ-5,26)

## கடும்...

என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்தத் திருத்தத்தை ஏற்கனவே இரு மாகாண சபைகள் நிராகரித்துவிட்டன. வடமத்திய மாகாண சபை மட்டுமே இதுவரை ஆதரவு வழங்கியிருக்கிறது.
வடக்கு மாகாணமும் அதனை எதிர்க்கப் போவதாக ஏற்கனவே அறிவித்திருக்கிறது. எதிர்வரும் 4ஆம் வடமாகாண சபையில் இது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. கிழக்கில் 7ஆம் திகதி வாக்கெடுப்பு நடக்கவுள்ளது.
எதிர்ப்பு வலுப்பதை அடுத்து கடந்த சனிக்கிழமை மாகாண சபைகளின் முதலமைச்சர்களைச் சந்தித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பேசினார். அவரது சுதந்திரக் கட்சியின் வசமே அதிகளவான மாகாண சபைகள் உள்ளன. எனினும் அரச தலைவரின் சந்திப்புக்குப் பின்னரும் மாகாண சபைகளில் இந்தத் திருத்தம் நிராகரிக்கப்பட்டுள்ளது.
இதனை அடுத்தே வரைவில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசு முனைந்துள்ளது என்று தெரிகிறது. (உ-5)

## மலேரியா...

ளனர்.
"மன்னாரில் மலேரியா நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் 75 ஆயிரம் பேர் வரையில் நேரடியாகப் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை காணப்படுகிறது. மன்னார் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளிலேயே மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகள் அதிகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை இந்தியாவில் இருந்து இழுவை மடி படகுகள் மூலம் இலங்கைக்குள் நுழைந்திருக்கலாம் என நாங்கள் சந்தேகிக்கின்றோம்" இவ்வாறு மலேரியா நோய் தடுப்பு பிரிவின் மன்னார் மாவட்ட பிராந்திய மருத்துவ அதிகாரி மருத்துவர் கே.அரவிந்தன் தெரிவித்தார்.
மன்னார் மாவட்டத்தில் அண்மையில் மலேரியா நோயை பரப்பும் 'அனாஅக் பிலிஸ் ஸ்டீபென்சி' என்ற புதிய வகை காவி நுளம்பு அடையாளம் காணப்பட்டது. குறிப்பாகத் தலைமன்னார், பேசாலை, முருங்கன், உதயபுரம், எழுத்தூர், சிறுத்தோப்பு, வங்காலைப்பாடு, மற்றும் நடுக்குடா போன்ற கிராமங்களில் இந்த நுளம்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அங்கு பயன்படுத்தப்பட்ட மற்றும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்ற கிணறுகள் மற்றும் நீர் தொட்டிகள் போன்றவற்றில் இருந்து நுளம்புகள் கண்டு பிடிக்கப்பட்டன.
மலேரியா தடை இயக்கமானது குறித்த பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு தொடர்ச்சியாக விழிர்ப்புணர்வு வழங்கி வருகிறது. அத்தோடு அடையாளம் காணப்பட்ட கிணறுகளில் மலேரியாக் குடம்பிகளை அழிக்கும் வகையில் கிணறுகளினுள் மீன்களையும், இரசாயன பதார்த்தங்களையும் இட்டு கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.
மலேரியா நுளம்பின் பெருக்கம் அதிகரிக்கும் என்ற அச்சம் எம் மத்தியில் காணப்படுகின்றது. எனவே மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாக உள்ளது. மலேரியா நுளம்பின் தாக்கத்தினால் சுமார் 75 ஆயிரம் பேர் வரை நேரடியாக பாதிப்புக்கு உள்ளாகுவதோடு, இலங்கையில் உள்ள மக்கள் அனைவருமே மறைமுகமாக மலேரியா தாக்கத்துக்கு உள்ளாகக்கூடிய சந்தர்ப்பம் மிக மிக அதிகமாக உள்ளது என்றார்.
இலங்கை மலேரியா நோயிலிருந்து விடுபட்ட நாடு என்று உலக சுகாதார நிறுவனம் 2016ஆம் ஆண்டு அறிவித்திருந்தது.
இந்தியாவிலிருந்து வரும் இழுவை மடி மீன்பிடிப் படகுகள், கேரளக் கஞ்சா என்பவற்றைத் தொடர்ந்து இப்போது மலேரியா நுளம்புகளும் வந்து அச்சுறுத்தத் தொடங்கியுள்ளன. (உ-21,56)



# அல்லாரை தமிழ் வித்திக்கு ரூ. 55 மில்லியனில் கட்டடம்

தென்மராட்சி, ஓக. 28
தென்மராட்சி கல்விவலயத்தின் அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் 5 மில்லியன் ரூபா செலவில் வகுப்பறைத் தொகுதிகளைக்கொண்ட இருமாடிக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல்நடும்நிகழ்வுகடந்தவெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 70 X 25 பரப்பளவில் நிர்மாணிக்கப்பட வுள்ள இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி சி. சிவநாதன் நட்டார். (யு-21)

## நல்ல அம்மா

யாழ்ப்பாணம், ஓக. 30
"நல்ல அம்மா" சிவசிந்தனை இன்று பி.ப 4.30 மணிக்கு செல்வச்சந்நிதி ஆலய செல்லையா ஐயர் திருமண கலாசார மண்டபத்தில் இடம்பெறும் காந்தளகம் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தலைமையில் நிகழ்வு நடைபெற வுள்ளது என த. நமசிவாயம் தெரிவித்துள்ளார். (4)

# யாழ். வர்த்தக கட்டடத்தொகுதியை 5 மாடிக்கு மேல் அமைக்கக்கூடாது

## மாவட்டச்செயலகத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக. 30
யாழ். நகரில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் அமைக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த வர்த்தக கட்டடத் தொகுதியானது 5 அடுக்குமாடிகளை விஞ்சி அமைக்கக் கூடாது என நேற்றைய தினம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.
மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் மற்றும் முதலமைச்சர் தலைமையில் சகல தரப்பினரின் பிரசன்னத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.
குறித்த கலந்துரையாடலில், யாழ். நகரில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் அமைக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த வர்த்தகக் கட்டடத் தொகுதியானது 5 அடுக்கு மாடிகளை விஞ்சி அமைக்கக் கூடாது.
ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆயிரம் மில்லியன் ரூபாவில் அமையும் குறித்த திட்டத்தை யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில் அமைப்பதற்கு அனைவரின் ஒப்புதலும் வழங்கப்பட்டது.
இதேநேரம், இந்தக்கட்டடத்தில் அமையும் வர்த்தக நிலையங்களுக்காக 10 X 10 அடி இட ஒதுக்கீடானது போதுமானதாக இல்லை. எனவே 12X 10 அடியாக அதிகரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டது.
குறித்த திட்டத்தை விரைவாக இந்த ஆண்டிலேயே ஆரம்பிக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. திட்டத்துக்கான முழுப்பொறுப்பாக யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரே இருப்பார்.
இதனால் குறித்த திட்டத்துக்கான நிதி விடுவிப்புத் தொடர்பில் கொழும்பு நிதி அமைச்சு மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விரைவில் நிதியைப் பெற்றுக்கொள்ள ஆவனசெய்ய வேண்டும் எனத் தீர்மானித்தனர். (யு-101)

## தென்மராட்சியில் கலந்துரையாடல்

தென்மராட்சி, ஓக. 30
தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நாளை முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
இந்தக் கலந்துரையாடலில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொண்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச திணைக்கள பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் திருமதி தே. பாபு அறிவித்துள்ளார். (4-9)

## மண்கும்பானில் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 30
மண்கும்பான் ஸ்ரீமுருகமூர்த்தி கோவில் வருடாந்தத் திருவிழா இன்று மு.ப 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 6ஆம் திகதி 6.30 மணிக்குத் சப்பைரதத் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 8 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இரவு 8 மணிக்கு கொடியிறக்கத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (4)

## கொள்ளையர்களுடன் மல்லுக்கட்டிய போதும்

# வயோதிபப் பெண்ணின் ஒன்றரைப் பவுண் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 30
தங்கச்சங்கிலியைக்காப்பாற்றுவதற்காகக்கொள்ளையர்களுடன்மல்லுக் கட்டிய வயோதிபப் பெண் நிலை தடுமாறிவீழ்ந்ததில்காயமடைந்துயாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் கொக்குவில் கேணியடிப் பகுதியில் இடம்பெற்றது. கொக்குவில்வராஹிஅம்மன்கோவிலடியைச் சேர்ந்த மாடசாமி கோமளாதேவி (வயது -59) என்ற வயோதிபப் பெண்ணேஇவ்வாறுகாயமடைந்தார்.
கொக்குவில் கேணியடிப் பகுதியில் நடந்து சென்ற கோமளாதேவியை மோட்டார்சைக்கிளில்பின்தொடர்ந்த இருவர்அவரிடம்முகவரிவிசாரிப்பது போல் பாசாங்கு செய்துள்ளனர். அதன்பின்னர்அவர்கழுத்தில்இருந்த ஒன்றரைப்பவுண்தங்கச்சங்கிலியை அறுப்பதற்கு முயற்சித்துள்ளனர். அந்தச்சங்கிலியைக்காப்பாற்றுவதற்காக கோமளாதேவி கொள்ளையர்களுடன் மல்லுக்கட்டியுள்ளார். இதன் போதே அவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும்சங்கிலி கொள்ளையர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப் பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (21.8.ரி1)

ஊடகவியல் அறிமுகம்
(அச்சு / இலத்திரனியல்)
சான்றிதழ் பயிற்சி நெறி

ஊடகத் துறையில்
ஆர்வம் உடையோருக்கு
வாய்ப்பு

- 10 நாள் பயிற்சிகள்.
- ஒரு பிரிவில் ஆகக் கூடியது 20 பேர் மட்டுமே.
- இருபாலாருக்குமானது
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ்.
- கட்டணம் இல்லை.
- பயிற்சிகள் உதயன் பணிமனையில் நடைபெறும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:
31.08.2017

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்
'ஊடகப் பயிற்சி நெறி' எனக் குறிப்பிட்டு
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்புங்கள்

விண்ணப்பப் படிவம்

# அந்தியேட்டிக்கு சென்றவர்களை குளவிகள் தாக்கின

தென்மராட்சி, ஓக. 30

அந்தியேட்டி நிகழ்வில் கலந்து கொள்ள வந்தவர்களை கூட்டிலிருந்து கலைந்த கருங்குளவிகள் தாக்கியுள்ளன. தாக்குதலுக்கு இலக்கான பெண் உட்பட இருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் கொடிகாமம் நகரப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

அங்கு உறவினரின் அந்தியேட்டிக் கிரியைக்காக ஒழுங்கையில் நடந்து சென்றபோது மின்கம்பத்தில் கட்டியிருந்த கூட்டிலிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் தாக்கின என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பொலிகண்டியைச் சேர்ந்த மயில்வாகனம் ஆறுமுகம் (வயது-74 ), கொடிகாமம் பருத்தித்துறை சாலையைச் சேர்ந்த குணச்செல்வம் றோசம்மா (வயது-53) ஆகியோரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (4-9)

# செல்வச்சந்நிதி தல யாத்திரை திருமலையில் ஆரம்பம்;

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு 6ஆவது வருடமாக தல யாத்திரை திருகோணமலையில் இருந்து ஆரம்பி க்கப்பட்டுள்ளதாக யாத்திரிகர்கள் தெரிவித்தனர்.

கடந்த 14ஆம் திகதி திங்கட்கிழமை திருகோணமலை மூதூர் வெருகல் பிரதேசத்தில் வேல்சாமி தலைமையில் இந்தப் பாத யாத்திரை ஆரம்பித்தது. இறை வழிபாட்டுடன் வருகை தந்துள்ள யாத்திரிகர்களின் பயணம் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்தில் நிறைவடையும் என்று மேலும் தெரிவித்துள்ளனர். (ரி)

மீனவர்களின் தேவை கருதி

# யாழ்ப்பாணத்தில் பல இறங்கு துறைகளில் எரிபொருள் நிரப்பு நிலயங்கள் அமைப்பு

## உடன் நடவடிக்கை என கடற்றொழில் அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், ஓக.30

மீனவர்களுக்கான படகுகளை நிறுத்துவதற்கான இறங்குதுறைகள் அமைக்கப்படுவதோடு, மீனவர்கள் தமது படகுகளின் இயந்திரங்களுக்கான எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஒவ்வொரு இறங்குதுறைகளிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களும் அமைக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர வடக்கு மாகாண ஆளுநரிடம் உறுதியளித்தார் என ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது.



இதற்கமைய யாழ்ப்பாணத்தில் மண்டைதீவு, மூளாய், மாதகல், புங்குடுதீவு, தெல்லிப்பழை, ஆனைக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது.

வடக்கு மாகாணக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேற்று மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீரவை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அமைச்சர் இவ்வாறு உறுதியளித்தார் என ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சங்கங்கள், கடற்றொழிலாளர் சமாசம் ஆகியன தொடர்ச்சியாக ஆளுநரிடம் விடுத்த கோரிக்கைகள் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. கலந்துரையாடலின் முடிவில் பல விடயங்களுக்கு உடனடித் தீர்வைக் காண்பதற்கு மீன்பிடித்துறை அமைச்சர் இணக்கம் தெரிவித்தார்.

இதன் போது எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அமைப்பதற்கு முன்பதாக உடனடியாக அமுலுக்குவரும் வகையில் எரிபொருட்களை பவுசர்கள் மூலம் வழங்க நடமாடும் எரிபொருள் நிலையத்தினை ஏற்படுத்துமாறு ஆளுநர் றெஜினோல்ட் குரே வேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்றுக் கொண்ட கடற்றொழில் அமைச்சர் அதனை ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார். அண்மையில் உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மயிலிட்டித் துறையை மீனவர்களின் 200 படகுகள் நிறுத்தி வைக்கக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்யவுள்ளதாகவும் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். எதிர்காலத்திலும் வட பகுதி மீனவர்களின் மேலதிக தேவைகள் தொடர்பில் தெரிவிக்குமாறு அமைச்சர் ஆளுநரைக் கேட்டுக்கொண்டார். சட்டவிரோதமான முறையில் தடைசெய்யப்பட்ட பொருள்களைப்பாவித்துமீன்பிடியில் ஈடுபடுவதை தடை செய்வதற்காக கடற்படைத்தளபதியுடன் தொலைபேசியில் உரையாடிய அமைச்சர் செயற்றிட்டத்தை உரிய முறையில் உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும் பணிப்புரை விடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (21,101)

டெங்கு ஒழிப்பு தீவிரம்:

# பாத்திரங்களில் தண்ணீர் வைத்திருந்தோர் மீது வழக்கு

தென்மராட்சி, ஓக.30

டெங்குநுளம்புஉற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் பாத்திரங்களில்தண்ணீர்வைத்திருந்த குடியிருப்பாளர்கள் 12 பேருக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

டெங்குக் கட்டுப்பாடு தொடர்பாக நாடளாவிய ரீதியில் நேற்றுத் தொடக்கம் மூன்று தினங்கள் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சுகாதாரத் திணைக்களத்தினரால் ஆரம்பிக்கப்பட்டன. சாவகச்சேரி சுகாதார திணைக் களத்தினரால் கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில்நேற்று நடத்திய பரிசோதனைகளின் போது கால்நடைகள் மற்றும் பறவைகளுக்குவைக்கப்பட்டிருந்த நீர்ப் பாத்திரங்களில் டெங்கை உருவாக்கும் லாவா எனும் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டன. இதனைவைத்திருந்த குடியிருப்பாளர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குகள் பதிவு செய்தனர். சாவகச்சேரி சுகாதாரமருத்துவஅதிகாரிமருத்துவர்க.தயாளன் தலைமையில் நடைபெற்ற டெங்கு கட்டுப்பாட்டுப்பரிசோதனையில், கொடிகாமம் பிரதேசபொதுசுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன்றொனால்ட் தலைமையில் சோதனைகள் இடம்பெற்றன.

மூன்று நாள்கள் டெங்குப் பரிசோதனைத் திட்டத்தில் நேற்று மீசாலை கிழக்கு, மீசாலைமேற்கு, மண்டுவில் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் சோதனை இடம்பெற்றது.

நாளை சாவகச்சேரி நகரம், கோயிற்குடியிருப்பு, சங்கத்தானை ஆகிய பிரிவுகளிலும் டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள்இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது

நேற்றைய பரிசோதனையில் ஆயிரத்து 79 இடங்களில் தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டு 89 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது. (21,9)

# முனீஸ்வரன் வீதியை சீரமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ்ப்பாணம் நகரில் உள்ள முனீஸ்வ ரன் வீதியைச் சீரமைப்புச் செய்வதற்கு மாநகராட்சி மன்றம் நட வடிக்கை மேற்கொண்டுள்ளது.

வீதியின்புனரமைப்புப்பணிகள்விரைவாக ஆரம்பிக்கப்படும் என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரி வித்தார்.

போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு சேதப்பட்டிருக்கும் இந்த வீதி தற்போது தார் ஊற்றி சீரமைக்கப்படும்.

அத்துடன் வீதியில் உள்ள வடிகால்களை சீரமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வீதியில் உள்ள மாநகரக் காணியில் சேகரிக்கப்படும் திண்மக்கழி வுகள் யாவும் வேறு இடத்துக்கு அப்புறப்படுத்தப் பட்டும் வருகின்றன. (ய-17)

# வான் மோதி இளைஞர் காயம்

யாழ்ப்பாணம் ஓக. 30

மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞரை வான் மோதித்தள்ளியதில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவத்தில் உதயகுமார் கீர்த்தி (வயது24)என்பவரேகாயமடைந்தவராவார். யாழ்ப்பாணம், மனோகராச் சந்திக்கு அண்மையில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது அந்த வழியே வந்த வான் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக கூறப்படுகின்றது. (21-8-ரி1)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 60 | 60 |
| கத்தரி | 120 | 140 | 120 | 140 | 140 |
| மரவள்ளி | 80 | 80 | 70 | 60 | 80 |
| பயிற்றை | 50 | 40 | 60 | 30 | 40 |
| பாகல் | 200 | 160 | 280 | 160 | 160 |
| க.கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 90 |
| பெ.வெங்காயம் | 130 | 140 | 130 | 130 | 120 |
| சி.வெங்காயம் | 160 | 180 | 160 | 180 | 140 |
| பூசணி | 60 | 40 | 60 | 50 | 50 |
| தக்காளி | 150 | 140 | 200 | 160 | 140 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 100 |
| கீரை | 25 | 30 | 40 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 20 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 300 | 250 | 350 | 300 | 320 |
| புடோல் | 80 | 80 | 80 | 80 | 80 |
| கோவா | 100 | 80 | 120 | 80 | 80 |
| வெண்டி | 80 | 60 | 50 | 80 | 40 |
| போஞ்சி | 120 | 180 | 200 | 160 | 170 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 80 | 100 |
| தேங்காய் | 60 | 70 | 70 | 80 | 80 |
| உ.கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 60 | 120 | 140 | 100 | 120 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 120 | 120 | 160 | 120 | 120 |
| கரட் | 100 | 160 | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 40 | 100 | 80 | 100 | 80 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1200 | 1000 |
| நண்டு | 300 | 400 | 600 | 300 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 700 |
| சுறா | 600 | 700 | 1000 | 800 |
| சீலா | 400 | 400 | 600 | 500 |
| விளை | 600 | 400 | 450 | 500 |
| முரல் | 400 | 350 | 400 | 500 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 500 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 300 | 450 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 300 | 300 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 400 | 100 |
| மதனம் | 200 | 150 | 250 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 180 | 200 | 500 | – |
| வாளை | 180 | 200 | 400 | 300 |

இது புதுசு



பெண்களுக்கான பாதணிகள் நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை பல வர்ணங்களிலும், வடிவங்களிலும் உள்ளன. இவற்றை 990 ரூபாவில் இருந்து கொள்வனவு செய்ய முடிகிறது.

# இரு வைத்தியசாலைகளுக்கு விரைவில் நிர்வாக அலுவலர்கள்

யாழ்;ப்பாணம், ஓக.30
வடக்கு மாகாணத்தில் உள்ள இரு மருத்துவமனைகளுக்கு நிர்வாக மருத்துவ அலுவலர்கள் (மருத்துவ அத்தியட்சர்கள்) விரைவில் நியமிக்கப்பட வுள்ளனர் என எதிர்பார்க்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனை, சாவகச்சேரி, செட்டிகுளம், ஊர்காவற்றுறை ஆகிய ஆதார மருத்துவமனைகள் ஆகியவற்றில் நி;ர்வாக மருத்துவ அலுவலர்கள் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. இவற்றில்தற்போதுபதி;ல் நிர்வாக மருத்துவ அலுவலர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

கொழும்பு சுகாதார அமைச்சினால் நடத்தப்பட்ட மருத்துவ நிர்வாகப் பட்டக் கல்விநெறியில் இரு தமிழ் மருத்துவ அலுவலர்களே பங்குபற்றியிருந்தனர்.

இந்தப் பயிற்சிநெறி இம்மாத இறுதியில் நிறைவடையவுள்ளதால் இந்த இருவரும் நிர்வாக மருத்துவ அலுவலர் பதவி வெற்றிடமாகக் காணப்படும் இடங்களுக்கு நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இருவரும் முல்லைத்தீவு மாவட்டபொதுமருத்துவமனைசாவகச்சேரிஆதாரமருத்துவமனைஆகியவற்றுக்கு நியமிக்கப்படலாமென வும் எதிர்பார்க்கப்படுகிறது. (ய-9)

# வட்டக்கச்சிவிவசாயப்பயிற்சிநிலைய காணிஇராணுவத்தினரால்அபகரிப்பு

## வடக்கு மாகாண அமைச்சு தகவல்

யாழ்ப்பாணம், ஓக.30
வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் வட்டக்கட்சி விவசாய பயிற்சி நிலையத்தின் நூற்றுக்கணக்கான ஏக்கர் காணியினை இராணுவம் அபகரித்துள்ளது.

இதனால்அங்குபயிற்சிநிலையத்தைகொண்டுநடத்தமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்குமாகாணத்தில்மாகாண விவசாயஅமைச்சுமற்றும்அதன்கீழ் வருகின்ற சில திணைக்களங்கள் போன்றவற்றின் காணிகள் இராணுவத்தினரின்கட்டுப்பாட்டிலேயேதற்போதும்காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அதில் வட்டக்கச்சி விவசாய பயிற்சி நிலையத்தின் பெரும்பாலான பகுதியை இராணுவம் தற்போதும் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

வட்டக்கச்சிவிவசாயபயிற்சிநிலையத்துக்குரிய பாதுகாப்பு 410ஏக்கர் காணி பாதுகாப்புத் தரப்பிடம் இருக்கின்றது. அதில் 7 ஏக்கர் காணி இராணுவத்திடமும், 103 ஏக்கர் மேட்டுநிலக் காணி, 300 ஏக்கர் நெற்செய்கைக் கணியுமாக மொத்தமாக 403 ஏக்கர் காணி சிவில் பாதுகாப்பு பிரிவினரிடம் காணப்படுகின்றது.

வடக்கு மாகாண விவசாய திணைக்களத்திடம் வெறுமனே 31ஏக்கர் காணிமட்டுமே உள்ளது. அதில் விவசாயப்பயிற்சிநிலையம் இயங்கி வருகின்றது. இதில் 25ஏக்கர் மேட்டுக்காணியும், 6ஏக்கர்நெற்காணியும் அடங்குகின்றது.

இந்தநிலத்திணை மீட்பதற்காக வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

எனினும் அதற்கான பலன் கிடைக்கவில்லை. பல தரப்பினரும் அழுத்தங்களைப் பிரயோகித்த போதிலும் அபகரித்த காணியை விடுவிக்க பாதுக்காப்பு தரப்பு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த அபகரிப்பால் வட்டக்கச்சி விவசாய பயிற்சி நிலையத்தை வினைத்திறனாக இயங்க வைக்க முடியவில்லை எனக் கூறப்படுகின்றது. இதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரப்படுகிறது. (ய-8)

# போரால்பாதிக்கப்பட்ட மக்களின் உளநலத் தாக்கங்களுக்கு தகுந்த சிகிச்சைகள் அவசியம்

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஓக.29
நீண்டகாலப்போரின் காரணமாக எம்மவர்களில் பலர் சோகச் சுமைகளைச் சுமந்த வண்ணம் நடைப்பிணங்களாக உலாவி வருகின்றனர்.



இவர்களில்பலருக்கு உளவியல் தாக்கங்கள்இருப்பதுகண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவற்றைக் குறைப்பதற்கானஅல்லதுகுணப்படுத்துவதற்கான உளவியல் மருத்துவம் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுவது அவசியம் என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட பொதுமருத்துவமனையின் உளநல சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டடம் மற்றும்மருத்துவநிபுணர்களின் விடுதி ஆகியவை நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொதுவாக உளநலப்பிரச்சினைகளால் பாதிக்கப்படுபவர்கள் உடனடியாகவே அந்தப் பாதிப்புகள் பற்றி உணர்ந்து கொள்வதில்லை. அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் கூட இந்தத் தாக்கங்கள் பற்றி உடனடியாகத் தெரிந்து கொள்வது சிரமம்.

இவர்களின்நோய்த்தாக்கம்அதிகரிக்கின்ற போதுதான் அவர்களின் செயற்பாடுகள், ஒன்றுடன் ஒன்று தொடர்புபடாத உரையாடல்கள், அளவுக்கதிகமானவிளக்கங்கள் எனப் பலவும் அடையாளம் காணப்படுகின்றன.

சிலகாலங்களுக்குமுன்னர்உளவியல்ரீதியாக பாதிப்படைந்தவர்கள்சமூகத்திலிருந்துவிலக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். இன்று நிலைமைகள் வெகுவாக முன்னேறி விட்டன.

உளநல சிகிச்சை தொடர்பாக மருத்துவமனைகளின் பணிகளுக்கு மேலதிகமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொது அமைப்புகள் ஆகியன இவர்களை அடையாளம் காண்பதற்கும் இவர்களுக்கான உளநலஆலோசனைகளைவழங்குவதற்கும் முன்வந்துள்ளன.

இருப்பினும் உளநல பாதிப்புற்றவர்கள் தொடர்பான சேவைகள் இன்னும் விரிவாக்கம் பெற்று மேலைத்தேயநாடுகளில்உள்ள அமைப்புகள் போன்று ஒவ்வொரு நோயாளியும் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கான முழு மருத்துவக் கவனிப்பும் ஆலோசனைகளும் அரச மட்டத்திலேயே மேற்கொள்ளப்படக்கூடியஒருநிகழ்ச்சி வரையறைக்குள் வரவேண்டும்.

உளநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்கள் சிறப்பு கவனிப்புகளுடன் சமூகத்தில் இணைக்கப்படாவிடின்அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு விடுவார்கள்.

அவர்களின்தனிமையேஅவர்களைக் காலனை நோக்கிப் பயணிக்கச் செய்கின்றன. பாடசாலை, பல்கலைக்கழக மற்றும் மருத்துவபீடமாணவர்கள்எனப் பலர் அண்மைக்காலங்களில் தற்கொலைமுயற்சிகளில்ஈடுபட்டதை நாம் அறிவோம். அதிர்ச்சி, பயம், பீதி, குற்ற உணர்ச்சி எனப் பல காரணங்கள் ஒருவரைத் தற்கொலைக்குத் தயார் செய்து விடுகின்றன.

இன்று இளையோர்மத்தியில் காணப்படுகின்ற வன்முறைகள், பாலியல் வன்முறைகள், சமூக வன்முறை ஆகியனவும் குடும்பவன்முறைகளும், உளவியல் தாக்கங்களின் இன்னோர் வடிவம் என்றே கொள்ளப்பட வேண்டியுள்ளன.

அண்மையில் மேல்நீதிமன்ற நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை தொடர்பாக கொலையாளி என சந்தேகப்பட்டவரின் வாக்குமூலத்தில் தனது மைத்துனர் தன்னைச் 'சுடுபார்ப்போம்' என்றார். 'சுட்டுவிட்டேன்'எனத்தெரிவித்திருக்கின்றார்.

இதுவும் ஏதோ ஒருவித தாக்கத்தின் பிரதிபலிப்போ என்று எண்ண வேண்டியுள்ளது. ஆனால் இது அவருக்கு யாரோ ஒருவர் சொல்லிக் கொடுத்துக் கூறியகூற்றாகவும்இருந்திருக்கலாம்.

அவ்வாறு கூறினால் உளநல பாதிப்புஏற்பட்டுள்ளதுஎன்றுகூறி வழக்கைத் திசைதிருப்ப முடியும் என்றும் எண்ணியிருக்கலாம்.

எது எவ்வாறு இருப்பினும் எம் மக்களிடையே ஏற்பட்டுள்ள மனத்தாக்கங்களுக்கான தீர்வுகள் வெறுமனே சுகாதாரத் திணைக்களத்தால் மட்டும் தீர்த்துவிட முடியாதவை. பொதுமக்கள்பங்களிப்பு, சமூக ஆர்வலர்களின் ஒத்துழைப்பு, அரசியல் பின்புலம் ஆகிய கூட்டு முயற்சிகளுடன்உரியசெயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது இன்றியமையாதது என்றார். (ய-105-6)

# ஆசிய வங்கியின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் சாலை அபிவிருத்தித் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 30
யாழ்ப்பாணத்தில் ஆசிய அபிவிருத்திவங்கியின்நிதிப்பங்களிப்புடன் ஐ திட்டத்தின் ஆரம்ப வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருவதாக சாலை அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பணத்தில் பல சாலைகள் 'ஐ' திட்டத்தினை காரணம் காட்டி நீண்டகாலமாகதிருத்தப்படாதநிலைமை காணப்படுவதாக மக்கள் குற்றம்சாட்டி வருவது தொடர்பில் வினவியபோதேஅவர்கள்இதனை தெரிவித்தனர்.

ஆசியஅபிவிருத்திவங்கியின்நிதியுதவியுடன் சாலை அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்படும்என ஒப்பந்தம்செய்யப்பட்ட (ஐ) திட்டம்என அமைக்கப்படும்சாலை அபிவிருத்தித்திட்டம்இதுவரைமுன்னகரவில்லயென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் 17 உள்ளூராட்சிசபைகளுக்கு உட்பட்ட198சாலைகள் இந்தவருடம் ஓகஸ்ட் மாதம் சீரமைப்புச் செய்யப்படும் எனக் கூறப்பட்டது.

சபைக்குட்பட்ட சாலைகள் ஜி.பிஎஸ் அளவுமூலம் அறவீடு செய்யப்பட்டு வீடியோபடம்எடுக்கப்பட்டுமதிப்பீடு மற்றும்வரைபடம்என்பனதயாரிக்கப்பட்டன.

ஆனால்சாலை அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டப்பிரிவு மேற்படி சீரமைப்புக் குறித்து எவ்வித அறிவிப்பையும் இதுவரை வெளியிடவில்லை.

இதனால் மேற்படி வீதிகள் யாவும் சாலை அபிவிருத்தி அதிகார சபையினால்காப்பற்சாலைகளாக சீரமைக்கப்படுமா?அல்லது கைவிடப்படுமா என்பது பற்றி சம்பந்தப்பட்டோர் அறிக்கை விடவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இது தொடர்பில் சாலை அபிவிருத்தி அதிகார சபையினரை தொடர்பு கொண்டு கேட்டபோது,

ஆசிய அபிவிருத்திவங்கியின்நிதியுதவியுடன் ஐ திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த திட்டத்தின் ஆரம்ப கட்ட வேலைத்திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. மேலும் இது மிகப்பெரிய திட்டமாக இருப்பதால் படிப்படியாக அனைத்து விடயங்களும் இடம்பெறும் என்றனர். (ய-8-50)

ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம்
தெல்லிப்பழை

இன்று (30.08.2017)
புதன்கிழமை

8 ஆம் நாள்
திருவிழா



கருணை புரியம்மா

கருணை புரிவாய் என்தாயே!
காரணி யேபரி பூரணியே
தருண மிதிலுன் தாள்பணிந்தேன்
தைய லுமையவள் சோதரியே

பெருந் தேனமுதே பெருமாட்டி
பேசா மறையின் உட்பொருளே
வருவாய் வருவாய் நீயம்மா
வந்தே அருளைத் தாருமம்மா

அனுசரணை: இந்து இளைஞர் சங்கம்
தெல்லிப்பழை.

# முல்லைத்தீவு தொடர்பான நான்கு கேள்விகளுக்கு மைத்திரி பதில் தரவேண்டும்

## சாள்ஸ் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் திணைக்களங்களினால் பதிலளிக்க முடியாதுபோன நான்கு விடயங்களை இந்த நாட்டின் அரசதலைவரிடம் மக்களின் சார்பில் முன்வைக்கின்றேன். இதற்கு அவராவது பதிலளிக்க வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

முல்லைத்தீவு கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் அரசதலைவர் நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்ததாவது:

இந்த மாவட்ட மக்களுக்கு கடந்த பல ஆண்டுகளாக இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்பில் பலரும் சுட்டிக்காட்டி வருகின்றோம். ஆனால் அதற்கு எவருமே இன்றுவரையில் பதிலளித்தது கிடையாது. குறிப்பாக உரியதிணைக்களங்களைக் கேட்டால் தெரியாது கவலைக்குரிய விடயம். மாவட்ட செயலருக்கும் தெரியாது என்பதே.

அதனாலே இந்த நாட்டின் தலைவரிடம் மக்கள் பிரதிநிதி என்ற வகையிலே முன்வைக்கின்றேன். தற்போது இடம்பெறும் பிரதேசமட்ட நடமாடும் சேவை நிறைவு பெற்றதும் மாவட்ட மட்டத்திலான சேவையும் விரைவில் இடம்பெறவுள்ளது.

அதில் அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இங்கே பிரதேச மட்டத்தில் தீர்வு எட்டப்படாத விடயங்களே அங்கே கொண்டுசெல்லப்படவுள்ளன. அதனால் பிரதேச மட்டத்தில் அல்லது திணைக்கள மட்டத்திலோ மாவட்டச் செயலரோ பதிலளிக்காத நான்கு முக்கிய விடயங்களை நான் இங்கே முன்வைக்கின்றேன்.

இவ்வாறு முன்வைக்கப்படும் இந்த 4 முக்கிய விடயங்களுக்கும் இந்த நடமாடும் சேவையின் தலைவரும் நாட்டின் அரசதலைவருமான மைத்திரிபால சிறிசேன பதிலளித்தே ஆகவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் மக்கள் காலம்தாழ்த்தி மீள்குடியமர்த்தப்பட்டனர்.

இக்கிராமத்தில் ‹ ன்றுவரை ஒரு குடும்பத் ்ற்கேனும் சமுர்த்தி கொடுப்பனவு கிடையாது. இதற்குப் பதில் என்ன?

இதேநேரம் 1984 ஆம் ஆண்டு போர் காரணமாக இடல்பெயர்ந்த தமிழ் மக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து தென்பகுதியினருக்கு வழங்கப்படுகின்றது. ஆகவே தமிழ் மக்களின் நிலைதான் என்ன?.

மூன்றாவது விடயமாக முல்லைத்தீவு மாவட்டத்திலே தென்பகுதியைச் சேர்ந்த 78 மீனவர்கள் மட்டுமே பதிவில் உள்ளதாக 2012ஆம் ஆண்டில் அமைச்சர் ராஜித சேனாரத்ன பகிரங்கமாகவே கூறினார்.

ஆனால் இன்று சுமார் ஆயிரம்பேர் வந்துள்ளனர்.

அவ்வாறானால் அவர்கள் யாருடைய அனுமதியின் பேரில் எந்த அடிப்படையில் அத்துமீறுகின்றனர்.

இவை அனைத்தையும்விட பெரிய விடயமாக இன்றுவரை எவருமே பதிலளிக்காத விடயமாக உள்ள கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் எல்லைக்குள் காணப்படும் வனப்பகுதியில் 300 ஏக்கர் காடு பிடிக்கப்பட்டது.

இது திணைக்களத்துக்கும் தெரியாதாம் மாவட்டச் செயலருக்கும் தெரியாது என்கின்றார்.

எனவே மக்கள் பிரதிநி களாகிய நாமும் இதுதொடர்பில் வாய்மூடி மௌனிகளாக இருக்கமுடியாது.

னவே, குறித்த நான்கு விடயங்கள் தொடர்பிலும் அனைவரும் கைவிரித்த நிலையில் அரசதலைவர் பதிலளித்தே ஆகவேண்டும் என்றார். (ய-101)

# வாழ்வாதார உதவிகளால் மக்கள் நன்மையடைந்ததாக தெரியவில்லை

## மாற்றுத் திட்டங்களை ஆராய்வோம் என்கிறார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சயந்தன்

தென்மராட்சி, ஓக.30

பாதிக்கப்பட்டவர்கள் என்னும் வகையில் வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளால் பயனாளிகள் நன்மையடைந்ததாகத் தெரியவில்லை என வடக்கு மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தெரிவித்தார்.

தென்மராட்சிப்பிரதேசத்தில் இனங்காணப்பட்ட மாற்றுத்திறனாளிகள், வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள், மறுவாழ்வளிக்கப்பட்டுசமூகத்தில் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்களுக்கான கருத்தரங்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

இதில் கலந்து உரையாற்றிய வேளையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாழ்வாதார உதவிகள் பெற்ற பலர் தமது தொழிலை மேம்படுத்த வங்கிகளில் கடன்பெற்று அதனைச் செலுத்த முடியாமல் தவிப்பதைக் காணமுடிகிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களைக் குழுக்களாக இணைத்து அவர்களுக்கு நிரந்தரவருமானத்தைவழங்கக்கூடிய தொழில் துறைகளை ஏற்படுத்த வேண்டும்.

அதனை நிறைவுசெய்ய அரச மற்றும் அரசசார்பற்றநிறுவனங்களின் உதவிகளைப் பெறவேண்டும்.

எமது பிரதேசத்தில் இடம்பெற்ற போர் இடர்களின்போது பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளானோர் உள்ளனர்.

குறிப்பாக அங்கவீனர்களாக ஆக்கப்பட்டோர், பெற்றோர் மற்றும் உறவுகளால் படையினரிடம் கையளிக்கப்பட்டோர், கைதுசெய்யப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், போர்வேளையில் குடும்பத்தலை வரை இழந்தவர்கள் எனப் பல தரப்பினர் எம்மிடையே வாழ்ந்து வருகின்றனர்.

போர் முடிவடைந்த பின்னர் பாதிப்புகளுக்கு உள்ளான பலர் பொருளாதார நிலையில் பின்தங்கி சிரமங்க ளின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுயதொழில் முயற்சி, சிறு வியாபாரம், கால்நடைகள் வளர்ப்பு, தையல் இயந்திரம், சைக்கிள்கள் போன்ற பல்வேறு வகையான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த உதவிகள் ஆரம்பகட்டத்தில் பயனளித்தபோதிலும் காலப்போக்கில் மீண்டும் பொருளாதார நிலையில் பின்தங்கவேண்டிய நிலைக்குத்தள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இதேவேளை முன்னாள் போராளிகளை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு தகைமைக்கேற்ற வேலைவாய்ப்பினை வழங்க முடியாத நிலையில் அவர்களது கல்விநிலை காணப்படுகிறது.

இவர்களின் வேலைவாய்ப்பு தொடர்பாக அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களு டன் கலந்துரையாடி வருகின்றோம். தகுந்த வேலைவாய்ப்புகள் கிடைக்கும்போது சமூகத்தில் இணைக்கப்பட்ட மறுவாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் நலனில் அக்கறைசெலுத்துமாறு உரியவர்களுடன் கலந்துரையாடிவருகின்றோம். அதன் பயன் நிச்சயம் கிடைக்கமென எதிர்பார்க்கின்றோம்.

தனிநபர் பெறும் வாழ்வாதார உதவிகளை தற்காலிக வருமானமாகவே கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளானவர்களைக்கொண்ட ஒவ்வொரு பிரிவிலும் குழுக்கள் அமைத்து இவர்களுக்கு நிரந்தர வருமானம் கிடைக்கக்கூடிய வேலைவாய்ப்பை வழங்கக்கூடிய தொழிற்றுறைகளை நாம் உருவாக்க வேண்டும்.

நிதியைக் கையில் வைத்துக்கொண்டு திட்டத்தினைத் தயாரிப்பதை விட திட்டங்களை வைத்துக் கொண்டு நிதி மூலங்களைத் தேடும் முயற்சி வேண்டும்.

பல்வேறு பாதிப்புகளுக்கும் உள்ளானவர்களிடமிருந்து உரிய திட்டங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இதில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றுகையில்,

போரால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களால் மேற்கொள்ளக்கூடிய தொழிற்றுறைகளை இனங்கண்டு தெரிவித்ததால் அவற்றின் பயன்களை பெற்றுக்கொள்ள உரியதரப்பினருடன் கலந்துரையாட வாய்ப்புகள் பெற முடியும்.

வடக்குமாகாணத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும்இவ்வாறானபாதிப்புக்குஉள்ளானவர்கள் வசிக்கின்றனர். இதனால் அனைத்துப் பிரதேசத்திலும் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கான தொழிற்றுறைகளை ஆரம்பிக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

இவ்வாறான முயற்சிகளுக்கு அரச, அரசசார்பற்றநிறுவனங்களுடன் கலந்துரையாடி ஒரு நல்ல திட்டங்களை எம்மால்மேற்கொள்ளமுடியும். அதற்கு முன்னோடியாக எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாணசபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் மக்கள் பிரிதிநிதிகளுக்கான அபிவிருத்தி நிதியினை ஒன்றிணைத்து ஒரு தொழில் திட்டத்தை உருவாக்க முயற்சிப்போம்.

அவ்வாறு மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களை தனியொரு முயற்சிக்கு வழங்க அரச அனுமதி இல்லாத போதிலும் அவற்றினை உரிய தரப்புகளுடன் பேசி மேற்கொள்ளமுடியுமெனநம்பகிறேன் என்றார்.

இதன்பொது கலந்துகொண்ட 200இற்கும் மேற்பட்ட மக்கள் பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய தொழில் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்தனர்.

அவை பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தெரிவித்தார். (ய-9)

# வடக்கில் 7 தபால் அதிபர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக.30

தபால் திணைக்களத்தில் தபால் அதிபர்களாக பதவி உயர்வு பெற்று 6 மாதகால பயிற்சி நெறியினை நிறைவு செய்தவர்களுக்கான புதிய தபால் நிலையங்கள் வடக்கு மாகாண பிரதி தபால்மா அதிபரினால் பொறுப்புக்கொடுக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ரில்கோ சிற்றி விடுதியில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் 6 மாதகாலம் பயிற்சினை நிறைவுசெய்த 26 புதிய தபால் அதிபர்களுக்கான நிலையங்கள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில்போது புதிய தபால் அதிபர்களாக தேர்வு செய்யப்பட்டவர்களில் 7 பேர் வடக்கின் தபாலகங்களுக்கு நியமிக்கப்பட்டனர். ஏனையோர் பிற மாகாணத்தில் உள்ள தபாலகங்களுக்கு நியமிக்கப்பட்டனர்

இவ்வாறு புதிதாக நியமிக்கப்பட்டவர்களிற்கான புதிய நிலையங்களை பிரதித் தபால் மா அதிபர் கனகசுந்தரம் வழங்கி வைத்தார். (ய-101)

# சுகாதார விதிமுறைகளைப் பேணாத உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை

## மாகாண சுகாதார அமைச்சு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.30

வடக்கு மாகாணத்தில் உள்ள உணவகங்கள் அமைச்சின் அடிப்படைச் சுகாதார விதிப்படி அமையாதுவிடின் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அவை மூடப்படும் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள உணவகங்கள் சுகாதாரரீதியாக எவ்வாறு இருத்தல்வேண்டும் என்பதை தெளிவுபடுத்தும் சில விதிமுறைகளை அமைச்சு உணவகங்களுக்கு வழங்கியுள்ளது.

அதிலே குறிப்பிடப்பட்ட அடிப்படை விடயங்களைப் பின்பற்றியே உணவகங்கள் நடத்தப்படவேண்டும். இந்த விதிமுறைகளை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அண்மைக்காலமாக சுகாதார முறைப்படி அமையாத உணவகங்கள் பற்றி முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.


அன்மையில் கைதடி மற்றும் யாழ்ப்பாணத்தில் சில உணவகங்கள் சுகாதார முறைப்படி இயங்கவில்லை என்ற முறைப்பாடு கிடைத்திருந்தது.

அதற்கமைய சுகாதார பரிசோதகர்கள் கடைகளுக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினர். அங்கு உணவகங்களுக்கான அடிப்படை சுகாதார விதிமுறைகள் பின்பற்றா தமை தெரிய வந்துள்ளது. ஆகவே அவர்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் குறித்த உணவகங்களின் பராமரிப்பு தொடர்பில் சுகாதார பரிசோதகர்களால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவற்றை ஆரம்பிப்பதற்கான அனுமதிகள் வழங்கப்படும்.

வடக்கு மாகாணத்தில் உள்ள உணவகங்கள் அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

அவ்வாறு பின்பற்றாது விடின் உணவகங்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

## சந்திப்பு



கொழும்பு, ஓக. 30
அமெரிக்கக் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வில்லியம் ஜே போலன், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினார்.
கொழும்பில் நடைபெறும் பாதுகாப்புக் கருத்தரங்கில் முக்கிய உரை நிகழ்த்துவதற்கு அட்மிரல் வில்லியம் ஜே போலன் வந்துள்ளார்.
2009ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பது குறித்து அட்மிரல் வில்லியம் ஜே போலனுக்கு, இராணுவத் தளபதி கூறியுள்ளார். (5)

### 20ஆவது திருத்தச் சட்டம்

# கிழக்கு மக்களுக்கே பாதிப்பு அதிகம்

### தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 30
20ஆவது திருத்தச்சட்ட வரைவு அரசினால் நிறைவேற்றப்பட்டால், கிழக்கு மாகாணமே பெரும் இழப்புகளைச் சந்திக்கும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எச்சரித்துள்ளன.
தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ரசங்க ஹரிச்சந்திர மேலும் தெரிவித்ததாவது:
20 ஆவது திருத்தச்சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால், கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் தமக்கான புதிய மாகாணசபையை தெரிவு செய்வதற்கு நீண்டகாலம் எடுக்கும். கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் செப்ரெம்பர் 8ஆம் திகதியுடன் முடிவடைகிறது.
இந்த ஆண்டில் தேர்தல் நடத்தப்படாவிட்டால், இங்குள்ள மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு இரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்றார்.
20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் சகல மாகாணசபைகளுக்கும் ஒரே நாளிலேயே தேர்தல் நடைபெறும். 2014ஆம் ஆண்டே ஊவா மற்றும் தென்மாகாணங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்த மாகாணசபைகளின் ஆயுட் காலம் 2019ஆம் ஆண்டு நிறைவுக்கு வரும். இதன் பின்னரே அனைத்து மாகாணசபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தப்பட முடியும். (5)

# வன்முறை துளிர்ப்பதை ஒருபோதும் அனுமதியோம்

### இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஓக. 30
அழிவுகரமான வன்முறைகள் நாட்டின் மீண்டும் துளிர்ப்பதைத் தடுப்பதிலும், பிராந்திய மற்றும் ஆசிய பிராந்தியத்தின் பாதுகாப்பிலும் இராணுவம் கரிசனை கொண்டுள்ளது. இவ்வாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான கொழும்புப் பாதுகாப்புக் கருத்தரங்கில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிராந்திய மற்றும் ஆசியாவின் பாதுகாப்புக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், பாதுகாப்பு உறவுகளில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும் தீவிரமான பாத்திரத்தை வகிப்பதற்கும், பாதுகாப்பு நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் இலங்கை இராணுவம் முயற்சிக்கிறது.
வன்முறைகள் இப்போது சவாலானதொரு பிரச்சினையாகும். உலகில் நீங்கள் வாழும் பகுதி எது என்பது முக்கியமில்லை. துரதிர்ஷ்டவசமான தீவிரவாதத்தால் தூண்டப்பட்ட வன்முறை உலகளவில் பரவி விட்டது. ஒவ்வொரு மனிதனும் இதனால் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (5)

# கனடாவில் விபத்து யாழ்.வாசி உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 30
கனடா ஸ்காபரோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.40 மணிக்கு நடந்த விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஞானபுஸ்பம் செபஸ்தியாம்பிள்ளை (வயது-73) என்பவரே உயிரிழந்தவராவார். ஸ்காபரோ நகரில் நடைபெற்ற தமிழர் தெருவிழாவைக் கண்டு களித்து விட்டு அருகில் இருக்கும் இல்லத்திற்கு கணவருடன் கால் நடையாகத் திரும்பிய போது கார் மோதி இவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

### சேவை
SB TRAVELS AND TOURS
இங்கு இந்திய வீசா விண்ணப்பப்படிவங்கள்
100/ நிரப்பித்தரப்படும்
No 212, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
021 222 9555 , 222 8555

### தவறிவிட்டது
தேவகுமார் ஷியாம்குமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல (991019O597V) கோப்பாய்க்கும் நல்லூரிற்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு :- 076 8796 279

### வேலையாள்கள் தேவை
யாழ்.நகரப்பகுதியில் உள்ள தையலகத்துக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
(யாழ்.நகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது)
இடம் :- சியானாஸ் தையலகம்
77,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 240 5405

பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்
01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?
ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!
ரெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302/ 075 509 5887

### ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
எங்கள் ஸ்தாபனத்துக்கு
✓ கணக்கு எழுதுபவர்.
✓ பில் கிளார்க்,
✓ சேல்ஸ் ஆண்கள்
ஆகிய ஊழியர்கள் தேவை. நேரில் வரவும்.
பட்டதாரிகள் விரும்பத்தக்கது.
புத்தகங்கள் மற்றும் பாடசாலை, அலுவலக உபகரணங்கள் விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212 & 214 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

### பணிப்பெண் தேவை
கொழும்பில் வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. ஒருவருக்கு மட்டுமே சமைப்பதற்கு வீட்டை சுத்தமாக வைத்திருக்கவும் பணிப்பெண் தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். நன்றாக சமைக்க தெரிந்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.
077 108 3481, 021 222 7111

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

பாரம்பரிய ஒடியற் கூழில் பிரசித்தி
பெற்றவர்களான
யாழ்பாடியின்
வாடிக்கையாளர்களின் வேண்டு கோளுக்கு இணங்க இன்று முதல் பிரதி புதன்கிழமை தோறும்
இரவு 6.30 - 9 மணிவரை
ஒரே கைப்பக்குவமான வல்லுனர்களால் குழல் புட்டு, உரலில் இடித்த சம்பல், சொதி மற்றும் றால் பிரட்டல், கணவாய் மற்றும் நண்டுக்கறி என்பவற்றை பெற்றுக்கொள்ள முந்திக்கொள்ளுங்கள்
(எம்மிடம் நிறைவான தங்குமிட வசதி யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உண்டு)
தொடர்பு: யாழ்பாடி
தொ.பே.:075 987 5800/021 222 6868
49,51 - அம்மன் வீதி, நல்லூர்.
Colombo - T.P:075 653 0348

## பாதுகாப்பு 2017/2018 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை வாகன நிலையத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை 01.10.2017 தொடக்கம் 30.09.2018 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது.
கேள்விப் பத்திரங்களை 31.08.2017 ஆம் திகதி முதல் 09.09.2017 வரை வைத்தியசாலையிலுள்ள நோயாளர் நலன்புரி சங்கத்தின் அலுவலகத்தில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.30 மணி வரை பின்வரும் கொடுப்பனவினை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| சேவை விவரம் | மீளளிப்புச் செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| வாகனப் பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 10,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 15.09.2017 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன் நேரடியாக மீளளிப்புத் தொகையினைச் செலுத்தி ஒப்படைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் யாவும் "கி.சின்னராசா, தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம், மாவட்டப் பொது வைத்தியசாலை, கிளிநொச்சி " முகவரியிடப்பட்ட கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (Sealed) அதன் இடது பக்க மேல் மூலையில் "2017 / 2018 ஆம் ஆண்டுக்கான வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை வாடகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி " என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
சகல கேள்விப்பத்திரங்களும் 15.09.2017 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு கேள்விச் சபையின் முன்னிலையில் திறக்கப்படும்.

சி.ஜீவநாயகம்
(077 804 9166)

குருவே துணை
வாழ்க வையகம் வாழ்கவளமுடன்

## மனைவி நலவேட்பு நாள் - 30.08.2017

"தாய்க்கோர் தாய்மையாய் தந்தைக்கோர் சிந்தையாய் கருவைப்புறம் தந்து அன்னையாகி துணைவனை அகம் ஏந்தி தாரமாகி நிற்பதை உணர்த்திய அருளாசான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் வழிவந்த திருநாளாம் மனைவி நலவேட்பு நாள் இன்று"

காலம் - 30.08.2017
நேரம் - பிற்பகல் 05.00 மணி
இடம் - அறிவுத்திருக்கோயில், யாழ்ப்பாணம்.

தலைமை - மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி. முருகானந்தசிவன் (தலைவர் யாழ் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
பிரதமவிருந்தினர் - நா. வேதநாயகன் (அரசாங்க அதிபர் யாழ்மாவட்டம்)
அறிமுக உரையும் காந்த பரிமாற்ற நிகழ்வும் - மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி இந்திரா சண்முகசுந்தரம் (தமிழ்நாடு இந்தியா)

எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய் வல்லமையாய் பெண்ணினத்தை வடிவமைத்த நிகழ்விற்கு அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

02.09.2017 சனிக்கிழமை பி.ப 5.00 மணிக்கு மனவளக்கலை பயிற்சியின் புதியவகுப்பு ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் அறக்கட்டளை
இல-81, பிறவுண்வீதி, யாழ்பாணம். 0212222772

### பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ்

# ஆவணங்களை முறையாக சமர்ப்பிக்கத் தவறிவிட்டது

### சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம் பிணை முறி தொடர்பான விசாரணை ஆணைக்குழுவிற்கு முன்வைத்துள்ள ஆவணங்களில் பல குறைபாடுகள் உள்ளதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது.

பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேனகேவிடம் மேற்கொள்ளப்பட்ட குறுக்கு விசாரணைகளின் அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் ஆவணங்களில் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய சட்டமா அதிபர் திணைக்களம், நிறுவனம் சமர்ப்பித்த ஆவணக் கட்டுகளுள் ஒன்றில் மாத்திரமே 25 இற்கும் மேற்பட்ட குறைபாடுகள் காணப்பட்டதாகச் சுட்டிக்காட்டியது.

ஆவணக் கட்டின் முதல் பக்கத்திற்கும் ஏனைய பக்கங்களுக்கும் இடையே புள்ளிவிபரங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவதாகச் சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதன் காரணமாகக் குறுக்குக் கேள்விக்குப் பதில் அளிப்பதில் சிக்கல் நிலை காணப்படுவதாகவும், உரிய முறையிலான ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டியது நிறுவனத்தின் பொறுப்பு எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதற்காக வருத்தம் தெரிவித்த பேர்ப்பச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம் இயன்ற அளவு அதனைத்திருத்திக்கொள்ள முயற்சிப்பதாக உறுதியளித்துள்ளது. (5)

# அரசு என்ன செய்யப்போகிறது?

### 4ஆம் திகதி வெளிவருகிறது சிறப்பு அறிக்கை

கொழும்பு, ஓக. 30

கூட்டு அரசின் அடுத்தகட்ட நகர்வுகள் பற்றியும், கடந்து வந்த பயணம் குறித்தும் எதிர்வரும் 4 ஆம் திகதி சிறப்பு அறிவிப்பொன்று வெளியாகவுள்ளது. அரசின் சார்பில் மேற்படி அறிவிப்பை நிதி மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர வெளியிடவுள்ளார். இதன்போது அரசின் வரிக்கொள்கைகள் பற்றியும் விவரிக்கப்படவுள்ளது என்று அரச வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அரசின் பொருளாதார அயலுறவுத்துறைக் கொள்கைகள் தொடர்பில் மகிந்த அணியும், மக்கள் விடுதலை முன்னணியும் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. அரசின் செயற்பாடுகள்மீது மக்களுக்கு அதிருப்தியடையும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால், அரசின் எதிர்காலத் திட்டம் கொள்கைகள் பற்றி விளக்கமளிக்கும் வகையில் சிறப்பு அறிவிப்பு வெளியாகவுள்ளது. (5)

# இலங்கை மீது அமெரிக்கா சாடல்

கொழும்பு, ஓக. 30

ஜெனிவாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இலங்கை எந்த முன்னேற்றத்தையும் காட்டத் தவறியிருப்பது, பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது என்ற, ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதியின் கருத்தை, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரும், ஒப்புக் கொண்டுள்ளார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின், இராஜதந்திர விவகாரங்களுக்கான பிரதிநிதி போல் கொட்பிறி, இலங்கை அரசு கூடிய விரைவில் சிறப்பு நீதிமன்றத்தையோ, நீதிப் பொறிமுறையையே அமைப்பதற்கான வாய்ப்பு எதுவும் தென்படவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 24 மாதங்கள் கழித்தும், அரசு எந்த முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை என்பது பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது, என்று கூறியிருந் தார்.

இது குறித்து, தனது கீச்சகப் பக்கத்தில் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் பதிவிட்டுள்ளார்.

'நல்லிணக்கம் தொடர்பான சில மிக முக்கியமான விடயங்களை ஐரோப்பிய ஒன்றியத்தின், இராஜதந்திர விவகாரங்க ளுக்கான பிரதிநிதி போல் கொட்பிறி வெளியிட்டுள்ளார். ஐ.நா.வுக்கான இலங்கையின் கடப்பாடுகளில் முன்னேற்றங்கள் தேவை' என்று அதில் குறிப்பிட்டுள்ளார். (5)

# இலங்கை கிரிக்கெட் அணியின் தொடர் தோல்விகள் அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று எதிரொலிப்பு

கொழும்பு, ஓக. 30

இலங்கை இந்திய கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியின் தொடர் தோல்வி விவகாரம், அரச தலைவர் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்று எதிரொலித்துள்ளது. இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் பெற்றோலிய வளத்துறை அமைச்சருமான அர்ஜுன ரணதுங்கவுக்கும், விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கும் இடையில் இந்த விடயம் தொடர்பில் கடும் சொற்போர் நடைபெற்றது.

கூட்டு அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு, இறைவரிச் சட்ட வரைவு உள்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடிய பின்னர் அமைச்சரவையின் ஒப்புதலுக்காக அமைச்சரவைப் பத்திரங்கள் முன்வைக் கப்பட்டன.

சுகததாச விளையாட்டரங்கு தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவால் அமைச்சரவைப் பத்திரமொன்று முன்வைக்கப்பட்டபோது அதற்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய பெற்றோலிய வளத்துறை அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

'இலங்கையில் தற்போது கிரிக்கெட் என்று ஒன்றுள்ளதா? சூதாட்டக்காரர்களின் கைகளுக்குள் சிக்கி விளையாட்டும் சூதாகியுள்ளது. இப்படியே போனால் விளையாட்டு என்பது படுபாதாளத்துக்குள் விழுந்துவிடும். விளையாட்டுத்துறை அமைச்சும் தற்போது ஒப்பந்தக்காரர்களின் பிடிக்குள் சிக்கியுள்ளது' என்று கடுந்தொனியில் கருத்தும் முன்வைத்துள்ளார்.

சீற்றமடைந்த விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, நீங்கள் கூறுவதுபோல் அனைத்தையும் செய்யமுடியாது. எல்லாவற்றுக்கும் வரையறைகள் இருக்கின்றன. கிரிக்கெட்தான் உங்களுக்குப் பிரச்சினை என்றால் இந்த அமைச்சையும் முன்னெடுத்துச்செல்லுங்கள், என்று பதிலடி கொடுத்துள்ளார்.

இருவருக்கும் இடையே சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றதால் சிறிது நேரம் அமைச்சரவை சொற்போர்க்களமாகக் காட்சியளித்துள்ளது. பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலையிட்டு இருவரையும் சமரசப்படுத்தியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியானது இந்தியாவிடம் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதை மையப்படுத்தியே அமைச்சரவைக் கூட்டத்தில் அர்ஜுன ரணதுங்க மேற்படி விடயங்களைச் சுட்டிக்காட்டினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (5)





உ
சிவமயம்
தெல்லிப்பழை அருள்மிகு வறுத்தலைவிளான்
மருதடி விநாயகர் ஆலயம்
பரிவார மூர்த்திகள்
கும்பாபிஷேகம்

மருதடி விநாயகப் பெருமான் அடியார்களே!
எங்கள் மருதடி விநாயகப்பெருமான் ஆலய
பரிவார மூர்த்திகள்
கும்பாபிஷேகம்
நிகழும் ஏவிளம்பி வருட ஆவணித் திங்கள்
18 ஆம் நாள் (03.09.2017)
ஞாயிற்றுக்கிழமை
காலை 7.00 மணியின்மேல்
8 மணி 56 நிமிடத்துக்குள்ளாக வரும்
கன்னிலக்கின சுப முகூர்த்தத்தில்
திருவருள் துணைகொண்டு நிகழவுள்ளது
என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத்
தருகின்றோம். ஆசாரசீலர்களாக வந்து தரிசித்து
எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்யும்
வண்ணம் தங்களை அன்புரிமையுடன்
கேட்டுக்கொள்கின்றோம்.

பிரம்மஸ்ரீ சு.இராசேஸ்வரசர்மா
(ஆலய பிரதம அர்ச்சகர்)
பரிபாலன சபையினர்

# அரிசி இறக்குமதி இந்தியாவுடன் ஒப்பந்தம்

## அமைச்சர் ரிசாத் தகவல்

கொழும்பு, ஓக. 30

அடுத்த மாத நடுப்பகுதியில் 70 ஆயிரம் மெற்றிக்தொன் நாட்டரிசியும், அதன் பின்னர் 30 ஆயிரம் மெற்றிக்தொன் சம்பாவும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள தாகக் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

70 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசுக்கும், இந்திய தனியார் துறையினருக்குமிடையேகைச்சாத்திடப்பட்டுள்ளது. ஒரு மெற்றிக்தொன் அரிசியை 445 அமெரிக்க டொலருக்கு இந்தியத் தனியார் துறையினர் வழங்கவுள்ளனர். 30 ஆயிரம் மெற்றிக்தொன் சம்பா அரிசிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும். ஒரு மெற்றிக்தொன் 475.5 அமெரிக்க டொலர் விலைக்கு வாங்கப்படும்.

அடுத்தமாத முடிவுக்குள் ஒரு லட்சம் மெற்றிக்தொன் அரிசியை இலங்கை இறக்குமதி செய்வதன்மூலம் அரிசித் தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும். அரிசியின் விலையை வர்த்தகர்கள் மனம்போன போக்கில் அதிகரித்து விற்பதை நிறுத்த முடியும் - என்றார். (5)

# நாமல் கைதாவாரா?

## நீதி அமைச்சர் சூசகத் தகவல்

கொழும்பு, ஓக. 30

மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்ச போன்றவர்களைக் கைது செய்வதற்குத் தேவையான காரணங்கள் உள்ளது. இவ்வாறு புதிய நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாஜுதீனைக் கொலை செய்யுமாறோ, அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்துமாறோ, நாங்கள் எவருக்கும் கூறவில்லை. இராணுவத்தினரைப் பயன்படுத்தி மணல் மூட்டைகளை அடுக்கி அரச பணத்தில் கார் ஓட்டப் பந்தயங்களை நடத்துமாறும் நாங்கள் கூறவில்லை. நாமல் ராஜபக்ச போன்றவர்களைக் கைது செய்ய வேண்டுமாயின் தேவையான அளவுக்குக் காரணங்களும் விடயங்களும் உள்ளன. சரியான முறையில் தற்போது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. விசாரணைகள் முடிந்த பின்னர் அதன் அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்படும். எவ்வளவு காலத்துக்குப் பின்னர் விசாரணைகளுக்காக ராஜபக்ச குடும்பத்தினர் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்குச் சென்றனர் என்பதை முழு நாடும் அறியும். அவர்களை வேட்டையாடும் தேவை அரசுக்கு இல்லை - என்றார். (5)

## மரண அறிவித்தல்



தோற்றம்
29 . 08 . 1927

மறைவு
29 . 08 . 2017

**வைத்திய கலாநிதி**

### செல்வி புஸ்பம் சண்முகம்

(ஓய்வு பெற்ற பணிப்பாளர் யாழ்.போதனா வைத்தியசாலை)

முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி புஸ்பம் சண்முகம் தனது 90 ஆவது வயதில் நல்லூரான் திருவடியை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் முதலியார் அழகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற புனிதவதி (Dr.செல்லையா) காலஞ்சென்ற நகுலேஸ்வரி (பொறியியலாளர் கனகசிங்கம்) ஆகியோரின் சகோதரியும் ஜெகதாம்பிகை(சிவபாலசுந்தரம்), ஜெகதீஸ்வரன்(அம்பிகை), ஜெயராஜா(பவானி), புஸ்பராஜா(ஈஸ்வரி), விக்னராஜா(பங்கஜவதனி), திவ்யநேசன்(விஜயகுமாரி), ஜெயநாதன்(சூரியகுமாரி), ரஜினி(விஜயலிங்கம்), சிவாநந்தன் (யோகா), பவானந்தன் (லோகநந்தினி) காலஞ்சென்ற சதாநந்தன் மற்றும் நித்தியானந்தன் (தர்ஷினி), பாஸ்கரதேவன் (பாலசாந்தினி), அமரதேவன் (தேவகுமாரி - கொழும்பு), கலாவதி (மோகனசுந்தரம் - ஓய்வூதியர் யாழ்மாநகர சபை), வசந்தகுமார் (ஓய்வூதியர், யாழ்மாநகர சபை - நந்தினி) ஆகியோரின் சிறியதாயும் பிரணவன்(கொழும்பு), பவஹரிணி(கொழும்பு), திவ்யபாரதி (றுகுணு பல்கலைக்கழகம் - மருந்தகவியல்), ஷந்தனா (யாழ் மருத்துவபீட மாணவி 3ஆம் வருடம்), ஹம்சானந்த் (யாழ் இந்துக்கல்லூரி - A/L 2019) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10 மணிக்கு கோம்பயண்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**465/24, பருத்தித்துறை வீதி,**
**(மனோன்மணி அம்மன் கோயில் அருகில்)**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**வசந்தன்**

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா நல்லதம்பி

**(நல்லார் அம்மான்)**



அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா நல்லதம்பி 27.08.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான புஸ்பவதனி, வசுந்தராதேவி ஆகியோரின் அன்புக் கணவரும், செல்வரத்தினம் (லண்டன்), காலஞ்சென்ற மோகனசுந்தரம் மற்றும் சண்முகப்பிரியா, நிசாந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், செல்வகுமார், தவசீலன், தமயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், சானுகா, கானிலா, வரலக்சன், சயலக்சன், நிலக்சிகா, பூர்விகன், அப்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சிவபாக்கியம், வல்லிபுரம் மற்றும் தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2017) புதன்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் அச்செழு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்செழு வடக்கு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 236 7376**



பிறப்பு
02 . 07 . 1936

இறப்பு
29 . 08 . 2017

### திருமதி அன்னம் இராசன்

கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், உடுவில் மேற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம் இராசன் நேற்று (29.08.2017) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் - இன்னாசி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, சீதேவி மற்றும் பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பன் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மன்மதராசா மற்றும் சுசீலா(ஜேர்மனி), புஸ்பராணி, புஸ்பலீலா, தர்மகுலசிங்கம் (சமுர்த்தி முகாமையாளர் - நல்லூர்), நீலேஸ்வரி, நித்தியானந்தவதி, உகந்தராசா (அலுவலகப் பணியாளர் - யாழ்.மத்திய கல்லூரி), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயராசா (ஜேர்மனி), பேபிசைலா, இராசகுமார், நாகேந்திரம், காலஞ்சென்ற விமலலோஜினி (முன்னாள் மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியை) மற்றும் நித்திய பரிபாலன், மனோகராஜ், றேவதி, நிமலதாஸ் (யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, சின்னத்துரை மற்றும் அப்புத்துரை, சரவணமுத்து, ராணி, பொன்மணி, வதனி, செல்வம், மீனாட்சி, நவரத்தினம் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும், தனஞ்சயன் (ஜேர்மனி), தனசெந்தூரன் (ஜேர்மனி), காயத்திரி (ஜேர்மனி), லதீபன் (கலாசார உத்தியோகத்தர் - உடுவில்), மலர்விழி (ஆசிரியர் - களுத்துறை), தசீதரன் (யாழ்.பல்கலைக்கழகம்), மன்சிகா(தொழில்நுட்பக் கல்லூரி), ஜென்சிகா, டினேஸ், லோபனா, விஜயநிதி (ஆசிரியர் - மல்லாவி), செல்வசந்திரன் (கிறிஸ்தவக் கல்லூரி- கோப்பாய்), பாசநிதி (ஆசிரியர் -Aston), அகில்ராஜ், ரூபராஜ் (Technical Officer), மயூரி (சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), சதீஸ், அனுசியா, அமலதாஸ், சஜந்தன், இன்பலோஜன், விமலலோஜன் (O/L மாணவன் - யாழ்.இந்துக் கல்லூரி), நீலாம்பினி (உயர் தொழில்நுட்பக் கல்லூரி), கௌதமி (மகாஜனக் கல்லூரி), கவிஷன், சர்வலோஜன், அஸ்வினி, சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லக் ஷாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2017) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உடுவில் ABC லேன் மேற்கு,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**இ.தர்மகுலசிங்கம் (மகன்)**
**இ.உகந்தராசா (மகன்)**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# பன்னாட்டுச் சமூகம் கடமை தவறமுடியாது

இலங்கையில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு பன்னாட்டுச் சமூகத்தின் ஊடாக நீதி கிடைக்கும்என்றுஎதிர்பார்த்தோம்,ஆனால்அதுநிறைவேறவில்லை என்றுதனது ஆதங்கத்தைஅமெரிக்காவிடம்தெரிவித்திருக்கிறார்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

நேற்றுத்தன்னைச்சந்தித்தஅமெரிக்ககாங்கிரஸ்சபைஉறுப்பினர்களிடம்அவர்இந்தக்கருத்தைத்தெரிவித்தார். பன்னாட்டுச் சமூகம் கைவிட்டபோதிலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையின்தீர்மானத்தை இலங்கைமுழுமையாக நடைமுறைப்படுத்தும் என்கிற நம்பிக்கையில் தாம் செயற்படுகிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்கிற நம்பிக்கை தனக்கு உள்ளது என சம்பந்தர் தெரிவிக்கின்றபோதிலும், அது ஒரு அவநம்பிக்கை என்பதையே அவரது கருத்துக்கள் காட்டுகின்றன. பன்னாட்டுச் சமூகத்தின் மூலமாக தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்று அமெரிக்கர்களிடம் அவர் சுட்டிக்காட்டியிருப்பதே கொழும்பு மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

கொழும்பில் ஆட்சியிலிருக்கும் அரசுகள் தமிழர்களுக்கு ஒருபோதும் உரிமைகளையோ அதிகாரங்களையோ ஆட்சியில்பங்கையோவழங்கப்போவதில்லைஎன்கிறஉறுதியான நம்பிக்கை தமிழர்களிடம் எப்போதுமே உண்டு. நெருக்கடியான காலகட்டங்களில் தமிழ்த் தலைமைகளைப் பயன்படுத்திவிட்டு பின்னர் தூக்கிவீசிவிடுவதை கொழும்பு அரசியல்தலைமைகள்கலாதிகாலமாகக்கடைப்பிடித்து வருவதால் ஏற்பட்ட பட்டறிவு அது.

அதனால்தான் இந்தத் தடவை பன்னாட்டுச்சமூகத்தின் மீது அளவுக்கதிகமான நம்பிக்கையைத் தமிழர்களும் தமிழ்த் தலைமைகளும் கொண்டிருந்தன. போரின் பின்னர் இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் பன்னாட்டு அரங்கில் பேசுபொருளானபோது அது தமிழர்களுக்குச் சாதகமான நிலமைஎன்கிறஅனுமானம்எட்டப்பட்டது.தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் அதன்தமிழ் எதிராளிகளும்கூட, பன்னாட்டு அரங்கில் தமிழர்களுக்குச் சாதகமாகக் காணப்படும் இந்தச் சூழ்நிலையைச்சரியாகப்பயன்படுத்திக்கொண்டுஒருதீர்வை அடைந்துவிடவேண்டும்என்று முனைப்புக்காட்டினர்.

தமிழர்கள் இலங்கையில் ஒரு தீர்வைப் பெற்றுவிடுவதற்கு இது ஒரு சிறந்த பன்னாட்டுச் சூழல் என்று எல்லோராலுமே கணிக்கப்பட்டது.பூகோளஅரசியலைத்திறம்படக்கையாள்வதன் மூலம் ஒரு தீர்வை அடைந்துவிட முடியும் என்று, கருத்துவேறுபாடுகள் இருந்தாலும், கூட்டமைப்பும் அதன் தமிழ் எதிராளிகளும்கூடக்கருதினர். அதன்படி செயற்பட்டனர். அதனால்தான் ஐ.நா. தீர்மானங்கள் மீது அளவுக்கதிகமான எதிர்பார்ப்புகள் கட்டியெழுப்பப்பட்டன.

மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் இலங்கையை நேரடியாகக் கட்டுப்படுத்த மாட்டா என்பது தெரிந்திருந்தாலும், அதில் தொடர்புபடும் சக்திமிக்க நாடுகளின் அணுகுமுறையின் மூலம் ஏதோவொரு வெளிச்சம் கிட்டும் என்ற நம்பிக்கை இருந்தது. இப்போது அந்த நம்பிக்கை மெல்ல மெல்லத் தளர்ந்து வருகிறது. அதன் வெளிப்பாட்டையேசம்பந்தனின்கருத்துக்கள்தெளிவுபடுத்துகின்றன. அவர்கொழும்பைநம்புகிறார்என்றுகூறினாலும், பன்னாட்டு அழுத்தம் ஒன்றே இலங்கையைச் செயற்பட வைக்கும் வழி என்பதை அமெரிக்கர்களுக்குத் தனது கருத்துக்கள் ஊடாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

பன்னாட்டுச் சமூகம் இந்தச் செய்தியைச் சரிவரப் புரிந்துகொண்டு உடனடியாகவினையாற்றவேண்டியது அவசியம். ஏனெனில், கொழும்பு அரசுக்கும்விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர் வலுச்சமநிலையின் இடையே புகுந்து குழப்பி விடுதலைப் புலிகளை அழிப்பதற்கான அனைத்து உதவிகளையும் கொழும்புக்கு வழங்கியதன் மூலம் தமிழர்களின் இன்றைய பேரம்பேசமுடியாதநிலையை உருவாக்கியதில் பன்னாட்டுச் சமூகத்திற்கு மிக முக்கிய பங்கு இருக்கிறது. எனவே இலங்கையில் நிலையான நீடித்த அமைதியை ஏற்படுத்தும் பொறுப்பும் கடமையும் அதற்கு இருக்கிறது. அந்தக் கடமையில் இருந்து பன்னாட்டுச் சமூகம் தடுமாறக் கூடாது.

கொழும்புமீது தொடர்ச்சியான அழுத்தத்தைக்கொடுப்பதன் மூலமே அதனைச் சாத்தியமாக்க முடியும். சம்பந்தரும் இதனைத்தான்பன்னாட்டுச்சமூகத்திற்குச்சொல்லியிருக்கிறார்.

# பலே! கில்லாடி

## ஏ.எல். பரீட்சை மோசடி

## நடந்தது என்ன?



கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் இரசாயனவியல் பாடத்தின் இரண்டாம் பகுதி வினாத்தாள் பரீட்சைக்கு முன்னரே வெளியாகி விட்டதா என்ற கேள்வி, கடந்த 10 நாள்களாக எல்லோரையும் ஆக்கிரமித்திருந்தது. அதற்கான விடையைக் குற்றப் புலனாய்வுத்திணைக்களம் இப்போது அவிழ்த்து விட்டுள்ளது.

உயர்தர வகுப்பு மாணவனொருவன் தனது அதீத தொழில்நுட்பத் திறமையினால், பரீட்சை மேற்பார்வையாளர்கள்உள்ளிட்டஎல்லோரையும் முட்டாள்களாக்கி, கனகச்சிதமாகச்செய்தவேலை, மேலதிக பணத்துக்குஆசைப்பட்டஆசிரியரால்வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மாணவன்இரசாயனவியல்பாடத்துக்கு மாத்திரம் அல்ல உயிரியல் பாடத்துக்கும், ஆசிரியர்ஒருவரின் உதவியுடனேயேவிடைஎழுதியுள்ளமையைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

### மாணவர்களது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஏ.எல்.பரீட்சை

போட்டிப் பரீட்சைஎன்றவகையில் மாணவர்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒன்றாகக் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை கருதப்பட்டு வருகின்றது. கடந்த 19ஆம் திகதி இரசாயனவியல் பாடத்தின்இரண்டாம்பகுதிக்கான பரீட்சைஇடம்பெற்றது. வினாத்தாளில் இடம்பெற்றிருந்த 3 கேள்விகளைஉள்ளடக்கியதுண்டறிக்கை கம்பகா மாவட்டத்தில் பரவலாக விநியோகிக்கப்பட்டிருந்தது.

அந்தத் துண்டறிக்கையில், நான் அனுமானித்த கேள்விகள் இரசாயனவியல் வினாத்தாளில் உள்ளன. வெற்றியை உறுதி செய்ய எனது கல்வி நிறுவனத்துக்கு வாருங்கள் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இரசாயனவியல் பரீட்சை எழுதிவிட்டு வெளியே வந்தமாணவர்கள்துண்டறிக்கையைப்பார்த்துப்பேரதிர்ச்சிஅடைந்துள்ளனர். வினாத்தாளில்இருந்த கேள்விகள் அச்சுப் பிசகாமல் துண்டறிக்கையில் இருந்தமை அவர்களுக்கு ஆச்சரியத்தையும் அதனோடு சேர்த்து அதிர்ச்சியையும்கொடுத்தது.

### மோசடி குறித்து உசாரடைந்த பரீட்சைத் திணைக்களம்

மாணவர்களின் பெற்றோர்கள் உடனடியாகவேசெயலில்இறங்கினர். பரீட்சைத் திணைக்களத்துக்குத் தகவல் பறந்தது. பரீட்சைத் திணைக்களமும் உசாரானது. பரீட்சைக்கு முன்னரே வினாத்தாள்கசிந்தால்பரீட்சைத்திணைக்களம்அமைதிகாக்குமா? நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டன. பொலிஸ்மா அதிபரிடமே நேரடியாக விடயம் பாரப்படுத்தப்பட்டது.

விடயத்தின்பாரதூரத்தன்மையை உணர்ந்த பொலிஸாரும், களத்தில் குதித்தனர். துண்டறிக்கை விநியோகித்தவர்களைத் தேடிய வேட்டை முடுக்கப்பட்டது.

துண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த இரசாயனவியல் ஆசிரியரின் தந்தையும், சகோதரனும் பொலிஸாரால் முதலில் கைது செய்யப்பட்டனர். ஆசிரியர் தலைமறைவாகியிருந்தார். துண்டறிக்கையை அச்சிட்ட அச்சக உரிமையாளரும் கைதானார். இவர்களிடம் துருவித் துருவி விசாரணை மேற்கொண்ட பொலிஸாருக்கு, தலையைச்சுற்றும்வகையிலான தகவல் கிடைத்தது.

அதிநவீன பரீட்சை மோசடி நடந்திருப்பதை அவர்களால் ஊகிக்க முடிந்தது. விசாரணையைகுற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் பாரப்படுத்தினர்.

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினர் நாரஹேன்பிட்டி பொலிஸ் மருத்துவமனையின் பல் மருத்துவரையும், அவரது மகனையும் கைது செய்தனர். மருத்துவரின் மகனே, இரசாயனவியல் வினாப்பத்திரத்தை வெளியே கசிய விட்டிருந்தார். மகனுக்கு விடை சொல்லிக் கொடுப்பதற்குக் கூலியாக இரசாயனவியல்ஆசிரியருக்கு10 லட்சம் ரூபாவை மருத்துவரே வழங்கியுள்ளார் என்பதையும் பொலிஸார் அறிந்ததால் அவரையும் கைது செய்தனர்.

மருத்துவரின் மகன் கொழும்பு பிரபல பாடசாலையில் உயர்தர விஞ்ஞானப்பிரிவுமாணவன். தொழில்நுட்ப விடயங்களில் அவனது திறமை காரணமாக கனடாவின் புலமைப்பரிசில் கூட அவனுக்குக் கிடைத்துள்ளது. தனது தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்தியே மாணவன் குறித்த பரீட்சை மோசடியை மேற்கொண்டார் என்று குற்றப்புலனாய்வுபிரிவுப்பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பரீட்சைமோசடித்திட்டம், பொரளையில் உள்ள அவனது மாடி வீட்டிலேயே தீட்டப்பட்டுள்ளது. இணையம்ஊடாகசிறிய'ஸ்கானிங்கமரா' புளூடுத் உபகரணம் என்பவை 900அமெரிக்கடொலருக்குசீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலைச் சீருடையின் 'சேர்ட்' பொத்தானைப் போன்றதே ஸ்கானிங் கமரா. அதனை இயக்குவதற்கானசுவிட்ச், சப்பாத்தினுள் இருக்கும். சுவிட்சை விரல்களால்அழுத்த, கமரா வினாத்தாளை ஸ்கான் செய்யும். ஸ்கான்செய்யப்படும் வினாத்தாள், மெசஞ்சர் ஊடாக மாணவனின் முகநூல் உள்பெட்டிக்குச் செல்லும். மாணவனின் பொரளை வீட்டிலிருக்கும் இரசாயனவியல் பாட ஆசிரியர் முகநூல் உள்பெட்டிக்கு வரும் வினாத்தாளைப் பார்த்து விடையைச் சொல்லுவார். மெசஞ்சர் ஊடாகஅவர் அழைப்பெடுத்ததும் காதினுள் செலுத்தக் கூடிய மிகச் சிறிய புளூடூத் உபகரணத்தைப் பயன்படுத்தி மாணவன் வினாத்தாளுக்கு பதிலளித்துள்ளார்.

இந்தத்தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தியேஉயிரியல்பாடத்துக்கும் மாணவன் விடை எழுதியுள்ளார். அதன்போதுமாணவன்சிக்குப்படவில்லை. உயிரியல் பாடத்திற்கும் ஆசிரியர் ஒருவரே வெளியில்

> இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியே உயிரியல் பாடத்துக்கும் மாணவன் விடை எழுதியுள்ளார். அதன்போது மாணவன் சிக்குப்படவில்லை. உயிரியல் பாடத்திற்கும் ஆசிரியர் ஒருவரே வெளியில் இருந்து விடை சொல்லிக் கொடுத்துள்ளார்.

இருந்து விடைசொல்லிக்கொடுத்துள்ளார். இரசாயனவியல் பாடத்திற்கு விடை சொல்லிக் கொடுத்த ஆசிரியர், மேலதிக பணம் தேடும் ஆசையால், மாணவனிடமிருந்து பெற்ற வினாத்தாளை உடனடியாகத்தனதுசகோதரனுக்குஅனுப்பி, அதனை துண்டறிக்கையாக வெளியிட்டமையினாலேயே, இந்தமோசடிவெளிச்சத்துக்குவந்துள்ளது.

மாணவன் பரீட்சைக்கு முன்னதாக, தனது வீட்டில் வைத்து இந்த ஒழுங்கில் பரீட்சை எழுதுவதற்கு ஒத்திகை பார்த்துள்ளார் என்றும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரசாயனவியல் பாட ஆசிரியர் சரணடைந்துள்ளநிலையில், உயிரியல் பாட ஆசிரியரைத் தேடி பொலிஸார்தேடுதல்வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.



# தமிழ்நாட்டின் அரசியல் எதிர்காலம் என்னவாகும்?

இந்துமதி

தமிழ் நாட்டின் அரசியல் நிலை நிச்சயமற்றதொரு கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது . ஆளும் அ.தி.மு.க ஆட்சி நிலைக்குமா? இடைவழியில் கவிழ்ந்து விடுமா? என்ற ஐயம் எழுந்து நிற்கின்றது.

ஒருவருக்கொருவர் எதிரிகள் போன்று செயற்பட்ட முன்னாள் முதலமைச்சர் பன்னீர்செல்வமும்தற்போதைய முதலமைச்சர் பதவியை வகிக்கும் எடப்பாடி பழனிச்சாமியும் இரு துருவங்களாக இருந்த காலம் மாறிவிட்டது. பகைகளை மறந்து இந்த இருவரும் தற்போது இணைந்து விட்டனர். இதன் பயனாகப் பன்னீர் செல்வம் துணைமுதலமைச்சராகியுள்ளார். நிதியமைச்சும் இவர்வசமேவந்துள்ளது. அத்துடன்கட்சிக்குள்அவரதுபிடிஇறுகும் வகையில்கட்சியின்இணைப்பாளர்பதவியும்(அ.தி.மு.க. இவர்களிடம்வந்தால்இந்த இணைப்பாளர்பதவிபொதுச்செயலாளர் பதவியாக மாறும்) அவர் வசம் வந்துள்ளது. முதலமைச்சர்பழனிச்சாமிதுணை இணைப்பாளராகப் பதவி வகிப்பார்.

### அ.தி.மு.கவின் இரு தரப்புகளதும் இணைவு நிலைக்குமா?

சில காலமாகப் பிரிந்திருந்த இவர்கள் இருவரும்ஒன்றுசேர்ந்ததால்அ.தி.மு.க தொண்டர்கள்உற்சாகத்தின்எல்லைக்கே சென்று விட்டனர். வெடி கொளுத்தியும் இனிப்புக்களை வழங்கியும் அவர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஆனால் தினகரன் இவர்களது மகிழ்ச்சி தொடருவதற்கு அனுமதிக்கவில்லை. அவருக்குஆதரவாக20சட்டமன்றஉறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும்தினகரனின்பாதுகாப்பில்வைக்கப்பட்டுள்ளனர். சட்டமன்றத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்படுமாயின், இந்த20பேரும் எதிராகவே வாக்களிப்பார்கள். இதை உணர்ந்துதான் பழனிச்சாமி அரசு தி.மு.கசட்டமன்றஉறுப்பினர்களுக்குஎதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதற்கு எதிராக தி.மு.க நீதிமன்றத்தை நாடும் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

ஓ.பன்னீர் செல்வம் மறைந்த ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்துவந்தவர். துணைமுதலமைச்சர். ஜெயலலிதாவுக்கு நீதிமன்றத் தினால் சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டவேளைகளில் பன்னீர்செல்வத்தையே பதில் முதலமைச்சராக ஜெயலலிதா நியமித்தார். தினகரன் மற்றும் சசிகலா மூலமாக பன்னீர் செல்வம் ஜெயலலிதாவுக்கு அறிமுகம்ஆனபோதிலும்பின்னர்ஜெயலலிதாவின் நம்பிக்கையைச் சம்பாதித்தார். ஜெயலலிதாவின் மறைவுக்குப் பின்னரும் அவரே முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன்பின்னர் சசிகலாவுடன் ஏற்பட்ட முரண்பாடுகாரணமாகபன்னீர்செல்வம் முதலமைச்சர் பதவியிலிருந்துஅகற்றப்பட்டுஎடப்பாடிபழனிச்சாமி அவரது இடத்துக்கு நியமிக்கப்பட்டார். அ.தி.மு.க இரண்டு அணிகளாகப் பிளவுபட்டது. நீண்டகால இடைவெளியின் பின்னர் தற்போதுஇவ்விருஅணிகளும்இணைந்துள்ளன. ஆனால் சசிகலாவையும் தினகரனையும் கட்சியிலிருந்து நீக்கி விடுவதற்கான தீர்மானம் சசிகலா தரப்பைச் சீற்றமடையச் செய்து விட்டது. இதன் விளைவாக தமிழ் நாட்டு அரசியலில் மீண்டும் குழப்பம் நீடித்துக் கொண்டே செல்லும் நிலை உருவாகியுள்ளது.

### தன்னை மேலும் பலப்படுத்தும் முயற்சியில் தி.மு.க. தரப்பு

இதேவேளைசுமார்100சட்டமன்றஉறுப்பினர்களின் ஆதரவுடன் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் தி.மு.க பலமானதொரு எதிர்க்கட்சியாகவே காணப்படுகின்றது. தி.மு.கவின் செயல் தலைவரான மு.க.ஸ்ராலின் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகிக்கின்றார். தி.மு.கவின் தலைவரான மு.கருணாநிதியின் புதல்வரான ஸ்ராலின் தமிழ்நாட்டின் அடுத்த முதலமைச்சராகுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளன.

1967ஆம்ஆண்டுக்குப்பின்னர்திராவிட இயக்கங்களே தமிழ் நாட்டில் மாறி மாறி ஆட்சியமைத்து வருகின்றன. அண்ணாவில் ஆரம்பித்து தற்போது எடப்பாடி பழனிச்சாமி வரை இந்த ஆட்சி தொடர்கின்றது. தேசியக் கட்சிகளால் தமிழ்நாட்டில் காலூன்ற முடியவில்லை. மாநிலக் கட்சிகளின் தயவிலேயே அவை தங்கி நிற்கின்றன.

தேசியக்கட்சிகளுள்ஒன்றானகாங்கிரஸ் கட்சிதி.மு.கவுடன்தமிழ்நாட்டில்கூட்டணி அமைத்துள்ளது. கடந்தசட்டமன்றத்தேர்தலிலும் இந்தக் கூட்டணி இணைந்து போட்டியிட்டது. காங்கிரஸ்கட்சியால்எதிர்பார்த்தஅளவுக்குவெற்றியைஈட்டமுடியாமல் போனாலும், இந்தக் கூட்டணி தொடரவே செய்கின்றது. இன்னொரு தேசியக் கட்சியான பா.ஜ.க மதவாத சாயம் பூசிய நிலையில் காணப்படுவதால் எவருமே அந்தக் கட்சியை அணுகவில்லை. இதனால் அந்தக் கட்சி தமிழக சட்ட சபைத் தேர்தலில் தோல்வியைச் சந்திக்கவே நேரிட்டது. நரேந்திர மோடியின் வருகையின் பின்னர் பா.ஜ.க தமிழ் நாட்டில் காலூன்றுவதற்கானமுயற்சிகள்தீவிரப்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தி.மு.கவும், அ.தி.மு.கவுமே முதன்மைமாநிலக்கட்சிகளாகக்காணப்படுகின்றன. தி.மு.க, காங்கிரஸ் பக்கம் சென்றுவிட்டதால்அ.தி.மு.கவைநாடுவதற்கு பா.ஜ.க தீர்மானித்தது. ஆனால் ஜெயலலிதா உயிருடன் இருக்கும் வரையில் இதற்கு இடம்கொடாது நடந்து கொண்டார். அவரது மறைவு பா.ஜ.வுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. அ.தி.மு.கவில் ஏற்பட்ட குழப்பங்களும் பா.ஜ.வுக்குச் சாதகமாக அமைந்து விட்டன. இன்று அ.தி.மு.க அரசு தொடருவதையே மோடி விரும்புவார்.

**சசிகலாவுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பன்னீர் செல்வம் முதலமைச்சர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு எடப்பாடி பழனிச்சாமி அவரது இடத்துக்கு நியமிக்கப்பட்டார். அ.தி.மு.கஇரண்டு அணிகளாகப் பிளவுபட்டது. நீண்டகால இடைவெளியின் பின்னர் தற்போது இவ்விரு அணிகளும் இணைந்துள்ளன. ஆனால் சசிகலாவையும் தினகரனையும் கட்சியிலிருந்து நீக்கி விடுவதற்கான தீர்மானம் சசிகலா தரப்பைச் சீற்றமடையச் செய்து விட்டது.**

### சட்டமன்றத் தேர்தல் இடம்பெறுமானால் தமிழ் நாட்டு அரசியலில் திருப்பங்கள் ஏற்படும்

ஆனால்சட்டமன்றத்தேர்தல்வருமாயின் தமிழ் நாட்டின் அரசியலில் பெரும்மாற்றங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் இப்போதே தென்பட ஆரம்பித்துள்ளன. தி.மு.கவுடன் காங்கிரஸ் கட்சியின் கூட்டுத்தொடரவே செய்யும். ம.தி.மு.க பொறுச் செயலாளர் வைகோ தி.மு.கவின் பக்கம்சாயத்தொடங்கிவிட்டார். கருணாநிதிமற்றும்ஸ்ராலினுடரான அவரது சந்திப்பு இதை உறுதி செய்கின்றது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் தி.மு.கவுடன் இணைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. பா.ம.கவும், அ.தி.மு.கபக்கம்செல்லமாட்டாது. அந்தக்கட்சி தனித்துப் போட்டியிடுவதாலும் பயன் கிடைக்கமாட்டாது என்பதால் வைகோ மற்றும் திருமாவளவனின் வழியை அவரும் பின்பற்றலாம். இதைவிட முஸ்லிம் கட்சிகளும், சில உதிரிக் கட்சிகளும் தி.மு.க பக்கம் சாய்ந்து விடுவதற்கான ஏதுநிலைகாணப்படுவதால்தி.மு.க. கூட்டணியின்வெற்றிவாய்ப்புபிரகாசமாகவே காணப்படுகின்றது. ஆனால் அ.தி.மு.கவினுள்காணப்படுகின்றகுழப்பங்களும் பா.ஜ.கவுடனான அதன் உறவும் தேர்தலில்பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தப்போகின்றன. மேலும்ஜெயலலிதா போன்ற தலைவர் அந்தக் கட்சிக்குள் இல்லாதது பெரும் பின்னடைவாகவே கருதப்படுகின்றது. எம்.ஜி.ஆர் என்ற அந்த மாமனிதரால் உருவாக்கப்பட்ட அ.தி.மு.கஇன்றுகடலின்பெரும்அலையில் சிக்கித் தள்ளாடிக் கொண்டிருக்கும் சிறிய படகொன்றின் நிலையில் காணப்படுகின்றது. அது கரைமோதுமா? அல்லது கடலில் மூழ்கிவிடுமா? என்பதற்கு காலம்தான் பதில்.



## ஆசிரியருக்கான கடிதம்

### பெண்ணின் அவலச்சாவுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

சீதன வன்கொடுமையால் இளம் பெண்ணொருவர் தென்மராட்சியில் சாவைத் தழுவிக் கொண்டார் எனப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியைப் படித்த போது ஒரு பெண் என்ற வகையில் எனது உள்ளம் பதைபதைத்தது. கலைகலாசாரம், பண்பாடு, பக்தி என்றெல்லாம் பீற்றிக் கொண்டிருக்கும்எம்மவர்மத்தியில்இன்னமும் இந்தச் சீதனம் என்ற அரக்கன் அழியாது செயற்பட்டு வருவது அருவருப்பை ஏற்படுத்துகின்றது.

ஒரு பெண்ணின் துணை இல்லாமல் எந்தவொரு ஆணாலும் வாழமுடியாது. ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வது இயற்கையின் நியதிகளில் ஒன்று. இந்த நிலையில் ஆணும், பெண்ணும்திருமணபந்தத்தில் இணையும் போது பெண்ணிடம் மாத்திரம் சீதனத்தை எதிர்பார்ப்பது மிகவும் கேவலமான காரியமாகும். ஒரு பெண்ணானவள் என்னதான் படித்தவளாக இருந்தபோதிலும் சீதனத்தைக் கொடுக்க முடியாத நிலையில் இருப்பாளானால் திருமணம் அவளுக்குக் கானல் நீராகவே மாறி விடுகின்றது.

வெளிநாடுகளில் வசிக்கின்றவர்கள் இங்குள்ளபெண்களிடம்அதிகசீதனம் கேட்பது வேதனைக்குரியது. சீதனம் கொடுக்க முடியாததால் பல இளம் பெண்களின் வெளிநாடு செல்லும் கனவுகானல்நீராகிப்போய்விடுகிறது. எமது சகோதர இனத்தவர்களான சிங்களவர் மத்தியில் இந்தச் சீதனம் கேட்டுவாங்குகின்ற பழக்கம் அறவே கிடையாது. அவர்கள் மத்தியில் ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பி விட்டால் அவர்களின் திருமணத்திற்கு சீதனம் ஒரு தடையாக இருப்பதில்லை. ஆனால் எமது தமிழ் இளைஞர்கள் ஒரு பெண்ணின் அழகு, கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை விட அவள் கொண்டு வருகின்ற சீதனத் துக்கே முக்கியத்துவம் வழங்குகின்றனர். கல்யாணத்தரகர்களும் சீதனம் அதிகளவில் கோரப்படுவதற்கு காரணமாக உள்ளனர். தமது தரகுப் பணத்தை அதிகளவில்கேட்டுவாங்குவதற்காகஇவர்கள் சீதனத்தொகையைஉயர்த்தமுயற்சிக்கின்றனர். மானமுள்ள எந்த ஆணும் ஒரு பெண்ணிடம் சீதனத்தை எதிர்பார்க்கமாட்டான். ஒரு பெண்ணின் அவலச் சாவுக்குக் காரணமானவர்கள் அதற்குரிய தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.

எஸ்.நிரஞ்சினி
கைதடி

# மியன்மார் செல்கிறார் பாப்பரசர்

வத்திக்கான், ஓக. 30
கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் பாப்பரசர் பிரான்சிஸ் எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் மியன்மாருக்குச் செல்லவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
புத்த மதத்தைச் சேர்ந்த மக்கள் அதிகமாக வாழ்ந்துவரும் மியன்மாரில் சிறுபான்மை இனத்தவர்களான ரோகிங்கய முஸ்லிம்கள் தங்களுக்கான சம உரிமைக்காகப்போராடிவருகின்றனர். இவர்களில் சிலர் ஆயுதம் ஏந்தியும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
ரொகின்கய இஸ்லாமியர்களை மியன்மார் இனச்சுத்திகரிப்புச் செய்கிறது என்றும் குற்றம் சுமத்தப்படுகிறது. பாப்பரசர் பிரான்சிஸ் அண்மையில், ரொகின்கய இஸ்லாமியர்களுக்கு சம உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.
இந்த நிலையில், எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி அவர் மியன்மாருக்குச் செல்லவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# எடப்பாடிக்கு ஆதரவு கொடுக்காதீர்கள்

## தினகரன் கோரிக்கை

சென்னை, ஓக. 30
"தமிழக சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்கும்படி ஆளுநர் வலியுறுத்தினால், எடப்பாடிக்கு உங்கள் ஆதரவை வழங்க வேண்டாம்" என்று தெரிவித்துள்ளார் டி.டி.வி. தினகரன்.
தினகரனுக்கு சுமார் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக உள்ளதால், சட்டசபையில் தனது பெருமைப்பான்மையை இழக்கும் நிலைக்கு எடப்பாடி தள்ளப்பட்டுள்ளார்.
தமிழக ஆளுநர் (பொறுப்பு ஆளுநர்) வித்யாசாகர்ராவ், பெரும்பான்மையை நிரூபிக்கும் படி விரைவில் எடப்பாடிக்கு உத்தரவிடுவார் என்று தெரியவருகிறது. அவ்வாறு உத்தரவிட்டால் அ.தி.மு. கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் தமது வாக்குகளை எட்ப்பாடிக்கு எதிராகச் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)

# ஜப்பானுக்கு மேலாக ஏவியது வடகொரியா

## மீண்டும் பதற்றநிலை



பியாங்யாங், ஓக. 30
பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா நேற்று அதிகாலை 5 மணியளவில் (இலங்கை நேரப்படி) ஏவுகணைச்சோதனையொன்றை நடத்தியது. இந்த ஏவுகணைச் ஜப்பானுக்கு மேலாகப் பறந்ததால் மீண்டும் போர்ப் பதற்றத்தில் உள்ளது கொரியத் தீபகற்பம்.
வடகொரியாவின் தொடர் ஏவுகணைச் சோதனைகள் காரணமாக உலக நாடுகள் அந்த நாட்டுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. குறிப்பாக அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகியன கூட்டாக இணைந்து வடகொரியாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை எடுத்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபை அண்மையிலும் வடகொரியாவுக்கு எதிராக மற்றொரு பொருளாதாரத் தடைத் தீர்மானத்தை நிறைவேற்றியது.
இதன்படி வடகொரியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் நிலக்கரி, இரும்பு, கடலுணவு ஆகியன முடக்கப்பட்டுள்ளன.
இந்தப் பொருளாதாரத் தடை வடகொரியாவை மேலும் கட்டுப்படுத்தும் என்று கருதப்பட்டது. ஆனால் எதையும் கண்டுகொள்ளாமல் வழக்கம்போல ஓர் ஏவுகணைச்சோதனையை வடகொரியா நடத்திக் காட்டியுள்ளது.
அதுவும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஜப்பானுக்கு மேலாக இந்தச் சோதனையை அது நடத்தியுள்ளது.
வடகொரியாவின் இந்தச் சோதனைக்கு ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே தனது கண்டனத்தைத் தெரிவித்தார். தனது தேசிய பாதுகாப்பை ஜப்பான் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. (ம)




"இந்தப் பொருளாதாரத் தடை வடகொரியாவை மேலும் கட்டுப்படுத்தும் என்று கருதப்பட்டது. ஆனால் எதையும் கண்டுகொள்ளாமல் வழக்கம்போல ஓர் ஏவுகணைச் சோதனையை வடகொரியா நடத்திக் காட்டியுள்ளது."

# ஆப்கானிஸ்தானில் தாக்குதல்

காபுல், ஓக. 30
ஆப்கானிஸ்தானில் நேற்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் 15 சிப்பாய்கள் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
ஹெல்மாண்ட் மாகாணம் நவா மாவட்டத்தில் உள்ள சந்தைப் பகுதிக்கு அருகே இராணுவச் சிப்பாய்கள் சென்ற வாகனத்தை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவ இடத்தில் 15 சிப்பாய்கள் உயிரிழந்தனர். ஏனைய 25 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடம் என ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

# அமெரிக்க அதிபர் ட்ரம்பின் இணைய பாதுகாப்புக் குழு கூண்டோடு பதவி விலகல்



வொஷிங்டன், ஓக. 30
அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் இணைய பாதுகாப்பு விவகாரங்களில் ஆலோசனை அளித்து வந்த குழுவைச் சேர்ந்த 7 பேரும் கூண்டோடு பதவி விலகினர்.
7 பேரும் கூட்டாக எழுதியுள்ள பதவி விலகல் கடிதத்தில், தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் ட்ரம்ப் அலட்சியமாக செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டி உள்ளனர். இணையப் பாதுகாப்புக்கு எழுந் துள்ள அச்சுறுத்தல் குறித்து போதிய அக்கறை செலுத்தவில்லை என்றும், இனவெறிக் குழுக்களின் வன்முறையை கண்டிக்க வில்லை என்றும் அவர்கள் ட்ரம்ப் மீது அதிருப்தி தெரிவித்துள்ளனர். (ம)



அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தை கடந்த சனிக்கிழமை கடும் புயல் தாக்கியது. புயலைத் தொடர்ந்து தற்போது அங்கு கடும் மழைபெய்து வருவதால் டெக்சாஸின் பல இடங்கள் வெள்ளக்காடாகியுள்ளன. (ம)

# புதன் பொய்கை





## கைவினை பயிற்சி

பழங்காலத்தில் களிமண் மூலம்தயாரிக்கப்பட்ட பொம்மைகள்பின்னர்மரம்,சீமெந்து ஆகியவற்றைக் கொண்டும் தற்போது காகிதக்கூழ் (Paperpub) மரத்தூள் ஆகியவற்றிலும்செய்யப்படுகின்றன. இவை வீட்டு அலங்காரப்பொருள்கிளில் தனியிடம் பிடித்துள்ளன.

பக். 18



## பாரி மகளிர் பரிமாறிய தங்கச் சோறு

பக். 21



## ஊடலும் கூடலும்

பக். 16



# 'நாத நர்த்தன வர்ணம்'

## கலையின்ப மிளிர்வான ஆற்றுகைப் பணிவு

தென்னவன்

கலைகள்ஆத்மார்த்தமானவை. அமைதியைப் பரிபாலனம் செய்யவும்,சிந்தனைகளைநல் வழிப்படுத்தவும் உகந்தவை. அவைதன்னகத்தாய் கொண்டுள்ள உயிர்மம் என்பது கால நியமமானது. அனாதியானது. உணர்வு நிலையில் அலாதியானது.

### 'நடன' அர்த்தங்களின் மனோபாவம்

இந்தவகையிலே அனைத்துக் கலைகளுமே இயல்நிலையில் மனித மனங்களை ஆற்றுப்படுத்தும் அசைவியக்க மந்திரங்களாகவும்,காண்பியங்களுள் தன்வயப்படுத்தும் மாத்திரைகளாவும் சிறப்பிடம்பெறுகின்றன. இவற்றுள்ஆடற்கலைஅற்புதக்கீர்த்தியுடைது. சுருதி,லய, ஞானம்என்றபாங்கினுள் கட்டுண்டு உடலும் உள்ளமும் நாட்டிய நர்த்தன பாவங்களின்ஒப்புமைவெளியாகசெயல்நிலை பெறுகின்றன. கதையாடல்களைதத்ரூபமான அழகியல் உருவகங்களாக பேசி விடுகின்றன. பார்வையாளரை இரசனைக்குட்படுத்தி விடுகின்றன.

இசையும் அசைவியக்க நெறியும் ஒன்றித்து ஊடாடுகின்ற இந்த ஆடற்கலை நாதவிநோதமாக ஆர்ப்பரிக்கிறது. மேன்மையுறுகிறது. அதுவிதமே தென்மராட்சி கல்வி வலயத்தினர் நான்காவது வருடமாக ஏற்பாடு செய்திருந்த 'நாத நர்த்தன வர்ணம் 2017' நிகழ்வுகளும் அமைந்திருந்தன.

1980 ஆம் ஆண்டுகளில் தென்மராட்சி பிரதேசத்தில் மட்டுமல்லாது தமிழர்கள் செறிந்து வாழ்ந்த பிராந்தியங்களில் கலைச் செயற்பாடுகளின் அசைவியக்கம் குறைவாகவே இருந்து வந்தது. ஆனாலும் அரசகல்வித்திட்டத்தில் நடன பாடம்உள்வாங்கப்பட்டு பல்கலைக்கழக பயிலரங்கில்பட்டக்கற்கைநெறியாகவும் உள்வாங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து பாடசாலை மட்டத்தில் கலை விருத்திச் செயற்பாடுகளில் முக்கிய பங்கினையும். சமய சமூகக் கட்டமைப்பின் போக்கில் தமிழர் கலாசார, பண்பாட்டு விழுமியக் கடப்பாடாகவும் நிகழ்த்தப் பெற்றன. தற்காலத்தின் வழியேயும் அவற்றின் பண்பியல்பு தொடர்கிறது. இன்னமும் வேண்டப்படுகிறது. தமிழர் பண்பாட்டின் மாண்பியமாக அரங்கேற்றம் காண்பதும், இரசனைகொண்டுகலைநிலையில் அவை அலங்கரிக்கப்படுவதும் வரவேற்கத்தக்கது.

### மாணவ ஆளுமைகளின் காண்பியம்

இந்தநிலையிலேபாடசாலைகளில்பயிற்றப்பட்ட மாணவர்களின் நிகழ்வுகளை பொதுவெளியில் காண்பியம் செய்யும் விதமாக களம் அமைத்து, 'நாதநர்த்தன வர்ணம்' என்ற தொனிப்போடு தென்மராட்சிகல்விவலயத்தினர்கடந்தநான்கு ஆண்டுகளாக இப் பணியை சிறப்பாக



செய்துவருகின்றனர். இந்தநிகழ்வுகளில் நகரப்புறப்பாடசாலைகளைவிடவும்கிராமப் புறப் பாடசாலை சார்ந்த மாணவர்களின் நிகழ்வுகள் அதிகளவில் ஆற்றுகை செய்யப்பட்டுவருகின்றன.

இசையும்நடனமும் இணைந்தவிதமான இன்னியம் இந்தகைங்கரியத்தைதென்மராட்சி கல்வி வலயத்தில் அறிமுகம் செய்து அதனை மாகாணப்பாடசாலைகளிலும் செயற்பாட்டு நிலைக்கு கொண்டு வந்த செயலூக்கத்தில் தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர்சு. கிருஷ்ணகுமார் தனிச்சிறப்பிடம் பெறுகிறார்.

இந்தஇசைவில்ஒருபகுதியாககிராமப்புறப் பாடசாலைகளான உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், கச்சாய் அ.த.க. பாடசாலை போன்றவற்றில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் தங்களுக்கான முறையான பயிற்சிகளை பெறுகின்றனர். வலய மட்டத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளில் பங்குகொள்கின்றனர். கலையைக்காண்பியம்செய்துநிகழ்வில் கலந்துகொள்வோரின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

### வழிநடத்தல்

தென்மராட்சிவலயக்கல்விப்பணிப்பாளராக சு. கிருஷ்ணகுமார் பதவியேற்றதன் பிற்பாடுமாயவர்களின்கல்விநிலையில் வளர்ச்சிகாணப்படுவதுடன்இணைப்பாடவிதானசெயற்பாடுகளிலும்மாணவர்கள் முன்னிலைவகிக்கும்தன்மைகளைஅவதானிக்க முடிகிறது. இசை ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்க 'ஏழிசை மாலை" என்னும் நிகழ்வினை மாதம் தோறும் நடத்திவருகின்றனர். அதே போன்று ஆடற்கலையை ஊக்குவிக்க "நாத நர்த்த வர்ணம்" என்னும் நிகழ்வினையும், சித்திரக் கலை பயிலும் மாணவர்களையும், ஆசிரியர்களை ஊக்கு





விக்க 'விஷன்" என்ற ஆக்கப் பொருள் களின் காட்சிப்படுத்தல் நிகழ்வினையும், வர்த்தக பாட மாணவர்களை ஊக்குவிக்க "தென்னருவி" என்னும் வர்த்தகப் பொருள் களின் காட்சிப்படுத்தல் நிகழ்வையும் வருடாந்தம் வலய மட்டத்தில் மேற்கொண்டு வருகின்றனர். தவிர, மேற்படிசெயற்றிட்டங்களை உள்ளிடக்கிய நூலாக 'தென்னவள்' என்னும் காலாண்டு சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றனர்.

### நாத நர்த்தனம் '2017'

அந்தவகையில் இந்தவருடத்துக்கான ஆற்றுகைகள் கள நிகழ்வாக அமைந்தன எனலாம். இந்த நிகழ்வுகள் கடந்த 12 ஆம் திகதி சாவகச்சேரி பொன் விழா மண்டபத்தில் இடம்பெற்றிருந்தன. தென்மராட்சி அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் இடம்பெற்றிருந்த இந்த நிகழ்வில் 14 பாடசாலைகளிலிருந்து கலந்துகொண்ட மாணவர்கள் தங்களது நாட்டிய நிகழ்வுகளை ஆற்றுகை செய்திருந்தனர். அங்கு இடம்பெற்றிருந்த வரவேற்பு நடனம் தொடக்கம் தில்லானா வரையான ஒவ்வொரு ஆற்றுகை நிகழ்வு ஒவ்வொன்றும் இரசனைக்குரியவகையில் அமைக்கப்பட்டிருந்தன. இந்தக் கள நிகழ்வில் புலம்பெயர்தேசத்தில் இருந்துவருகை தந்த மாணவனின் 'இசைநாத' நிகழ்வும் சிறப்புற அமைவுபெற்றிருந்தது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்குமுதன்மைவிருந்தினராகயாழ். மாவட்டச் செயலர் நா. வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திச் சபையின்பிரித்தானியாக்கிளையின்தலைவர் மருத்துவர் ஆறுமுகம் புவிநாதனும் மற்றும் மதிப்புறு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செல்வி. ரஜிதா சின்னத்துரை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் க. அருந்தவபாலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்திச் சபையின் புலம்பெயர்நாடுகளில் உள்ள கிளைகளின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தென்மராட்சி வலயத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற பத்து பாடசாலை மாணவர்கள் அணிவகுத்து நிற்க விருந்தினர்கள் ஊர்வலமாகவிழாமேடைக்கு அழைத்துவரப்பட்டனர். நிகழ்வில் வரவேற்பு நடனத்தை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவிகள் ஆற்றுகை செய்தனர். தொடர்ந்து மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மாணவிகளின் ஒழுங்கமைவில் அமைந்த 'சப்தம்' எனும் நடன நிகழ்வு அரங்கேறியது. அதனைத் தொடர்ந்து உசன் இராமநாதன் மகாவித்தியாலய மாணவர்களின் ஆரம்பகால போர் நிகழ்வுகளைச் சித்தரிக்கும் வகையிலான 'வாள்' நடன நிகழ்வு இடம்பெற்றது.

### இன்பமயமானஆற்றுகைநிகழ்வுகள்

அடுத்து மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய மாணவிகளின் பொம்மை நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து கொடிகாமம் அ.த.க. பாடசாலை மாணவிகளின் பாம்பு நடனம் சிறப்புற அமைந்திருந்தது. இந்த ஆற்றுகை நிகழ்வில் பங்குபற்றிய அனைத்துமாணவிகளும் தமது உடலை வளைத்து நர்த்தனித்து ஆடிய விதம் அனைவரையும்கவர்ந்திருந்தது. வரணி மத்திய கல்லூரி மாணவிகளின் 'கீர்த்தனை' மற்றும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளின் 'பதவர்ண' நடன நிகழ்வுகளும் அற்புதமாக மேடை அமைவில் அலங்காரம் பெற்றன.

அதேவேளை எமது கலாசாரத்திற்கும் ஏனைய இனக் கலாசாரத்துக்கும் வேறுபாடுகள் உள்ளது என்பதைச் சித்தரிக்கும் வகையில் நாவற்குழி மகா வித்தியாலய மாணவிகளின் கண்டிய நடனம் அமைந்திருந்தது. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவிகளின் கரகாட்டம், மட்டுவில் கமலாசனி வித்தியாலய மாணவிகளின் குடை நடனம், கச்சாய் அ.த.க. பாடசாலை மாணவிகளின் குறவன்குறத்திநடனம், மிருசுவில் அ.த.க. பாடசாலைமாணவிகளின்பானை நடனம் என்பனவும் பார்வையாளர்களை காண்பியத்தில் அழகுறக்கட்டிப்போட்டிருந்தன. கையில் இருப்பது மண் பானை என்பதை கருத்தில் கொண்டு மாணவிகள் தமக்குவழங்கப்பட்டபயிற்சியினைசிறப்பாகச்வெளிப்படுத்தியிரந்தமைபாராட்டத்தக்கது. இந்த நிகழ்வின் அசைவில்பிரதானபங்காளர்களான இசை ஆசிரியர்களும், நடன ஆசியர்களும் அவர்களோடுஒருங்கமைவு பெற்ற அணிசேர் கலைஞர்களும் தமக்குரித்தான பங்களிப்பினை திறம்பட மேற்கொண்டனர். அவர்களின் பணி பாராட்டத்தக்கது. கலை நிலையில் அன்பால்சீராட்டத்தக்கது.

### வேண்டுதல்

ஆக, 'நாத நர்த்தன வர்ணம் 2017' நிகழ்வுகள் வருடாந்தம் நடத்தப்பட வேண்டும். மாணவர்களின் அறிவுவிருத்தியும், ஆளுமைவிருத்தியும்மேம்படுத்தப்பட வேண்டும். சமூக இணைவில் அவர்களை பண்படுத்த இவ்வாறான பண்பாடுசார் கலைஅர்த்தங்களைபாடசாலைமட்டத்தில் இருந்தே ஊட்டம் செய்ய வேண்டும். கலை, கலாசாரப்பண்பாட்டுவிழுமியங்களை மகத்துவம் செய்யும் பண்பின் இயல்பை பிறழ்வின்றிக் கைக்கொள்ள எல்லோரையும் வழிநடத்த வேண்டும். கலைகளின் ஆற்றுகை என்ற செயல்நிலை வழியே நற்சமுதாயப்படிமங்களைகூட்டிணைவாக கட்டமைத்துக்கொள்ள வேண்டும்.

"கலை இன்பமே நிலை இன்பம்."

# ஊடலும் கூடலும்

வளவை வளவன்



குர்ர்... குர்ர்... குர்ர்...'

'என்ன சத்தமிது...?'

சற்றே திறந்திருந்த சாளரத்தினூடாக என் விழிகளை வெளியே மேய விட்டேன்.

மீண்டும், 'குர்ர்... குர்ர்... குர்ர்...'

சத்தத்தைத் தொடர்ந்து மாடப்புறாக்கள் இரண்டு நின்ற இடத்திலேயே நின்றவாறு வட்டமடித்துச் சுற்றிக்கொண்டிருந்தன.

அந்தப் புறாக்கள் இரண்டும் அந்த இடத்திலேயே நின்று சுற்றுவதும் 'குர்ர்... குர்ர்...' என்று ஓசை எழுப்புவதும் ஓசைக்கு ஒத்திசைவாகத் தலையை நிமிர்த்துவதுமாக தமது செயலை நிறுத்தாது தொடர்ந்தன.

பாரதி வீட்டுப் பூனைக்குட்டிகளைப்போல சாம்பல் நிறத்தில் ஒன்றும் கருஞ்சாந்து நிறத்தில் ஒன்றுமாக இருந்த அவை, அந்த இடத்திலேயே நின்று கால்களால் தரையில் வட்டமிட்டு ஒலி எழுப்புவதும் ஏதோ ஒரு உணர்ச்சிப் பரவசத்தில் எழுந்து வானில் வட்டமிட்டு மீளவும் தரையில் வந்து குந்தி கால்களால் வட்டமிட்டு வட்டமிட்டுத் தொடர்ந்தன.

சந்தேகமும் சஞ்சலமும் பற்றிக்கொண்ட நிலையில், எனது பார்வையும் வட்டமடித்து வந்து அவ்விடத்திலேயே நிலைகுத்தி நின்றது.

அதில் ஒரு புறாவின் கழுத்தில் மயிர்கள் சிலிர்த்து எழுந்து கம்பீரமாக நின்றன. அந்தக் கம்பீரத்தின் அழகு தன்னை ஆண் என்று அடையாளமிட்டது. மற்றையது தலையைச் சற்று ஒயிலாகச் சாய்த்து அங்குமிங்கும் பார்த்தது. 'ஒருவரும் இல்லை' என்பதுபோல. நாணம் மேலிட்ட பெண்போல ஆண்புறாவின் சொண்டு(உதடு) மீது தன் சொண்டை ஒத்தி ஒத்தி முத்தம் சிந்திக் கொண்டது பெண் புறா. இதற்காகத்தானே உன்னைச்சுற்றி வந்தேன் என்பதுபோல ஆண் புறா பேடையை முத்தமிட்டது. அது தாவித்தன் ஊடலைத் தீர்த்துக்கொண்டதும் இரு புறாக்களுமே தமது மகிழ்வின் நிறைவைப் பூர்த்தி செய்தனவாக மீண்டும் ஒருதடைவை முத்தமிட்டுவிட்டுப் படபடவெனச் சிறகடித்தவாறு ஆனந்தம் மேலிட வானில் பறந்து மகிழ்வின் நிறைவோடு சென்றன.

முற்றத்துப் புறாக்களின் இந்தச் செயல் ஏதோ ஒன்றை உணர்த்துவதாக இருந்தது. அந்தச் சிறுபொழுதுக்குள் அந்த இளஞ்சிட்டுக்கள் மனதைத் தட்டி எழுப்பி எதையோ உரைப்பது போல ஒருவித நினைப்பு மெலிதாக எழுந்து உள்ளத்தைச் சல்லடை போட்டது.

ஊடல் என்பதும் கூடல் என்பதும் இதுதானோ? ஊடல் உவகை என்ற அதிகாரத்தை வள்ளுவர் இப்படியான ஒரு காட்சியைக் கண்டு தெளிந்துதான் குறளில் வகுத்தானோ...?

சிற்றறிவு படைத்த இந்த மாடப்புறாக்கள் தமது உடல் வேட்கையைத் தீர்த்துக்கொள்ள எத்துணை வினைத்திறன்களை வெளிப்படுத்துகின்றன. அதை அவை வெளிப்படுத்தும் விதம், புலப்படுத்தும் செயல் காட்சியாக நகரும் விதமும் எவ்வளவு அற்புதமானவை...!

கூடி மகிழ்வதற்கு ஊடல் அவசியமானதுதானன்றோ...? எமது இலக்கியங்களும் அப்படித்தானே கற்றுத்தருகின்றன.

'ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின்' (குறள் 1330)

காமத்தின் வெளிப்பாட்டையும் அதனால் பெறும் இன்ப நுகர்வையும் தன் மனத்திரையில் கண்டு அறிவென்ற எழுத்தாணி கொண்டு பொறித்துச் சென்றானே வள்ளுவன். என ஐயுற்று நின்றால், இன்னொர் கவிஞன், 'இன்று கூடி மகிழ்வோமென்றால் விழிக்கோணத்திலே நகை காட்டிச் செல்வாள் அம்மா' எனத் தனது மூன்று காதலிலே முத்துத் தமிழில் காதல் ஊடல் பற்றிய தேடல்களைப் பாடிச் செல்கிறான். கூடலில் தோற்றதாகவோ, தேற்றதாகவோ கூறவியலாத தவிப்பில் அம்மா... அம்மா... என தன் உள்ளத்தின் ஏக்கத்தை கவிதையாக்கி விளித்துச் சென்றுள்ளான். எல்லாமே வென்றெடுத்துத் தந்த பாரதிக்கு ஏனிந்த விழிப்பும் அதன் பின்னேயான தோல்வியும் தொக்கி நிற்கின்றதோ? இந்த ஐயப்பாட்டை அறிய மீண்டும் ஒரு தேடல்...

ஆம், வள்ளுவன் என்ற அந்தப் போராளியில் இல்லாததா? பார்த்து விடுவோம் ஒரு கை என்று குதித்தான் பாரதி. குதித்தவனுக்குக் கிடைத்தது புதையல். எல்லாவற்றுக்கும் விடை கூறுவதாக அமைந்து கொண்டது.

*'ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமம் கூடியார் பெற்ற பணன்' (குறள் 1109)*

காமம் கூடியவர் கூடலோடு நிறைந்து போவதுதான் என்பதை உணர்ந்து கொண்டான். ஒரே ஒரு கணம் நின்று சிந்தித்தான். ஏதோ ஒன்று அவனை உந்தித் தள்ளியது. 'பெண்மை வாழ்கொன்று கூத்திடுவோமடா' எனச் சங்கநாதம் செய்தான். பின் தன் கவிதா வரிகளுக்கு இலக்கணம் தந்தான்.

'போற்றிதாய் என்று தாளங்கள் கொட்டடா
போற்றி தாய் என்று பொற்குழல் ஊதடா'

என்று தோத்திரம் பாடித் தொழுதிட்டான்.

தாய்மைக்குள் எல்லாமே அடங்கிப்போவதை அவன் உணர்ந்ததும் உரைத்து நிற்கின்றான். இதைச் சிந்தித்ததால், நாமும் தாயை மகிழ்ந்து போற்றி போற்றி என்று கூத்திடத் தோன்றுகின்றதல்லவா? இதைச் சொன்னதும் பொக்குவாய்க் கிழவி ஒன்று இளநகை நகைத்துவிட்டுச் சொன்னது இதுதான். 'தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை' இதற்கு ஆம் என்று உரைப்பதைத் தவிர தமிழில் வேறு ஏதும் உண்டோ? தாய்மை இங்கே சிரித்துச் செழிப்பது அழகாகத் தோன்றுகின்றதல்லவா?



# பழந்தமிழ் இலக்கியத்தில் ஊழ்—II

எஸ்.மல்லிகா



தமிழிலுள்ள ஐம்பெருங்காப்பியங்களும், ஐஞ்சிறு காப்பியங்களும் பிற இலக்கியங்களும் ஊழ்வினைப் பயன் குறித்துத் தெளிவாக விளக்கு கின்றன. ஐம்பெருங்காப்பியங்களில் அடங்கும் வளையாபதி, குண்டலகேசி ஆகிய நூல்களிலிருந்து ஒருசில பாடல்கள் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளன. ஏனையவை காலவெள்ளத்தில் கரைவுற்று அழிவடைந்து விட்டன. இதில், சிறுகாப்பியமான 'யசோதர காவியம்' குறிப்பிடும் வினைக்கோட்பாடு குறித்து நோக்குவோம்.

> தீவினையைத் தவிர்த்து நடந்தால் கிடைக்கும் நற்பயனும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. தீவினை தவிர்த்து, நல்வினை ஆற்றிப் பிறவிப்பயனை அடையவேண்டும் என்ற காவிய நோக்கத்தை ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால், இவ்வுலகில் துன்பம் இருக்காது.

**யசோதர காவியத்தில் ஊழ்வினைக் கோட்பாடு**

'யசோதர காவியம்' என்பது சமண சமய நூல். யசோதரன் என்னும் அவந்திநாட்டு மன்னன் பற்றிய வரலாறு கூறுவது. இந்நூல் முதன் முதலில் வடமொழியில் இயற்றப்பட்டது. பின்பு தமிழ் மொழியில் சிறுகாப்பியமாக இயற்றப்பட்டுள்ளது. இது ஐந்து அத்தியாய அங்கங்களாக வகுக்கப்பட்டு 330 செய்யுள்களைக் கொண்டுள்ளது. நல்வினை தீவினைகளால் ஏற்படும் விளைவுகளை இந்த நூல் நன்கு எடுத்துரைக்கிறது. இந்த உண்மையைப் புலப்படுத்தும் நோக்கமாகவே இந்தக் காவியம் இயற்றப்பட்டுள்ளது என்றும் கூறலாம். இதனைக் காவியத்தின் காப்புச் செய்யுள் மற்றும் நூற்பொருள் செய்யுள் ஆகியவற்றில் காணமுடியும்.

**உலக மூன்றும் ஒருங்குணர் கேவலத்**
**தலகி லாத அனந்த குணக்கடல்**
**விலகி வெள வினை வீடு விளப்பதற்**
**கிலகு மாமலர்ச் சேவடி யேத்துவாம் (காப்புச் செய்யுள்)**

கொடிய வினைகளின் தாக்கத்தினின்றும் நீங்கி, வீடு பேற்றினை அடைவதற்கு இறைவனை வழிபடவேண்டும் என்று வலியுறுத்துகிறது இச்செய்யுள்.

**மருவு வெளவினை வாயின் மறுத்துடன்**
**பொருவில் புண்ணியம் போகம் புணர்ப்பதும்**
**வெருவு செய்யும் வினைப்பயன் இற்றெனத்**
**தெரிவு றுப்பதும் செப்புத லுற்றதே (நூற்பொருள் செய்யுள்)**

நல்வினை நற்பயனை அளிக்கும் என்றும், உயிர்களுக்கு அச்சத்தை விளைவிக்கும் தீவினையின் பயன் இத்தன்மையினதென்றும் எடுத்துரைப்பது இந்தக் காவியம் என்று நூற்பொருள் செய்யுள் கூறுகிறது. இவ்விரு செய்யுள்களின் மூலமும், காவிய நோக்கம் தெளிவாக விளங்குகிறது.

மனிதர்கள் பல்வேறு பிறவிகளை எடுப்பதற்கு ஊழ்வினைதான் காரணம். இந்த வினையின் விளைவைப் பொறுத்து, அவரவர் பிறவிகள் அமைகின்றன. ஒருவர் இறப்பது, மறுபிறப்பு எடுப்பதற்கே என்கிறது பின்வரும் செய்யுள்.

**கறங்கென வினையினோடிக் கதியொரு நான்கி னுள்ளும்**
**பிறந்தநாம் பெற்ற பெற்ற பிறவிகள் பேசலாகா**
**இறந்தன இறந்து போக எய்துவ தெய்திப் பின்னும்**
**பிறந்திட இறந்த தெல்லாம் இதுவுமவ் வியல்**
**பிற் றேயாம்**

நாம் காற்றாடி போலச் சுழன்று சுழன்று மீண்டும் மீண்டும் பிறந்துகொண்டிருக்கிறோம். இத்தகைய பிறவிகளின் எண்ணிக்கை அளவற்றது என்றும் இந்தப் பிறப்புக்கு வினை ஏதுவாதலையும் இப்பாடல் தெளிவுறுத்துகிறது.

இதேபோன்று, ஒருவர் செய்யும் வினையானது அவர் இறந்தவுடன் அழிவது அல்லவென்றும் அது பிறவிதோறும் தொடர்ந்து அதற்குரிய பயனை அளிக்குமென்றும் காவியம் கூறுகின்றது. இதனைப் பின்வரும் செய்யுள் வாயிலாக அறிய முடிகிறது.

**அருவினை விளையு ளாய அருந்துயர்ப் பிறவி தோறும்**
**வெருவிய மனத்து நம்மை வீடில விளைந்த வாறும்**
**திருவுடை யடிகள் தந்த திருவறப் பயனுந் தேறி**
**வெருவிதா விடுத்த வாழ்க்கை விடுவதற் கஞ்ச லுண்டோ?**

நாம் செய்த வினைப் பயனைப் பிறவிதோறும் பிறந்து அனுபவித்தே தீரவேண்டும் என்று இங்கு வலியுறுத்தப்படுகிறது. இதேபோன்று, முற்பிறவியில் நல்வினை செய்திருந்தால் அது நல்விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அதனை மும்மடங்காகச் செய்யும் பட்சத்தில் இந்திர உலகத்துக்கு சென்றடையலாம் என்றும் பின்வரும் செய்யுள் கூறுகின்றது.

**முந்துசெய் நல்வினை முளைப்ப வித்தலைச்**
**சிந்தைசெய் பொருளொடு செல்வ மெய்தினாம்**
**முந்தையின் மும்மடி முயலிற் புண்ணியம்**
**இந்திர வுலகமும் மெய்த லாமெனா**

யசோதரனின் தந்தையான அசோகன் புண்ணியத்தின் பயனை எடுத்துரைப்பது போல இப்பாடல் அமைந்துள்ளது.

மேலும், நாம் செய்யும் வினைகள்தான் அடுத்த பிறப்பைத் தீர்மானிக்கின்றன என்பதைக் காவியம் அழுத்திக் கூறுகிறது. நல்வினை செய்தால், நல்ல மனிதர்களாகவும் தீவினை செய்தால் கீழ்ப்பிறவியான விலங்குகளாகவும் பிறக்க நேரிடும் என்று இக்காவியம் அச்சுறுத்துகிறது. யசோதரனும் அவனுடைய தாயாரான சந்திரமதியும், யசோதரனின் மனைவியான அமிர்தமதியால் கொலையுண்டு விலங்குகளாக மறுபிறவி எடுக்கின்றனர் என்ற செய்தியை இந்தக்காவியம் உரைக்கிறது. இதற்கு, அவரவர் செய்த வினைப் பயனே காரணம் என்பதனையும் விளக்கத் தவறவில்லை.

**நஞ்சது பரந்த போழ்தின் நடுங்கினர் மயங்கி வீழ்ந்தார்**
**அஞ்சினர் மரணஞ் சிந்தை யடைந்தது முதல தங்கண்**
**புஞ்சிய வினைகள் தீய புகுந்தன பொறிகள் பொன்றித்**
**துஞ்சினர் துயரத் துஞ்சா விலங்கிடைத் துன்னி னாரே**

சந்திமதியும் யசோதரனும் பிறந்தது முதல் எண்ணிய மிகுதியான தீய எண்ணமும், செய்து கொண்ட தீச்செயலுமே அவர்கள் மறுபிறப்பில் விலங்குகளகப் பிறக்க நேரிட்டது என்கிறது இப்பாடல்.

இவ்வாறு காவியம் முழுமையும் இருவினைப்பயன் குறித்த விளக்கங்கள் தரப்படுகிறது. இதில், தீவினையைத் தவிர்த்து நடந்தால் கிடைக்கும் நற்பயனும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. தீவினை தவிர்த்து, நல்வினை ஆற்றிப் பிறவிப்பயனை அடையவேண்டும் என்ற காவிய நோக்கத்தை ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால், இவ்வுலகில் துன்பம் இருக்காது என்பதும் இடித்துரைக்கப்படுகிறது.

(தொடரும்)

















பிரான்ஸின் பரிஸ் நகரில் அமைந்துள்ள சிறி மாணிக்க விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. 22ஆவது ஆண்டாகவும் சிறப்புற இடம்பெற்ற தேர்த் திருவிழா நிகழ்வுகளில் வழமை போன்று பிரான்ஸிலிருந்தும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# சிறப்புற இடம்பெற்ற கைவினை பயிற்சி



டி.அதிசயா

வீட்டிலிருந்தவாறே கைவினைக் கலைகள் செய்து அவற்றின் மூலம் பொருளீட்டுவோர் இன்று அதிகரித்து வருகின்றனர். இத்தகைய கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு வலி. மேற்கு சமூக மேம்பாட்டு இணையத்தின் அனுசரணையுடன் கடந்த 8ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை தேசிய அருங்கலைகள் பேரவை 'காகிதக்கூழ்' மூலம் அழகுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சிப் பட்டறையை நடத்தியிருந்தது. இதில் 16 பயனாளிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

சுழிபுரம் பாணாவெட்டியில் உள்ள சமூக மேம்பாட்டு இணையத்தின் அலுவலக மண்டபத்தில், இணையத்தின் காப்பாளர் க.மதனகோபாலகிருஸ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையை தேசிய அருங்கலைகள் பேரவையின் கைப்பணி விரிவாக்க உதவியாளர் ஆரம்பித்து வைத்தார். சிற்பம் மற்றும் ஓவியக் கலைஞர் சு.பத்மநாதன் வளவாளராகக் கலந்துகொண்டார். வலி. மேற்கு பிரதேச செயலக தொழிற்றுறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சுரேசுதா, தேசிய அருங்கலைகள் பேரவையின் அபிவிருத்தி உதவியாளர், இணையத்தின் செயலாளர் ப.கேசவதாசன் மற்றும் இணைய உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கு தேசிய அருங்கலைகள் பேரவையால் சான்றிதழ்களும், சமூக மேம்பாட்டு இணையத்தினால் சிறுதொகை ஊக்குவிப்பு நிதியும் வழங்கப்படவுள்ளன. அத்துடன், அவர்களின் கைவண்ணத்தில் உருவான பொம்மைகளின் கண்காட்சியும் குறித்த இணையத்தின் மண்டபத்தில் விரைவில் இடம்பெறவுள்ளது.



**காகிதக்கூழ் பொம்மைகள்...**

பழங்காலத்தில் களிமண் மூலம் தயாரிக்கப்பட்ட பொம்மைகள் பின்னர் மரம், சீமெந்து ஆகியவற்றைக் கொண்டும் தற்போது காகிதக்கூழ் (Paper pub) மரத்தூள் ஆகியவற்றிலும் செய்யப்படுகின்றன. இவை வீட்டு அலங்காரப் பொருட்களில் தனியிடம் பிடித்துள்ளன. சந்தையிலும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

காகிதக்கூழ் பொம்மைகளின் செய்முறை பற்றி வளவாளர் பின்வருமாறு கூறினார்.

காகிதக்கூழ் பொம்மைகளை இரண்டு விதமாகச் செய்யலாம். ஒன்று கழிவுக் காகிதங்களைத் தண்ணீரில் ஊறவைத்துச் செய்தல். இதில், பத்திரிகைத்தாள்கள் சிறப்பானவை. விரைவில் உக்கலடையும் தன்மை மற்றும் அவற்றின் மென்மை என்பன பொம்மைகள் செய்வதற்கு மிகவும் இலகுவாகவும் சிறப்பாகவும் இருக்கும். இவ்வாறு தண்ணீரில் ஊறிய காகிதத்தை எடுத்துக் கோதுமை மா கலவையுடன் துருசு எனும் கிருமிநாசினியைக் கலந்து பசையாகப் பாவித்து, சீமெந்து மற்றும் மரம் போன்ற சிலைகளில் ஒட்டி உருவத்தைச் செய்யலாம். பசை காய்ந்த பின்னர் காகிதக்கூழ் பொம்மையை எடுத்து, விரும்பிய வண்ணம் வர்ணம் தீட்டி அலங்கரிக்கலாம்.

இரண்டவாது வகை குறித்த காகிதங்களை எடுத்து மாவாக இடித்து, கோதுமை மா மற்றும் துருசுடன் பிசினையும் வெண்கட்டித்தூளையும் கலந்து பசையாக்கி விரும்பிய உருவங்களைச் செய்யலாம். இது நாம் கடைகளில் வாங்கும் 'கிளே' (பசை) போன்றிருக்கும். இதில் உருவங்களைச் செய்த பின்னர், விரும்பிய வண்ணம் அலங்கரிக்கலாம்.

"சமூக மேம்பாட்டு இணையத்தின் அனுசரணையில், தேசிய அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டில் இடம் பெற்ற காகிதக்கூழ் கைவினைப் பயிற்சி நெறியில் 3 கிராமங்களைச் சேர்ந்த 16 பயனாளிகள் கலந்து கொண்டனர். அனைவருமே ஆர்வத்துடன் பயிற்சியில் பங்குபற்றினர். இவர்கள் சிறந்த ஓவியராக, சிற்பியாக, ஆக்கபூர்வப் பயனாளியாக வரவேண்டும் எனும் பெருவிருப்புடன் அனைத்துக் கலை நுணுக்கங்களையும் கற்றுக்கொடுத்தேன். இதனைச் சிறந்த முறையில் கற்றுத்தேறி, அடுத்தவர்களுக்கு இந்தக் கலைக் கையளிப்பைச் சிறந்த முறையில் செய்ய வேண்டும் என்பதுதான் அவர்களிடம் நான் எதிர்பார்க்கும் கைம்மாறு. இந்தப் பயிற்சிப் பட்டறையை ஏற்பாடு செய்தவர்கள், அதற்கு அனுசரனை வழங்கியவர்கள், பயிற்சி நெறியில் பங்கேற்றவர்கள் மற்றும் இந்தத் தகவலை அடுத்தவர்களுக்கு எடுத்துச் செல்லும் பத்திரிகை என அனைவருக்கும் இவ்விடத்தில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்றார் பத்மநாதன்.

**கை கொடுக்கும் கைத்தொழில்...**

இந்நிகழ்வில் இணையத்தின் செயலாளர் உரையாற்றுகையில், "கைத்தொழில் ஒன்றைக் கற்றிடுவோம், கவலை இல்லையென ஒத்திடுவோம் என்ற ஆன்றோர் வாக்குக்கு இணங்க, படித்தவர் முதல் பாமரர் வரை கைத்தொழில் பழகியுள்ளனர். இதிலும், கைவினைப்பொருட்களுக்கு அதிக வரவேற்பு உள்ளது. வீட்டிலிருந்தவாறே கைவினைப் பொருட்களைச் செய்து சந்தைப்படுத்திப் பொருளீட்டலாம்.

காகிதக்கூழில் பொம்மை, பூங்கொத்து, பூச்சாடி என வகை வகையாகச் செய்யலாம். இது சிறந்த பொழுதுபோக்காக அமைவதுடன், கலையுணர்வையும் எம்மில் ஏற்படுத்தும். கலைகள் மனதுக்கு அமைதியைத் தரவல்லன. அந்தவகையில், இந்தப் பயிற்சி நெறியில் பங்கேற்கும் பிள்ளைகள் சிறந்த முறையில் பயிற்சி பெற்று, அடுத்தவர்க்கும் அதனைக் கையளிக்க வேண்டும். இதன் மூலம் தமது பொருளாதாரத்தை வளம்படுத்த வேண்டும்" என்றார்.

**முன்னேற்றத்தில் கைத்தொழில்...**

கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் ஊக்குவிப்பு தற்போது பல இடங்களிலும் முன்னேற்றகரமாக நடைபெற்று வரும் நிலையில், இந்தப் பயிற்சி நெறி நடத்தப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தமது அனுசரணையுடன் ஏனைய பயிற்சி நெறிகளும் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக இணைய உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நலிவடைந்த மக்களைக் கைதூக்கிவிடும் பொருட்டு, சமூக நல்லெண்ணம் படைத்த உள்ளங்களால் சமூக மேம்பாட்டு இணையம் உருவாக்கப்பட்டது. கல்வி, பொருளாதார, சமூக, அரசியல் துறைகளில் தம்மைத்தாமே மக்கள் உயர்த்திக் கொள்வதற்குக் கைகொடுக்கும் அமைப்பான இது, தொழிற்றுறைகளிலும் மக்களுக்கு வழிகாட்டல்களை வழங்கிப் பயிற்சியளித்து வருவது வரவேற்கத்தக்கது.

# வரலாற்றில் இன்றைய தினம் 30.08.2017

1799 - பிரிட்டன் படைகளால் அனைத்து டச்சு, கடற்படையணிகளும் பிரான்ஸ் புரட்சியில் இரண்டாம் போரின் போது கைப்பற்றட்டன.

1945 - ஹொங்கொங் பிரிட்டிஷ் ஆயுதப் படைகள் ஜப்பானிடமிருந்து விடுவிக்கப்பட்டன.

1974 - பெல்கிரேட் - டோட்மண்ட் ரயிலொன்று சக்றெப் ரயில்நிலையத்தில் தடம்புரண்டதில் 153 பயணிகள் உயிரிழந்தனர்.

1995 - பொஸ்னியபோர்: பொஸ்னிய சேர்பிய படைகளுக்கு எதிராக நேட்டோவால் 'ஒப்பரேசன் டெலிபேறெற்' எனும் பெயரிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1987 - ஜே.ஆரின் துணிச்சலைப் பாராட்ட என்ன உள்ளது என சிறிமாவோ கேள்வி.

1992 - ராஜீவ் கொலை வழக்கு குற்றப் பத்திரிகை தமிழில்.

1995 - அளவெட்டிவாசிகள் பலர் கும்பிளாவளையில் சிறை.

2016 - மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இராணுவத்தால் முட்டுக்கட்டை. இது நல்லிணக்கம் அல்ல என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா.



1991 - அசர்பைஜான், சோவியத் யூனியனிடமிருந்து சுதந்திரம் பெற்றது.

# குருப்பெயர்ச்சி பலன்கள்



தன்னம்பிக்கையும் இரக்கமும் கொண்டவர்களே!

குரு பகவான் உங்கள் ராசிக்கு 3ஆம் இடத்தில் 2.9.2017 முதல் 2.10.2018 வரை அமர்ந்துகொண்டு பலன் தர இருக்கிறார். சகிப்புத் தன்மை அவசியம். பணப் பற்றாக்குறை நீடிக்கும். முக்கிய விஷயங்களில் ஆலோசித்து முடிவெடுப்பது நல்லது. குடும்ப விஷயத்தில் மற்றவர்களின் தலையீட்டை அனுமதிக்க வேண்டாம்.

**குரு பகவானின் பார்வை:** குரு தனது 5ஆம் பார்வையால் உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்தைப் பார்ப்பதால் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும். கணவன் மனைவிக்குள் இருந்துவந்த மனக்கசப்பு நீங்கும். புது வேலை அமையும். திருமணம் கூடி வரும். குரு பகவான் தன் 7ஆம் பார்வையால் 9ஆம் வீட்டைப் பார்ப்பதால் சிந்தித்துச் சாதிப்பீர்கள். தந்தையின் ஆரோக்கியம் சீராகும். சொத்துப் பிரச்னை தீரும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். கடன்களைத் தீர்க்க யோசிப்பீர்கள்.

குரு பகவான் தனது 9ஆம் பார்வையால் உங்களின் இலாப வீட்டைப் பார்ப்பதால் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். வழக்கு சாதகமாகும்.



**சிங்கம்**

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

உங்கள் ராசிக்கு 4 மற்றும் 9ஆம் இடங்களுக்கு உரிய செவ்வாயின் சித்திரை நட்சத்திரம் 3ஆம், 4ஆம் பாதம் துலாம் ராசியில் 2.9.2017 முதல் 5.10.2017 வரை குரு பகவான் செல்வதால் காரியத்தில் கண்ணாக இருப்பீர்கள். வீட்டை மாற்றியமைக்க வங்கிக் கடனுதவி கிடைக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியம் சீர்படும்.

06.10.2017 முதல் 7.12.2017 வரை ராகு பகவானின் சுவாதி நட்சத்திரத்தில் குரு பகவான் செல்வதால் முக்கிய முடிவுகளைத் தைரியமாக எடுப்பீர்கள். பிறமொழி பேசுபவர்களால் அனுகூலம் உண்டாகும். வீடு களைகட்டும். உங்கள் ராசிக்கு 5ஆம் மற்றும் 8ஆம் வீடுகளுக்கு உரிய குரு பகவானின் சுய நட்சத்திரமான விசாகம் 1, 2, 3ஆம் பாதம் துலாம் ராசியிலேயே 8.12.2017 முதல் 13.2.2018 வரை மற்றும் 4.7.2018 முதல் 2.10.2018 வரை செல்வதால் பண வரவு உண்டு. சொத்து வாங்குவது, விற்பது இலாபகரமாக முடியும். பிள்ளைகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

குரு பகவானின் அதிசார வக்கிர சஞ்சாரம்: 14.2.18 முதல் 10.4.2018 வரை விசாகம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் குரு பகவான் அதிசார வக்கிரமாகச் செல்வதால் சிலருக்கு இடமாற்றம் உண்டாகும். தாயாரின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தூக்கமின்மை, நெஞ்சு எரிச்சல் வந்து நீங்கும்.

குரு பகவானின் வக்கிர சஞ்சாரம்: 7.3.2018 முதல் 3.7.2018 வரை தன் சுய சாரமான விசாகம் நட்சத்திரம் துலாம் ராசியில் குரு பகவான் வக்கிர கதியில் செல்வதால் உடல் அசதியும் மனச் சோர்வும் ஏற்படக் கூடும். மற்றவர்களின் விடயங்களில் தலையிடாதீர்கள்.

வியாபாரத்தில் யாரையும் நம்பாமல் நீங்களே முடிவெடுங்கள். உத்தியோகத் தில் கடினமாக உழைத்தாலும்; யோசித்தே செயல்படவும்.

மாணவர்களே! தொடக்கத்தில் இருந்தே படிப்பில் கவனம் செலுத்துங்கள். கஷ்டப்பட்டுப் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண் பெற முடியும். கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பரிசும் பாராட்டும் பெறுவீர்கள்.

கலைத்துறையினரே! விமர்சனங் களும் வதந்திகளும் இருந்துகொண்டு தான் இருக்கும். ஆனாலும், கலைநயம் மிகுந்த உங்களின் படைப்புகள் பேசப்படும்.

மொத்தத்தில் இந்த குருப்பெயர்ச்சி உங்களை சில நேரம் தவிக்க வைத்தாலும், அனுபவ அறிவாலும், கடின உழைப்பாலும் சாதிக்க வைக்கும்.

## நாளை

**31.08.2017**

வியாழக்கிழமை

**ஆவணி - 15**

திதி: தசமி முழுவதும்
நட்சத்திரம்: மூலம் பி.இ.06.01 வரை
சுபநேரம்: 07.35–09.05 வரை
ராகுகாலம்: 01.35–03.05 வரை

## நூல் அறிமுகம்

# சிறுவர்களுக்கான மேடைப் பேச்சுக்களைத்தரும் 'மேடையிலே பேசுவோம்'

செ.மகேஷ்

சிறுவர்களின் ஆற்றலைமேம்படுத்தும் ஆவலுடன் முயன்றுழைக்கும் பெற்றோர், பெரியோர் யாவருமே விரும்பும் வகையில் 'மேடையிலே பேசுவோம்' என்ற சிறுவர்களுக்கான மேடைப் பேச்சு நூல் ஒன்று வெளிவந்துள்ளது. பெற்றவர்கள் வரவேற்கும் வகையிலும் கற்றவர்கள் போற்றும் வகையிலும் இந்த நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பிரபல ஓவியர் ஆசை இராசையா வரைந்த அழகிய அட்டைப்படம் நூலுக்கு மேலும் எழில் சேர்க்கின்றது.

பள்ளிப்பருவத்திலே பேச்சுப்போட்டிகளிற் பங்குபற்றிப் பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்றதோடு மாத்திரமன்றி இன்றும் மேடைப்பேச்சுக்களால் தன்னையும் தனது எண்ணக் கருத்துக்களையும் முன்வைத்துப் புகழ்பெற்றுள்ளவரான மதிப்புக்குரிய பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா இந்நூலின் ஆசிரியர் என்பதைச் சொல்லவரும்போதே நூலின் உரைக்கனதி அதிகமாகின்றது.




தமது நகைச்சுவைப் பேச்சால் எந்தச் சபையையும் ஈர்க்கும் பேச்சாளரான பேராசிரியர் சிவலிங்கராஜா பட்டிமன்றம், வழக்காடு மன்றம், கவியரங்கம் முதலிய கணக்கிலடங்கா ஈழத்துத் தமிழிலக்கிய முயற்சிகளில் முன்னின்று உயர்ந்தவர் என்பதைப் பிரபல கவிஞர் சோ.ப தனது நூலில் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு விதந்துரைக்கத் தக்கதாகும்.

நூலின் உள்ளே கண்பதித்தால், நுழையும் போது வரவேற்கும் என் அம்மாக்களைத் தொடர்ந்து பேச்சும் பாடல்களுமாக முப்பது ஆக்கங்கள் நூலை அலங்கரிக்கின்றன. எளிய தமிழில் சிறுவரின் மொழி உச்சரிப்பையும் வளரும் கருத்துக்களையும் மேம்படுத்தும் நோக்கம் நூலில் விரியப் பேச்சுத் திறன் பெருக்கும் வலிமையான ஆக்கங்கள் மனதை ஈர்க்கின்றன. சிறுவர்களுக்குப் பரிச்சயமான சொற்கள், சிறிய வாக்கியங்கள் சிறுவர்களை இலகுவில் மனதில் பதிக்கச்செய்து பேச்சுப் பயிற்சியில் ஈடுபட வைக்கும் வாய்ப்பைத் தருகின்றன.

எனது பாடசாலை, எனது ஆசிரியர், எங்கள் வீடு, காலைக் காட்சி, கடற்கரைக் காட்சி என்பவற்றோடு ஆறுமுகநாவலர், சோமசுந்தரப்புலவர், விபுலாநந்தர், தனிநாயகம் அடிகளார் போன்ற பெரியார்களின் ஆளுமைகளைப் பேசும் உரைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. பெரும்பாலான பேச்சுக்களைத் தொடர்ந்து அவற்றோடு தொடர்புடைய பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சிறுவர்கள் பேசும்போது வசதிக்கேற்ப அப்பாடல்களையும் பயன்படுத்தலாம் எனக் குறிப்பிட்டுள்ள நூலாசிரியர், அறிவும் ஆற்றலும் அனுபவமும் நிறைந்த பேச்சாளர் என்பதை நூலின் ஒவ்வொரு பக்கமும் எமக்கு நினைவூட்டுகின்றன. படங்களும் பாடல்களும் பேச்சுக்கான உரைகளும் சிறுவரின் மனத்தில் இலக்கியப் பதிவுகளை நினைவுறுத்துவதோடு பேச்சுப் பேசும் ஆசையைத் தூண்டும் என்பதிலும் ஐயமில்லை.

உதாரணமாக எங்கள் வீடு என்று தலைப்பிடப்பட்டுள்ள பேச்சின் தொடக்கத்தில் அதற்குப் பொருத்தமான படம் அச்சிடப்பட்டுள்ளது. தொடர்ந்து கவிஞர் 'சரஸ்' எழுதியுள்ள பாடல் வரிகளில்

*'அம்மா அப்பா அக்கா, அண்ணன் தாத்தா பாட்டி,*
*சும்மா சும்மா கூட்டிச் சுத்தம் பேணும் வீடு.'*

என்பதன் மூலம் வீடு ஒவ்வொன்றும் வீட்டிலுள்ளோர் அனைவராலும் அடிக்கடி கூட்டிப்பெருக்கிச் சுத்தம் செய்து பேணப்படல் வேண்டும் என்பதை 'சும்மா சும்மா' என்ற சொற்களால் வலியுறுத்துவதைக் காண்கிறோம். இதைப் போன்று சுவைபடக்கூறும் ஒவ்வொரு பக்கமும் இந்தப் பேச்சு நூலுக்கு இலக்கிய உயிர்ப்பூட்டியுள்ளது.


'மேடையிலே பேசுவோம்' அருமையான நூல்.

மேடைப்பேச்சு என்பது ஒரு கலை. தலைசிறந்த பேச்சாளர்களின் பேச்சுக்களை மாணவர்கள் கேட்க வேண்டும். அதன் மூலம் அவர்கள் தமது பேச்சாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நூலாசிரியரின் கருத்தையும் கவனத்திற்கொண்டு இந்நூலை பெற்றுப் பயன்பெற முந்துதல் நன்றென நம்புகின்றேன். மேடையிலே பேசுவோம் வாருங்கள்.

# 8ஆம் ஆண்டு நினைவலைகளுடன்...

மலர்வு
07
.
01
.
1988

உதிர்வு
28
.
08
.
2009





அன்புக்கு இலக்கணமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
கருணையின் வடிவமாய்
பக்தியின் இருப்பிடமாய்
அனைவரையும் கவர்ந்த
எங்கள் அன்பு ரஜிக்குட்டியே !
எமை விட்டு சடுதியாய்
பிரிந்தது ஏனோ ?
பொறுக்காத காலனவன்
உம் நல்லுள்ளம் கண்டு
பொறுக்கி எடுத்தானோ ?
எம்மால் ஆறமுடியவில்லை
காணும் இடமெல்லாம்
உமது புன்னகை பூத்த முகம் தோன்ற
கலங்கி நிற்கின்றோம் கண்ணீர் சொரிய
சின்ன வயதில் சிந்திக்க வைத்து விட்டு
சிறகடித்துச் சென்றாயோ - றஜீபா .
சிரித்து சிரித்து மற்றவர்களை மகிழ வைத்து விட்டு
எம் குடும்பத்தினரை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றாயோ
கண்ணீர் பிரளயத்தில் தவிக்கவிட்டு
8ஆண்டுகள் சென்றுவிட்டதையா வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம் ஐயா
எமன் உன்னில் பாசம் வைத்து அழைத்து விட்டான்
நாங்களோ ஏது செய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்
ஆண்டுகள் 8 மறைந்தாலும் ஆறவில்லை எம் துயரம்
எம் அருமை புத்திரன் றஜீபா
நிஜத்தில் நீ எம்முடன் இன்றில்லை ஆனால் நினைவில்
தினமும் வாழ்கின்றாய் ஐயா கனிவான புன்னகையுடன்
இனிய முகம் காணத்துடிக்கின்றோம் ஐயா
ஆண்டுகள் 8 ஆனாலும் ஆறாத உமது பிரிவுடன் என்றும்
அழியா நினைவுகளுடன் அன்பின் பிரிவால் துயருறும்

அமரர்
**கருணாதேவன் றஜீபன் (றஜீ)**
(வணிக முதர்தேர்வு - முதலாம் வருட மாணவன் யாழ். பல்கலைக்கழகம்)
(திதி: பூர்வபக்க நவமி)

என்றும் உன் நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

சுஜீ ஸ்ரோர்ஸ்
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

# நீங்கா நினைவலைகள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25
.
06
.
1945

உதிர்வு
10
.
09
.
2016



### கனகசபை அமரசிங்கம்

மண்ணுலகில் பிறந்து மண்ணுலகை வாழ்வில் மனம் மகிழ வாழ்ந்து
இறைவன் நம்பிக்கையில் ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்வுக்காய்
பாடுபட்டு பார்போற்ற வையகத்தில் வாழ்ந்த எம்முயிர்த் தெய்வமே!
விண்ணுலகம் சென்று இன்று ஓராண்டு ஆனாலும்
உங்கள் பிரிவுத் துயர் எம் நெஞ்சை விட்டகலவில்லை
நீங்காத நினைவுகளுடன் உங்கள் குடும்பத்தினர்.

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
23
.
10
.
1948

உதிர்வு
27
.
12
.
1998



### திருமதி கந்தபுஸ்பதேவி அமரசிங்கம்

நெஞ்சமதில் நிலைத்து நின்று எண்ணமதில் என்றும் நிலைத்து
வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர் கண்ணிமைக்கும் காலத்துள்
காலனுமைக் கவர்ந்து சென்ற
கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்
மனம் வெதும்பி வாடுகின்றோம் பத்தொன்பது ஆண்டுகள்
சென்றபின்னும்என்றும் அழியா நினைவுகள்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

பன்னாலை , தெல்லிப்பழை.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். - 075 033 3893





# பாரி மகளிர் பரிமாறிய தங்கச்சோறு!

நிலா

தயிர்ச்சோறு, புளிச்சோறு, சாம்பார் சோறு என்றெல்லாம் சோற்றின் வகைகளைக் கேள்விப்பட்டிருப்போம். இதில், தங்கச் சோறு பற்றி யாருமே அறிந்திருக்கமாட்டார்கள். அந்தச் சோற்றை எமது தமிழ் மன்னர்கள் மக்களுக்கு வாரி வழங்கினர். கொடை வள்ளல்கள் தேடிக் கொடுத்தனர். இதற்கு வரலாற்று ஆதாரங்கள் நிறைய உண்டு. செல்வம் கொழிக்கும் நாட்டில் மட்டுமே இது சாத்தியம். பாரி வள்ளல் ஆண்ட தமிழகத்தில் இந்தத் தங்கச் சோற்றுக்குப் பஞ்சமில்லை.

பாரி வள்ளல் இறந்த பின்னர் ஒருநாள் பாரியின் மகளிர் சங்கவை, அங்கவை ஆகியோர் இருந்த இடத்துக்குப் பாணர் குல மகளிர் பாடிக்கொண்டு வந்தனர். அப்படி வருவோருக்கு உணவும் உடையும் பொன்னும் மணியும் கொடுத்து அனுப்புவது பாரி கடைப் பிடித்த நடைமுறை. ஆனால், பாரி மகளிர் வீட்டில் அரிசியும் இல்லை, பொங்குவதற்குப் பானையும் இல்லை. ஏனெனில், வரட்சி நிலவிய காலம் அது. என்ன செய்யலாம் என்று அவர்கள் இருவரும் யோசித்தனர். பெண் என்றால் ஏதாவது தங்க நகை அணிந்திருப்பார்கள் அல்லவா? அதுவும் பாரி மன்னனின் மகள்கள் என்றால் நகை இல்லாமலா போகும்? உடனே தாங்கள் அணிந்திருந்த பொன் நகைகளை அப்படியே உலையில் இட்டு அதையே சோறாக இலையில் போட்டார்கள் பாரி மகளிர். காரணம், "இல்லை" என்று வருவோருக்கு "இல்லை" என்று சொல்லியறியாத குடும்பம் அது. பாணர் குல மகளிருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இருவருக்கும் இருகரம் கூப்பி வணக்கம் தெரிவித்த அவர்கள், பதிலுக்கு அன்பை அளித்துச் சென்றனர். இதற்கு ஆதாரம் உண்டு. 1200 ஆண்டுகளுக்கு முன் எழுந்த பழமொழி நானூறு என்னும் நூலில் அருமையான ஒரு பாடல் இந்தச் செய்தியைக் கூறுகிறது. அதாவது

*மாரியொன்றின்றி வறந்திருந்த காலத்தும்*
*பாரி மடமகள் பாண்மகற்கு நீருலையுள்*
*பொன்றிறந்து கொண்டு புகாவாக நல்கினாள்*
*ஒன்றுறா முனிறிலோ வில்-*

*(பழமொழி நானூறு)*

பூமியில் மாரி பொய்த்து வறண்டிருந்த காலத்தும், பாரி மகளிர் தம்மை நாடி வருவோருக்கு இல்லை என்று சொல்லாது தங்கச்சோறு பரிமாறிய வள்ளன்மையை இதன் வாயிலாக அறியமுடிகிறது. இன்னொரு பாடலில், கோழியை விரட்ட ஒரு பெண் தனது காதில் அணிந்திருந்த தங்கக் குண்டலங்களை எறிந்ததாக உள்ளது. இதை மிகைப்படுத்தப்பட்ட கற்பனை என்று யாராவது நினைத்தாலும், அந்தக் கற்பனையும் கூட தங்கம் செழிக்கும் நாட்டில்தான் வரமுடியும். பிச்சைக்காரர்கள் உள்ள சமுதாயத்தில் கல்லும் மண்ணாங்கட்டியும்தான் உவமையாக வரும். இதிலிருந்து தமிழகத்தின் கொடைச் சிறப்பையும் செல்வச் செழிப்பையும் அறிந்துகொள்ள முடிகிறது.

> பெண் என்றால் ஏதாவது தங்க நகை அணிந்திருப்பார்கள் அல்லவா? அதுவும் பாரி மன்னனின் மகள்கள் என்றால் நகை இல்லாமலா போகும்? உடனே தாங்கள் அணிந்திருந்த பொன் நகைகளை அப்படியே உலையில் இட்டு அதையே சோறாக இலையில் போட்டார்கள் பாரி மகளிர். காரணம், "இல்லை என்று வருவோருக்கு "இல்லை என்று சொல்லியறியாத குடும்பம் அது.



# 'நான்' என்ற மொழிவு தரும் அகங்காரமும் அர்ப்பணமும்

சாம் ரமேஸ்குமார்

இந்தப் பிரபஞ்சத்தில் வாழும் மனிதர்களை இரு வகையாக நாம் வகைப் படுத்தலாம். ஒரு வகையினர் உலகியல் வாழ்க்கையின் பால் ஈடுபாடு உடையவர்கள். மற்றைய வகையினர் தெய்வீக வாழ்க்கையின் பால் ஈடுபாடு கொண்டவர்கள். இந்த இரண்டு வகைப்பாடுகளின் உள்ளடக்கமாக விளங்குகின்ற மனிதர்களும் யதார்த்த வாழ்வில் 'நான்' என்ற வார்த்தையை உச்சரிக்கின்றனர். அனுதினமும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

அதிலும் உலகியல் வாழ்க்கையினை வாழும் மனிதர்கள் 'நான்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்ற பொழுது நானே உடல், நானே மனம், நானே புத்தி, நானே சித்தம் என்ற அகங்காரத்தின் வெளியாகவே அதனைச் சுட்டுகின்றனர்.

ஆனாலும் தெய்வீக வாழ்க்கையை பின்பற்றுகின்ற மனிதர்கள் 'நான்' என்ற வார்த்தையை பயன்படுத்தும் போது நான் ஆன்மா, நான் இறைவன், என் ஆன்மாவே அனைத்து உயிர்களுக்குள்ளும் இருக்கும் ஆன்மா, அனைத்து உயிர்களுக்குள்ளும் இருக்கும் ஆன்மாவே என் ஆன்மா என்ற இயல்போடும், அர்ப்பணத்தோடும் இருக்கின்றனர். 'நான்' என்ற வார்த்தையை மிகச் சிரத்தையோடு பயன்படுத்துகின்றனர்.

குறிப்பாக ஒரு மருத்துவர் நோயாளியிடம், "நான் உன்னை காப்பாற்றுகின்றேன்" என்று சொன்னால் அது அகங்கார 'நான்' என்றே நோக்கப்படும். அதேவேளை மருத்துவர், "இறைவன் உன்னை காப்பாற்றுவார். நான் இறைவனின் கருவி மட்டுமே" என்று குறிப்பிடுவாரானால் அது அர்ப்பண 'நான்' என்ற நிலையுள் அமைவுபெறும்.

இந்தப் பற்றுதலின் கருதலையே கிருஸ்ண பரமாத்மா மகாபாரதத்தில் மிகத் தெளிவாக உரைக்கிறார். அதாவது மகாபாரதப் போரை நடத்தியவன் நானே. இந்தப் போரில் கொல்பவனும் நானே, கொல்லப் படுபவனும் நானே. ஏன் அனைத்தும் நானே என்கிறார். இந்த மொழிவுகள் பிரபஞ்சத்தின் அனைத்து உயிர்களையும் 'நான்' என நினைக்கும் புனிதத்துவமான அர்ப்பண 'நான்' ஆகும்.

இந்த உலகியல் 'நான்' தெய்வீகம் பொருந்திய 'நான்' ஆக எம்முள்; என்றென்றும் மாற்றமடைய வேண்டுமானால் நாம் 'ஆன்மா' என்ற உணர்வோடு இடையறாது தெய்வீக சாதனைகள் செய்து வர வேண்டும். அப்போது எமதான ஆன்மா மலர்வுறும். உலகியல் 'நான்' எம்மிடத்தில் வாடலுற்று உதிர்வுறும். மீண்டும் ஒளிர்வுறாது ஒளி மழுங்கி ஓடி விடும்.




**மேடம்:** சிரம சூழ்நிலையை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவைப்படும். இலாபம் சுமார். பெண்கள் செலவில் சிக்கனம் பேணுவது நல்லது.

**இடபம்:** மனதில் ஒருமுகத் தன்மையுடன் செயல்படுவீர்கள். நேர்மை மீதான நம்பிக்கை வளரும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**மிதுனம்:** கடின பணிகளையும் எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உயரும். அனுகூலமான தீர்வுகள் உண்டாகும்.

**கடகம்:** செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். உங்கள் நலன் விரும்புவரிடம் தகுந்த ஆலோசனை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்ப்புடன் இருந்த செயல் நிறைவேற தாமதம் ஆகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் எதிர்பார்ப்பு ஓரளவே நிறைவேறும்.

**கன்னி:** முக்கிய செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். வருமானம் அதிகரிக்கும். வீடு வாகனத்தில் கூடுதல் வசதி பெற தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**துலாம்:** பொறுமையுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் குளறுபடி ஏற்பட்டு மறையும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கலாம். எதிர்பார்த்த பணவரவு கிடைக்க தாமதம் உண்டாகும். ஆரோக்கியம் மேம்படும்.

**தனுசு:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கும்பம்:** பேச்சில் விரக்தியின் தன்மை வெளிப்படலாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பெண்கள் செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் புகழ்ந்து பேசுவர். தொழில் வியாபாரத்தில் இருந்த தடையனைத்தும் மறையும். பணவரவு அதிகரிக்கும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 5 | | | | | |
| 1 | 4 | 2 | | | | | | |
| 6 | | 3 | | 8 | | | 1 | |
| | | 4 | | 2 | | | | 8 |
| 8 | | | 7 | | 9 | | | 6 |
| 3 | | | | 6 | | | | |
| | 1 | | | 5 | | 8 | | 4 |
| | | | | | | 1 | 5 | 2 |
| | | | | | 2 | | 6 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.




# கொடுத்த விருந்து

## 2.0 படத்தின் தயாரிப்பு காணொலி

சினிமா

ஷங்கர் இயக்கத்தில், ரஜினி காந்தின் நடிப்பில் உருவாகும் '2.0' படத்தின் தயாரிப்புக் காணொலி வெளியிடப்பட்டுள்ளது. இந்தப்படத்தின் தயாரிப்புக் காணொலிக்கு சமூக வலைத்தளங்களில் பலத்த வரவேற்பு கிடைத்துள்ளது. வெளியான 15 மணி நேரத்தில் இரண்டரை மில்லியன் பார்வையாளர்களை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.


ரஜினிகாந்த், அக்ஷய் குமார், எமி ஜாக்சன் உட்பட பலர் நடித்துள்ளபடம், '2.0'. ஷங்கர் இயக்கியுள்ள இந்தப் படத்தை 'லைகா புரொடக்ஷன்ஸ்' சுமார் 400 கோடி ரூபாய் செலவில் தயாரித்துள்ளது. படத்துக்கு நீரவ் ஷா ஒளிப்பதிவுசெய்துள்ளார். ஏ.ஆர். ரகுமான் இசை அமைத்துள்ளார். ஜனவரி மாதம் வெளியாக உள்ள இந்தப் படத்தின் தயாரிப்புக் காணொலியை இயக்குநர் ஷங்கர், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு வெளியிட்டார்.

1.47 நிமிடம் மட்டுமே ஓடக் கூடிய இந்த தயாரிப்புக் காணொலி வெளியான அடுத்த நிமிடமே சமூக வலைத்தளங்களில் பரபரப்பை கிளப்பியது.

சமூக வலைத்தளத்தில் அமோக வரவேற்பை பெற்ற இந்தக் காணொலி, வெளியான 15 மணி நேரத்துக்குள் இரண்டரை மில்லியன் பார்வையாளர்களை நெருங்கிக்கொண்டிருக்கிறது. தயாரிப்புக் காணொலிக்கு இந்த அளவு வரவேற்பு கிடைத்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்த காணொலியைக் கண்டு வியப்படைந்துள்ள நடிகர், நடிகைகள் உள்ளிட்ட சினிமா பிரபலங்கள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

இந்தக் காணொலியில் 2.0. படத்திற்காக பிரமாண்டமாக அமைக்கப்பட்ட செற்றுகள், கிராபிக்ஸ் பயன்பாடுகள், கிரீன் மேட் ஸ்டுடியோக்களில் படமாக்கப்பட்ட காட்சிகள், பிரமாண்ட மைதானத்தில் அசத்தல் ஸ்டன்ட் காட்சிகள், கார்கள், பீரங்கிகள் வெடிக்கும் காட்சிகள், ஏராளமான ரோபோக்களின் மாதிரிகள், ரஜினி, அக்ஷய் குமார், எமிஜாக்சன் நடிப்பு என மிரட்டியுள்ளனர்.



இருக்கும் காலம் கொஞ்சமே. அதில் அடுத்தவர்களது வாழ்க்கையை வாழ்ந்து வீணாக்க வேண்டாம்

**ஸ்ரீவ் ஜாப்ஸ்.**



## கண்கள் சொல்லும் மொழி

1. கண்கள் வலப்புறமாகப் பார்த்தால் பொய் சொல்கிறது.
2. கண்கள் இடப்புறமாகப் பார்த்தால் உண்மை பேசுகிறது.
3. கண்கள் மேலே பார்த்தால் ஆளுமை செய்கிறது.
4. கண்கள் கீழே பார்த்தால் அடிபணிகிறது.
5. கண்கள் விரிந்தால் ஆச்சர்யப்படுகிறது, ஆசைப்படுகிறது.
6. கண்கள் சுருங்கினால் சந்தேகப்படுகிறது.
7. கண்கள் கூர்ந்து பார்த்தால் விரும்புகிறது.
8. கண்கள் வேறு எங்கோ பார்த்தால் தவிர்க்கிறது.
9. கண்கள் வலமும் இடமும் மாறி மாறி ஓடினால் பதட்டத்தில் உள்ளது.
10. கண்கள் படபடத்தால் விரும்புகிறது, வெட்கப்படுகிறது.
11. கண்கள் மூக்கைப் பார்த்தால் கோபப்படுகிறது.
12. கண்கள் ஓரப்பார்வையில் அவ்வப்பொழுது பார்த்தால் விரும்புகிறது.
13. இரண்டு கண்களும் மூடி இருந்தால் தூக்கம்.

அடக்கம் அமரருள் உய்க்கும்....



அடங்காமை அமரர் ஊர்திக்குள் வைக்கும்

திடீர்னு பஸ் ஸ்டான்டில பழைய காதலியப் பாத்தேன், ஒரு மரியாதைக்காக நல்லாயிருக்கிறியா எண்டு கேட்டேன்



100 ரூபாவுக்கு 'ரீசார்ஜ்' பண்ண முடியுமான்னு சொல்றா மூதேவி நீ இன்னும் திருந்தலையா?

மற்றவங்களுக்குப் பிடிச்ச மாதிரி பொம்மையாய் வாழ்வதை விட...



எமக்குப் பிடித்த மாதிரி செம்மையா வாழ்ந்திட்டுப் போயிடனும்

இப்பவெல்லாம் யாராவது ரைம் என்னன்னு கேட்டா...
31 ஆம் நாள்! காலை 9 மணின்னு பிக்பாஸ் குரல்ல தான் சொல்லத்தோணுது...!



மண்ணில் 06.07.1951

# ஆண்டுகள் எட்டு ஆனபின்பும் ஆறவில்லை உம் நினைவு

விண்ணில் 28.08.2009

## அமரர் சின்னத்தம்பி செல்வராஜா

(மாயவன் பாரவூர்தி உரிமையாளர்)





எம்மை பெற்று வளர்த்து பேணிக்காத்து
அன்பும் அறிவும் ஊட்டி வளர்த்து
தரணியிலே வாழ வைத்த - எங்கள்
அன்புத் தெய்வமே நீங்கள்

எம்மை விட்டுப்பிரிந்து எட்டு
ஆண்டுகள் ஆனபோதும் எம் நெஞ்சத்தில்
உங்கள் நினைவுகள் என்றும்-பசுமையாய்
நித்தம் உங்களை அழைக்கின்றோம்

திதி:- நவமி
(30.08.2017)

எட்டு ஆண்டுகள் என்ன நூறாண்டுகள் ஆனாலும்
உங்கள் கள்ளமில்லா சிரிப்பும் நேசமும்
மறைந்து போகுமா? - எம்மை விட்டு
என்றும் உங்கள் நினைவுடன் நாம்

என்றும் எம்மோடு இருப்பாய்

சங்கானை வீதி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### ஜெயசாந்தி டினேஸ்

**(யா/சென்ஜோன்ஸ் கல்லூரி 2019 உ.த வர்த்தக பிரிவு மாணவனும், கொக்குவில் இந்துக்கல்லூரியின் பழைய மாணவனும்)**

உரும்பிராயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயசாந்தி டினேஸ் (28.08.2017) திங்கட்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் அளவெட்டி வடக்கு, தவளக்கிரிமுத்துமாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற ஜெயசாந்தி மற்றும் ரோகினி தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான கதிரமலை, சிவக்கொழுந்து மற்றும் சிவலிங்கம் (ஓய்வு பெற்ற தொழிநுட்ப அலுவலர் (மின்சாரம்) யாழ்.மாநகரசபை), சோதிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு பேரனும் ஜெயக்குமார் - பாக்கியலட்சுமி, ஜெயதாஸ் - புஷ்பராணி, சுதாகரன் - ரஜனி ஆகியோரின் பெறாமகனும் சிவகரன் - செல்லக்குமாரி, சிவசங்கர் - நில்மினி, கருணாகரன், ஆனந்தன் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற கீர்த்திகன் மற்றும் ஆர்த்தன்,ஆரபி, அபிசன், வனிதா, விமலா, கோஷிலன், தேசி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் சாரங்கா, நிகாஷ், தனுஷ், அனுஸ்கா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (31.08.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு பலாலி வீதி உரும்பிராய் தெற்கு (ஒஸ்கா லேன் அருகில்) உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பலாலி வீதி,**
**உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### கோணேஸ்வரன் பிரவீன் (கட்டி)

**(A/L கலைப்பீடம் - யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலய மாணவன்)**

அம்பலவாணர் வீதி, அத்தியடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கோணேஸ்வரன் பிரவீன் (28.08.2017) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கோணேஸ்வரன் (சிவா - வர்த்தகர் பெருமாள் கோயிலடி) - நிலாமதி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான நடராசா மகேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான கந்தையா வடிவாம்பிகை ஆகியோரின் பாசமிகு பேரனும் மதுனிகா, பிரசாந், துவாரகா (O/L - வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் அன்புச்சகோதரனும் கோகுலதாசன் - கேதீஸ்வரி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் - சகுந்தலாதேவி (பிரான்ஸ்), மகாலிங்கம் ஞானதீபம் (கொழும்பு), வேதநாயகம் - சகுந்தலாதேவி, கேதாரநாதன் - சிவஒளி, பரமநாதன் - கோமதி, கருணாநிதி - கலாமதி ஆகியோரின் பெறாமகனும் ஜெயக்குமார் (பாபு) - வளர்மதி (ரதி - சுவிஸ்லாந்து), மூர்த்தி - மனோரஞ்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.08.2017) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**59/3, அம்பலவாணர் வீதி,**
**அத்தியடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**076 675 8021, 021 720 0490**

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 02 • 03 • 1973



விண்ணில் 24 • 08 • 2004

மட்டுவில் தெற்கு மிஷாந்த மகாலைச் சேர்ந்த

**அமரர் சுப்பையா சுபேந்திரன் (செல்வா)**

திதி : நவமி

மிஷாந்த மஹாலின் மிளிர்வான புத்திரனே !
சுபேந்திரா உன் துயராறா நினைவலைகள்
மூன்றோடு தசம் சேர்த்து முடிவுற்ற பொழுதினிலும் .எம்
மூச்சோடு கலந்தாய் முழுமதியாய் எந்நாளும்
எழுபத்து மூன்றுதனில் எழுந்த எம் சோதி ஒன்று
முப்பத்து ஒருவயதில் மூச்சடங்கிப் போனதையா
எத்தனை ஆண்டுகள் எரிந்து மறைந்தாலும்
மொத்தமாய் நெஞ்சமதில் முழுமையாய் நிறைந்திருப்பாய்.

"மிஷாந்த மஹால்"
மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி.

நீங்காத நினைவுகளுடன்..
குடும்பத்தினர்.

## கண்ணீர்அஞ்சலி

சமுர்த்தி முகாமையாளர்
இராசு தர்மகுலசிங்கம் அவர்களின் அன்புத் தாயார்.
அமரர்

**இராசு அன்னம்**



மண்ணில் 02.07.1936
விண்ணில் 29.08.2017

அன்று மலர்ந்த மலர் போல சிரித்த
முகமுடையாய்.
அன்பின் உருவம் கொண்டு - நீ
அணைத்தாய் அனைவரையும்
விழியில் நீரும் பெருகுதம்மா - நீ
விரைந்த சேதி அது கேட்டு
உந்தன் ஆத்ம சாந்திக்காய் உள்ளம்
உருக வேண்டுகின் றோம்
உந்தன் அமைதிக்காய் -அந்த
இறைவன் தரட்டும் ஆறுதலை......!

சமுர்த்தி முகாமையாளர் சங்கம்
யாழ் மாவட்டம்.

## கண்ணீர் அஞ்சலி

மண் மகிழ 18 • 11 • 1997



கண் நெகிழ 28 • 08 • 2017

**கோணேஸ்வரன் பிரவீன்**



புங்குடுதீவு பாணாவிடைச்சிவன் கோவில் பரிபாலன சபையின் கௌரவ பொருளாளர் **திரு . நடராசா கோணேஸ்வரன்** அவர்களின் அன்புப் புதல்வன் செல்வன் பிரவீன் அவர்கள் 28.08.2017 இல் அகால மரணமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாப ங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா பாணாவிடைச் சிவனின் பாதாரங்களில் சாந் தியடைய பிரார்த் திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

7 ஆம் வட்டாரம்,
புங்குடு தீவு.

ஆலய பரிபாலன தர்மகத்தா சபை
புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானம்.

கர்த்தருக்குள் மரித்தவர்கள் இது முதல் பாக்கியவான்கள்...

## மரண அறிவித்தல்

**மனுவேல் பாலரத்தினம்**



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேல் பாலரத்தினம் (28.08.2017) திங்கட் கிழமை கர்த்தருக்குள் நித்தியடைந்து விட்டார்.

அன்னார் மனுவேல் - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் விஜயாவின் அன்புக்கணவரும் சிந்துஜா, பிரகாஸ், பிரசாத், பிரதீப், ரவிவர்மன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேந்திரம், தம்பியையா, நேசமணி, செல்வராசா, சிவமணி ஆகியோரின் சகோதரனும் வின்சன், கீர்த்தி ஆகியோரின் மாமனும் சரன் றொக்மனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.08.2017) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக் கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## என்றும் நெஞ்சைவிட்டு நீங்காத 25 வருட நினைவலைகள்

துளிராய் 10 • 07 • 1982



விதையாய் 06 • 08 • 1992

**செல்வி சர்விழி (கிளி) தம்பிராசா**

திதி: நவமி (30.08.2017)

எல்லாம் வல்ல இறைவா!
எங்கும் நிறைந்த இறைவா!!
காக்கும் கடவுளல்லவா நீ?
என் கடைசி மகள் கிளியின் மேல்
கண்வைத்த காரணம் என்ன?
கணப்பொழுதில் கடந்துவிட்ட 25 வருடங்கள்
எம் மனதில் எஃகுவாக படிந்துவிட்டனவே
இத்தனை வருடமென்ன எத்தனை வருடம் கடந்தாலும்
எங்கள் துயரம் ஆறாது - மாறாது

கோட்டைக்காடு,
மல்லாகம்.

என்றும் நினைவுடன்
தம்பிராசா குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 • 02 • 1947



மறைவு 29 • 08 • 1990

**திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு**

*திதி: நவமி (10.09.2016)*

எம் குடும்ப பாச விளக்காய் ஒரு கூட்டுக்கிளியாக
எம்மோடு வாழ்ந்து எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை நாம் எண்ணாத
நாளில்லையம்மா

(J.4422)(13.18)

103/4, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்
மற்றும் உறவினர்.

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண் மகிழ 17 • 09 • 1950



மனம் நெகிழ 31 • 07 • 2017

அமரர் **வேலுப்பிள்ளை விசுவலிங்கம்**

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
நல்வழிகாட்டி, நானிலம் போற்ற வளர்த்த
எங்கள் அன்புத் தெய்வமே!

கடந்த ஆடித்திங்கள் 31.07.2017 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் வேலுப்பிள்ளை விசுவலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.08.2017) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத் திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்.

## ஓட்டப் பயிற்சியில் நீங்கள் செய்யும் தவறுகள்

ஓட்டப் பயிற்சியில் தீவிர வலியுடன் ஓடுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அந்த வலி, எமது உடலில் ஏதேனும் சில காயத்தினால் ஏற்பட்ட அறிகுறியின் வலியாக இருக்கலாம். ஓட்டப் பயிற்சி செய்வதற்கு, சப்பாத்தின் உழைப்பு, அதன் தரம், போன்றவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.
முன் பக்கமாக குனியும் போது, முதுகு வலி பிரச்சினைகள் ஏற்படும். எனவே அதனைத் தடுக்க ஓடும்போது, உடலை நேர் நிலையில் வைத்து ஓடுவது அவசியம். பயிற்சி எதுவும் செய்யாமல் நேரடியாக ஓடத் தொடங்குவது மிகவும் ஆபத்தானது. ஏனெனில் அதனால் தசைவலி, மூட்டுப் பிடிப்பு போன்ற பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும்.
ஓட்டப் பயிற்சியை தொடங்கும் முன் முதலில் காலின் நடுப் பாதத்தை ஊன்ற வேண்டும். இதனால் உங்களின் ஆற்றல், திறன் அதிகமாக பயன்படுத்தப்படுவது குறையும். ஓட்டப் பயிற்சியை மேற்கொள்ளும் போது, கைகளை அதிகமாக ஆட்டுவதை முற்றிலும் தவிர்ப்பது நல்லது. அதனால் கைகளில் உள்ள ஆற்றல், திறன் குறைவதைத் தடுக்க முடியும்.

**Maths Personal Class**

9.10.11
0763757299

**தேவை**

நல்லூர்ப்பகுதியில் வைத்தியர் வீட்டில் சனிக்கிழமைகளில் வீட்டு வேலை செய்யக்கூடிய பெண் தேவை.
0757859102

**தேவை**

சாவகச்சேரியில் அமைந்துள்ள
Visa Consultant & manimatrimony நிறுவனத்திற்கு
O/L அல்லது A/L படித்த Photoshop தெரிந்த பெண்
ஒருவர் தேவை.
தொடர்பு .077 454 5864
தனங்களப்பு வீதி , சாவகச்சேரி

**வாடகைக்கு**

நல்லூரில் தனி அறை.இணைந்த குளியலறை சிறிய குசினி உடன் இருவர் மட்டும் தங்கக்கூடிய வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
0757859102

**வேலையாள்கள் தேவை**

சுன்னாகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் மற்றும் புதிதாக இயங்கவிருக்கும் Shoping Complex ஒன்றுக்கு பெண்பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் ஆங்கில அறிவு. கணினி அறிவு உள்ளவர்களுக்கும் அனுபவமுள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.
தொலைபேசி இலக்கம்.
077 2161513, 0767228840

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில்
முகாமைத்துவ உதவியாளராக
கடமையாற்றும் **இளவேந்தன்**
அவர்களின் அன்புத்தந்தையார்

**வீரகத்தி வேலாயுதம்**

அவர்களின் திடீர் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச செயலகம் தென்மராட்சி.**

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அலுவலக பணி யாளராக கடமையாற்றும் **காண்டீபன்** அவர்களின் அன்பு மாமனார்.

**சின்னத்தம்பி கந்தசாமி**

அவர்களின் திடீர் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திக் கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச்சங்கம்,**
**பிரதேச செயலகம் தென்மராட்சி.**

## அமைச்சர்...

அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் சாட்சிக் கூண்டில் ஏறி சாட்சியமளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

நான் சுவிஸ் நாட்டில் சமையல் வேலை செய்து வந்தேன். 2015ஆம் ஆண்டு விடுமுறைக்கு வந்த போது மாணவி கொலை வழக்கில் என்னைக் கைது செய்தனர்.

என் மீது மாணவி கொலை வழக்கில் சதித்திட்டம் தீட்டியமை குற்றத்துக்கு உடந்தையாக செயற்பட்டமை, குற்றத்துக்கு பங்களித்தமை போன்ற குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு உள்ளன. அவை அனைத்தையும் நான் முற்றாக மறுக்கிறேன்.

எனக்கு எதிராகச் சாட்சியம் அளித்த இப்லான் என்பவரைவவுனியாசிறைச்சாலையில்தான் பழக்கம். அதற்கு முன்னர் அவரை எனக்குத் தெரியாது.

வவுனியா சிறைச்சாலையில் என்னிடம் மாணவி கொலை வழக்குத் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரி நிஷாந்த சில்வா விசாரணை செய்து கொண்டு இருந்த வேளை இப்லான் நிஷாந்த சில்வாவிடம் பை (Bag) ஒன்றை வாங்கிச் சென்று இருந்தார்.

விசாரணை முடிந்து நான் மீண்டும் சிறைக் கூடத்துக்குச் சென்றபோது, தனக்கு நிஷாந்த சில்வாவுடன் பழக்கம் உண்டு எனவும் ஏதேனும் உதவி தேவையா என என்னிடம் இப்லான் கேட்டார். அதற்கு நான் எனக்கு எந்த உதவியும் தேவையில்லை என்றேன்.

பின்னர் கொழும்புக்குஅழைத்துச்செல்லப்பட்ட இப்லான் மீண்டும் ஒரு மாத காலம் கழித்து வவுனியாசிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்டார். அப்போது அவர் என்னிடம் மாணவி கொலை வழக்கில் இருந்து உன்னை விடுவித்து விடலாம் 25 இலட்சம் ரூபா பணம் தா என்று கேட்டார்.

செய்யாத குற்றத்துக்காகப்பணம்தர முடியாது என நான் மறுத்தேன். அதன்போது எமக்கு இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு நான் அவரைத் தள்ளி விட்டேன். அதற்கு அந்த நேரம் எங்களுடன் சிறைக் கூடத்தில் இருந்த சக கைதிகள் சாட்சி. ஆனால் அவர்கள் அனைவரும் தற்போது விடுதலையாகி விட்டனர் என்பதால் அவர்களை சாட்சியாக அழைக்க முடியாது.

பின்னர் மீண்டும் இப்லான் என்னிடம் மாணவி கொலை வழக்கில் இருந்து முற்றாக விடுவித்து விடலாம் அதற்கு 2 கோடி ரூபா தா என்றார். அதில் முதல் கட்டமாக முற்பணமாக 25 இலட்சம் ரூபா தருமாறு கோரினார். நான் அதற்குச் சம்மதிக்கவில்லை. இப்லானுக்கு அந்த நேரம் பணம் தேவைப்பட்டது. பணம் இல்லை எனில் அவர் நீதிமன்றி னால் தண்டனைக்கு உள்ளாக வேண்டி வரும் எனவே என்னிடமிருந்து பணத்தைப் பெற முனைந்தார்.

ஆசியப் பெண் ஒருவரைக் கடத்தி வன்புணர்ந்து படுகொலை செய்வதை நேரடியாக வீடியோ எடுத்தோம் என நான் இப்லானிடம் எந்தச் சந்தர்ப்பத்திலும் கூறவில்லை.

எனது மச்சானும் ஆறாம் எதிரியுமான சிவதேவன் துசாந் எனக்கு தொலைபேசியில் பெண் பிள்ளையின் படம் அனுப்பவும் இல்லை நான் அவரிடம் படம் அனுப்பு என கேட்கவும் இல்லை. அதேபோன்று எந்தச் சந்தர்ப்பத்திலும் நிஷாந்த சில்வாவுக்கோ அல்லது வேறு விசாரணை அதிகாரிகளுக்கோ நான் பணம் கொடுக்கவும் முற்படவில்லை. இப்லானுக்குக் கொலை மிரட்டல் விடுக்கவும் இல்லை.

இலங்கேஸ்வரன் என்பவர் 12ஆம் திகதி என்னை ஆலடி சந்தியில் வானில் கண்டேன் என சொன்னது பொய். நான் 12ஆம் திகதி கொழும்பில் நின்றேன்.

நான் 1988ஆம் ஆண்டு சுவிஸ் நாட்டுக்கு சென்று விட்டேன். 1998ஆம் ஆண்டு அங்கு திருமணம் முடித்தேன். இரண்டு பிள்ளைகள் உள்ளனர். பின்னர் நான் சட்ட ரீதியாக எனது திருமண பந்தத்தை முறித்துக்கொண்டேன். 2012ஆம் ஆண்டு புங்குடுதீவைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் முடித்தேன். சுவிஸ் நாட்டில் இருந்து வருடத்துக்கு ஒரு முறை இலங்கைக்கு வருவேன். அவ்வாறே 2015 ஆம் ஆண்டு 4ஆம் மாதம் இலங்கை வந்தேன்.

மீண்டும் 5ஆம் மாதம் 6ஆம் திகதி சுவிஸ் நாட்டுக்குச் செல்லவேண்டும் விமானத்தைத் தவறவிட்டமையால் கொழும்பில் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை தங்கி இருந்தேன்.

மாணவியின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள 15ஆம் திகதி புங்குடுதீவு வந்தோம். 17ஆம் திகதி புளியங்கூடல் பிள்ளையார் கோவில் தேருக்குச் சென்றோம். நான் கோயிலினுள் இருந்தபோது எனது நண்பனின் தொலைபேசிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் அழைப்பை ஏற்படுத்தி என்னுடன் கதைக்க வேண்டும் என கூறினார். அதற்கு நண்பன் நான் கோயிலினுள் இருப்பதாகவும் வந்தவுடன் கூறுவதாகவும் கூறியுள்ளான்.

நான் கோயிலால் வந்த உடன் ஸ்ரீகஜன் கதைக்கச் சொன்ன விடயத்தை நண்பன் சொன்னான். நான் தொலைபேசியில் அவருடன் கதைத்தேன். அப்போது என்னிடம் சிறிய விசாரணை செய்யவேண்டும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கூறினார். நான் நீங்கள் எங்கே நிற்கிறீங்க என கேட்டேன். அதற்கு அவர் தான் புங்குடுதீவில் நிற்கிறார் எனச் சொன்னார். நான் அங்கே வருவதாகக் கூறி ஸ்ரீகஜன் சொன்ன இடத்துக்குச் சென்றேன்.

போகும் வழியில் சந்திரஹாசனின் வீடு இருந்ததால் அவரையும் அழைத்துச் சென்றோம். ஸ்ரீகஜன் எம்மை வரச் சொன்ன இடம் மாணவியின் வீட்டுக்குப் பின்புறமாகச் சற்றுத் தொலைவில் உள்ள தபால் நிலையம். அங்கு சென்ற போது என்னுடன் வந்தவர்கள் வானில் இருந்,தார்கள்.

அவ்வேளை அ.ங்கு வந்த ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய, த்தைச் சேர்ந்த கோபி என்பவரும் மேலும் ந ால்வரும் என்னுடன் வந்து வானில் இருந்தவ, ்களைக் கைதுசெய்தனர். அப்போது ஏன் கைது செய்கிறீர்கள் என ஸ்ரீகஜனிடம் நான் கேட்டேன். அதற்கு அவர் எனக்குத் தெரியாது. நான் உன்னைத்தான் வரச் சொன்னனான் அவங்களைக் கைது செய்வது தொடர்பில் கைது செய்கிறவங்களைக் கேள் எனச் சொன்னார். ஸ்ரீகஜன் என்னிடம் விசாரணை செய்யும் போது சிவில் உடையில் இருந்தார்.

பின்னர் 17ஆம் திகதி மாலை கைது செய்து கொண்டு செல்லப்பட்ட எனது தம்பி உள்ளிட்டவர்களைத்தான் மாணவி கொலை வழக்குடன் தொடர்புடையவர்கள் என ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது. அதனை நான் கேட்டதும் போல் தோழர் என்பவருக்குத் தொலைபேசி மூலம் அறிவித்தேன். தான் உடனே வருவதாக என்னிடம் கூறினார். பின்னர் தொலைபேசி எடுத்தபோது அதற்கு அவர் பதில் அளிக்கவில்லை.

அதனால் நான் எனது நண்பனுடன் வாகனத்தில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் செல்வோம் எனச் சென்ற போது புங்குடுதீவு பாலம் முடிவடைந்த வேலணை பகுதியில் பொது மக்கள் நீ தானே மாணவி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு உள்ள சசியின் அண்ணா எனக் கேட்டுத் தாக்கி என்னை மின் கம்பத்தில் கட்டி வைத்து அடித்தார்கள்.

அப்போது விஜயகலா என்பவர் அங்கு வாகனத்தில் வந்து இருந்தார். அக்கால பகுதியில் அவர் யார் என எனக்குத் தெரியாது. அவர் வந்து மக்கள் என்னை அடிக்க விடாது தடுத்து எனது கட்டுக்களை அவிழ்த்து விடுமாறு கோரினார். நீயா சசியின் அண்ணா ? என என்னிடம் கேட்டார் நான் ஆம் என்றேன்.

அடிக்கடி தொலைபேசியில் யாருடனோ கதைத்துக்கொண்டு இருந்தார். அன்று அவர் பொலிஸார் உடன் தான் கதைத்தார் என்பது எனக்கு இந்த மாதம் தான் பத்திரிகையில் செய்தி பார்த்துத் தெரிந்துகொண்டேன்.

குறுக்கிட்ட பிரதிசொலிஸிட்டர் ஜெனரல் குமார் இரட்ணம், "2015ஆம் ஆண்டு நடந்த சம்பவம் தொடர்பில் இரண்டு வருடத்துக்குப் பின்னர் இப்பவா தெரிந்து கொண்டீர்" எனக் கேட்டார். இரண்டு வருடத்துக்கு முன்னர் நடந்த சம்பவம் தொடர்பில் இப்பதானே வழக்கு ஆரம்பித்து அவரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டு உள்ளது அதனால் எனக்கு இப்ப தான் தெரியும் என ஒன்பதாம் எதிரி பதிலளித்தார்.

மக்கள் இடம் இருந்து என்னைக் காப்பாற்றிய விஜயகலா என்னை எனது குடும்பத்தினரிடம் ஒப்படைக்க முனைந்தார். அப்போது வேலணையில் பஸ் ஓடுபவர்கள் புங்குடுதீவில் உள்ள எனது உறவினர்களுக்கு என்னை பிடித்துக் கட்டி வைத்து அடிப்பதை தெரிவித்து உள்ளனர்.

அதனால் புங்குடுதீவில் இருந்து என்னைப் அழைத்து செல்ல எனது மனைவி, அம்மா மற்றும் சில உறவினர்கள் பஸ்ஸில் வந்தார்கள். அப்போது இரவு 11 மணி இருக்கும். அந்த நேரம் விஜயகலா அங்கிருந்து சென்றுவிட்டார்.

பின்னர் மறுநாள் காலை எங்கள் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஸ்ரீகஜன் எனக்கு ஆபத்து எனவும் பத்து நிமிடத்தில் இங்கிருந்து வெளியேறினால் தன்னால் என்னைக் காப்பாற்ற முடியும் எனவும் என் மனைவியிடம் கூறிச் சென்றார்.

அவர் மீண்டும் பத்து நிமிடத்தில் வாகனம் ஒன்றில் வந்தார். என்னையும், மனைவி தாய் மற்றும் மகள் ஆகியோரையும் வாகனத்தில் ஏற்றிகொண்டு யாழ்ப்பாணம் வந்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் எம்மை கதிரையில் இருத்தி வைத்து விட்டு ஸ்ரீகஜன் எங்கோ சென்றுவிட்டார். பின்னர் மாலை 5 மணிக்கே வந்தார். அப்போது நான் எங்களை இங்கே கூட்டி வந்து விட்டு போய் விட்டீர்கள் மனைவி பிள்ளை எல்லாம் பசியில் இருக்கின்றார்கள் என கூறினேன். அதற்கு அவர் தான் மறந்து விட்டார் என்றும் பொதுமக்கள் என்னை தாக்கியது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுபதிவுசெய்யுமாறும் சொன்னார். நான் சாப்பிட்டு வந்து முறைப்பாடு செய்வதாகக் கூறி கன்டீனுக்குச் சென்று சாப்பிட்டேன்.

பின்னர் வந்து என் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தேன். பின்னர் எனக்குப் பொலிஸார் முறைப்பாடுபதிவு செய்தமைக்கான துண்டும் மருத்துவமனைக்குச் செல்லத் துண்டு ஒன்றும் தந்தனர்.

அந்தநேரம் தம்பியாட்களை பொலிஸ் நிலையம் கொண்டுவந்தார்கள் அப்போது பொலிஸ் நிலையத்துக்கு வெளியில் சனக் கூட்டம் காணப்பட்டது. இந்த நேரம் வெளியில் செல்வது ஆபத்து எனக் கூறிப் பொலிஸார் எம்மைத் தடுத்து வைத்திருந்தனர்.

பின்னர் இரவு என்னை மருத்துவமனைக்குச் செல்லுமாறு கூறி அனுப்பி வைத்தனர். அப்போது எனது படங்கள் முகநூல்களில் வந்ததால் நான் யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு செல்வது ஆபத்து எனக் கருதிக் கொழும்புக்குச் சென்று சிகிச்சை எடுப்போம் என எண்ணிப் புறப்பட்டுச் சென்றுவிட்டேன்.

கொழும்பில் 19ஆம் திகதி காலை தங்கி இருந்த வேளை என்னை வெள்ளவத்தை பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் முதலில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு அலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு நான் மாணவி கொலை வழக்குடன் தொடர்புடையவனா எனக் கேட்டார்கள் அவர்கள் இல்லை என கூறினார்கள். பின்னர் யாழ்ப்பான பொலிஸ் நிலையத்துக்கு அலைபேசி ஊடாக கேட்டார்கள் அவர்களும் இல்லை எனப் பதில் அளித்தார்கள்.

அதனால் என்னை மதியம் பதிவுகளை மேற்கொண்டு விட்டு விடுவிக்க இருந்த சமயம் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் இருந்து தொடர்பு கொண்டு நான் அவர்களுக்கு தேவைப்படுகிறேன் என்றும் என்னை விடுவிக்க வேண்டாம் எனவும் கூறினார்கள். அதனால் என்னை தொடர்ந்து வெள்ளவத்தைப் பொலிஸார் தடுத்து வைத்து இருந்தார்கள்.

பின்னர் அன்றைய தினம் 19ஆம் திகதி என்னை கொடிகாமம் பொலிஸார் வெள்ளவத்தைப் பொலிஸாரிடம் இருந்து பாரம் எடுத்து யாழ்ப்பாணம் கொண்டு வந்தார்கள்.

இடையில் அனுராதபுரத்தில் தமது வீட்டுக்குச் சென்று குளித்து தேநீர் அருந்திய பின்னர் என்னை அழைத்து வந்தார்கள். இடையில் வவுனியா அல்லது கிளிநொச்சியில், எந்தப் பகுதி என எனக்குச் சரியாகத் தெரியவில்லை, ஓர் இடத்தில் வாகனத்தை நிறுத்தி பெரிய முகாம் ஒன்றுக்குப் பின்னால் என்னை அழைத்துச் சென்றார்கள்.

அங்கு பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் நின்றனர். அத்துடன் ஹெலி இரண்டும் நின்றது. அங்கு இருந்த வரைபடம் ஒன்றை சுட்டிக்காட்டி சிங்களத்தில் கதைத்துக்கொண்டு இருந்தனர். அப்போது தமிழ் தெரிந்த ஒருவர் எனக்குச் சொன்னார். சாலையால் என்னை அழைத்து செல்வது பாதுகாப்பு இல்லை எனவும் அதனால் ஹெலியில் அழைத்துச்செல்ல உள்ளார்கள் என்றும், ஆனாலும் ஹெலியை இறக்கக் கூடிய ஸ்ரேடியத்தடியும் பாதுகாப்பு இல்லை என கதைப்பதாகவும் கூறினார்.

பின்னர் என்னை அங்கே தடுத்து வைத்து விட்டு நள்ளிரவு கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தார்கள். பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தார்கள்.

பின்னர் அங்கிருந்து 20 ஆம் திகதி என்னை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்த அழைத்துச்சென்றார்கள். ஆங்கிலப்படங்களில் வாறது போன்று பல வாகன தொடரணி பாதுகாப்புடன் அழைத்துச் சென்றனர். அப்படி ஒரு பாதுகாப்பை நான் என் வாழ்நாளில் அதற்கு முதல் பார்த்ததில்லை எனத் தெரிவித்தார்.

பிரதி சொலிஸ்டர் ஜெனரல் குமார் இரட்ணம், "உங்களை அப்போதைய வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரா அழைத்துச் சென்றார்" எனக் கேட்டார். அதற்கு 9ஆம் எதிரி அவர் யார் என தெரியாது என்னை பல வாகன தொடரணி பாதுகாப்புடன் தான் அழைத்துச் சென்றனர் எனத் தெரிவித்தார்.

இந்த வழக்குக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, நான் சுவிஸ் நாட்டில் வசித்து வருகிறேன். எனக்கு அந்த நாட்டுக்குடியுரிமை கிடைக்கவில்லை. 5 வருடங்களுக்கு மேல் அந்த நாட்டில் தங்கி இருந்தால் தங்குமிட விசா தருவார்கள். அந்த விசாவில் தங்கி நின்றே வேலை செய்கிறேன்.

நான் அங்கு சமையல் வேலை செய்வதனால் மாதாந்தம் இலங்கை ரூபா பெறுமதியில் 8 இலட்சம் சம்பளம் பெறுவேன், அத்துடன் பிற கொடுப்பனவுகள் என மாதாந்தம் இலங்கை ரூபா பெறுமதியில் 10 இலட்சம் சம்பாதிப்பேன். எனக்கு அங்கு மாதாந்தம் 6 இலட்சம் அளவிலேயே செலவாகும். வருடத்துக்கு ஒரு முறை இலங்கை வந்து போகும் போது 20 இலட்சம் ரூபா வரையில் செலவாகும் என சாட்சியம் அளித்தார். (உ)

## 15 ஆம்...

தொகுப்புரைகள் எதிர்வரும் 12, 13ஆம் திகதிகளில் முன்வைக்கப்படவேண்டும் என தீர்ப்பாயம் நேற்றுக் கட்டளையிட்டது. இதனால் வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் 15ஆம் திகதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 3 மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் இடம்பெற்று வருகிறது.

மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேமசங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயம் நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் 2ஆவது மாடியிலுள்ள திறந்த மன்றில் கூடியது.

வழக்குத் தொடுனர் சார்பில் பிரதி மன்றாடியார் அதிபதி பி. குமாரரட்ணம் தலைமையில் அரச சட்டவாதிகள் நாகரத்தினம் நிஷாந்த், மாதினி விக்னேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

எதிரிகள் தரப்பில் 1ஆம், 2ஆம், 3ஆம், 6ஆம் மற்றும் 8ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தன மற்றும் சட்டத்தரணி லியகே ஆகியோரும் 5ஆம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் 4ஆம், 7ஆம் மற்றும் 9ஆம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சின்னராசா கேதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர். அத்துடன் ஒன்று தொடக்கம் 9 வரையான எதிரிகள் சார்பில் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி விக்னேஸ்வரன் ஜெயந்தாவும் முன்னிலை ஆகியிருந்தார்.

பூபாலசிங்கம் இந்திரகுமார், பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், மகாலிங்கம் சசிதரன், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த், பழனி ரூபசிங்கம் குகநாதன், ஜெயதரன் கோகிலன் மற்றும் மகாலிங்கம் சசிக்குமார் ஆகிய ஒன்பது எதிரிகளும் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அதனை தொடர்ந்து எதிரிகள் தரப்புச் சாட்சிப் பதிவுகள் ஆரம்பமாகின.

நேற்றையதினமே எதிரிகளின் சாட்சிப் பதிவு முடிவுறுத்தப்பட்டது. இந்த வழக்கின் வழக்குத் தொடுநர் தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு ஆகியவற்றின் சாட்சிப் பதிவுகள் நேற்றுடன் முடிவுறுத்தப்பட்டது.

வழக்குத் தொடுநர் மற்றும் எதிரி தரப்பு தொகுப்புரைக்காக எதிர்வரும் 12ஆம் மற்றும் 13ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் வாய்மொழி மூலமாக இரு தரப்புக்களும் தமது தொகுப்புரைகளை தீர்ப்பாயத்தில் வழங்கவேண்டும்.

மேலதிக முன்வைப்புக்களைச் செய்வதாயின் அதனை அன்றைய தினமே இரண்டு தரப்பினரும் எழுத்து மூலம் தீர்ப்பாயத்துக்கு வழங்கவேண்டும். எழுத்து மூலம் வழங்கப்படும் சமர்ப்பணம் மூன்று பிரதிகளாக வழங்கப்பட வேண்டும் எனத் தீர்ப்பாயம் கட்டளையிட்டது.

அதனைத் தொடர்ந்து 9 எதிரிகளையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு தீர்ப்பாயம் உத்தரவிட்டது. (வ-37)



# ஆஸ்திரேலியா - பங்களாதேஷ் இரு அணிகளும் சம பலத்தில்

ஆஸ்திரேலியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டு அணிகளும் சம பலத்துடன் உள்ளன.

மழை உள்ளிட்ட எந்த இடையூறும் இல்லாமல் இருந்தால் ஏதாவது ஒரு ஒரு அணியின். டாக்காவில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பமாகிய இந்த ஆட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் தமீம் இக்பால், சகிப் அல் ஹசன் இருவரும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இதனால் முடிவில் 260 ஓட்டங்களைப் பெற்றது பங்களாதேஷ். அதிகபட்சமாக சகிப் அல் ஹசன் 84 ஓட்டங்களையும், தமீம் இக்பால் 71 ஓட்டங்களையும், நசீர் கொசைன் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கம்மின்ஸ், லையன், அகர் மூவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 217 ஓட்டங்களுக்கு சகல இலக்குளையும் இழந்தது. ரென்சொவ் 45 ஓட்டங்களையும், அகர் 41 ஓட்டங்களையும், ஹான்ட்ஸ்கொம் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சகிப் அல் ஹசன் 5 இலக்குகளையும், மிராஸ் 3 இலக்குகளையும், தயுல் இஸ்லாம் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

43 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் மத்திய வரிசையின் தடுமாற்றத்தால் 221 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. தமீம் இக்பால் 78 ஓட்டங்களையும், ரகிம் 41 ஓட்டங்களையும், மிராஸ் 26 ஓட் டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் லையன் 6 இலக்குகளையும், அகர் 2 இலக்குகளையும், கம்மின்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆஸ்திரேலிய அணிக்கு 265 ஓட்டங்கள் இலக்காக நிர்ண யிக்கப்பட்டது. வோர்ணர், ரென்சொவ் இருவரும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர். வெறும் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரென்சொவ். ஒரு ஓட்டத்துடன் கவாயாவை பவிலியனுக்குத் திரும்பினார் சகிப் அல் ஹசன். 28 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து ஆஸ்திரேலிய தடுமாறிய போதிலும், வோர்ணரும் சிமித்தும் இணைந்து ஆட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினர். அரைச்சதம் கடந்தார் வோர்ணர். நிதானித்துநின்றார் சிமித். நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 2 இலக்குகளை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியா வெற்றிபெற இன்னும் 156 ஓட்டங்களும், பங்களாதேஷ் வெற்றிபெற இன்னும் 8 இலக்குகளும் தேவை என்ற நிலை உள்ளது. (ம)

# மனோகரா அணி அரையிறுதிக்குள்



யாழ்ப்பாணம், ஓக. 30

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் 35வயதுக்குமேற்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் அல்வாய் மனோகரா அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் மோதின. முதல்பாதியின் 8ஆவது நிமிடத்தில் கிரிதரன் மனோகரா அணியின் முதல் கோலைப் பதிவு செய்தார். மாற்றங்கள் ஏதுமின்றி முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கிரிதனர் கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது அல்வாய் மனோகரா அணி.

(ம- 23, 108)

## வளர்மதியின் கரப்பந்தாட்டம்

யாழ்., ஓக. 30

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 58ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தத்திட்டமிட்ட 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை குறித்தகழகமைதானத்தில் இடம் பெறவுள்ளன. இந்தத் தொடரில் 'ஏ' பிரிவில் 10 அணிகள், 'பி' பிரிவில் 15 அணிகள் என மொத்தமாக 25 அணிகள் விளையாடவுள்ளன.

(ம-23)

## கலைமதி அணி அரையிறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், ஓக. 30

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் 35 வயதுக்கு மேற்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நவிண்டில் கலைமதி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக் கழகமும் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைமைதான். நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோலெதையும் பதிவு செய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

(ம-108,23)

# கப்புக்கெதரவும் காயமடைந்தார்



இலங்கை அணியின் பொறுப்புத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த கப்புக்கெதரவும் காயமடைந்துள்ளார். இதனால் அடுத்த ஆட்டத்துக்காக புதியதொரு தலைவரைத் தேடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது இலங்கை கிரிக்கெட் சபை.

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குள் குறிப்பிட்ட அளவு பந்துப்பரிமாற்றங்களை வீசத் தவறிய குற்றத்துக்காக இலங்கை அணியின் தலைவர் தரங்கவுக்கு இரண்டு ஆட்டங்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இதனால் மூன்றாவது மற்றும் நான்காவது ஆட்டங்களில் பொறுப்புத் தலைவராக கப்புக்கெதர செயற்படுவார் என்று அறிவிக்கப்பட்டது.

நான்காவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக பயிற்சியில் ஈடுபட்டபோது கப்புக்கெதரவுக்குக் காயம் ஏற்பட்டதால் அவர் தொடரில் இருந்து விலகியுள்ளார். இதனால் பிறிதொரு வரைத் தலைவராக நியமிக்க வேண்டிய தேவை இலங்கை கிரிக்கெட் சபைக்கு ஏற்பட்டுள்ளது.

(ம)

# உதயசூரியன் கழக துடுப்பாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 30

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் குடத்தனை செல்வா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செம்பியன்பற்று சம்பியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய செல்வா விளையாட்டு கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 175 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கண்ணன் 43 ஓட்டங்களையும், சிவனொளி 69 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சம்பியன் விளையாட்டு கழக அணி 75 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து 100 ஓட்டங்களால் வெற்றிபெற்றது செல்வா அணி.

பிறிதொரு ஆட்டத்தில் குடத்தனை உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியும் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 93 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பிரகாஸ் 20 ஓட்டங்களைப் பெற்றார். 94 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாரதி விளையாட்டுக் கழக அணி பகீரதனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழக அணியும், கணேசானந்தா விளையாட்டுக் கழக அணியும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கணேசானந்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 12 பந்துப்பரிமாற்றங்களில் 103 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய உடுத்துறை பாரதி அணி 82 ஓட்டங்களை மட்டும் பெற்றதை அடுத்து 21 ஓட்டங்களால் வெற்றிபெற்றது பாரதி அணி.

(ம-23)

# 2019 உலகக்கிண்ணத்தில் வேண்டும் டோனி
## முன்னாள்வீரர் சேவாக் பகிரங்கமான ஆதரவு


“இந்திய அணியின் நட்சத்திர வீரரான டோனி, எதிர்வரும் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் களமிறங்க வேண்டும்” என்று தனது ஆதரவைத் தெரிவித்தார் முன்னாள் வீரர் சேவாக்.

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் டோனியின் திறன்குறித்து பல்வேறு வகையிலான எதிர்மறைக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. சில வீரர்கள் “டோனி விலகவேண்டிய தருணமிது” என்றும் தெரிவித்தனர். ஆனால் இலங்கைக்கு எதிரான இரண்டாவது மற்றும் மூன்றாவது ஒருநாள் ஆட்டங்களில் இந்திய அணி வெற்றிபெற டோனி முக்கிய காரணமாக இருந்தார். அவருக்கான எதிர்ப்பலை ஆதரவு அலைகளாக தற்போது மாறியுள்ளது. இந்த நிலையில் சேவாக்கும் தனது ஆதரவைத் தெரிவித்தார்.



“தற்போதுள்ள சூழ்நிலையில் டோனிக்கு மாற்றாக வேறு வீரர்கள் உள்ளனர். என்று நான் நினைக்கவில்லை. பன்ட் சிறந்த வீரர்தான். ஆனால் அவர் டோனியின் இடத்தக்கு வருவதற்கு இன்னும் காலம் இருக்கிறது. 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடருக்குப் பிறகே அவர் இடம்பெற வேண்டும். இதனால் உலகக் கிண்ணத் தொடரில் டோனி விளையாட வேண்டும். உலகக்கிண்ணத் தொடரின் பின்பே டோனிக்கான மாற்று வீரர்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். டோனி ஓட்டங்களைக் குவித்தாலும், குவிக்காவிட்டாலும் நாம் கவலைப்படக்கூடாது. உலகக் கிண்ணத் தொடர்வரை அவர் உடல் தகுதியுடன் இருக்க நாம் பிரார்த்தனை செய்ய வேண்டும். ஏனென்றால் மத்திய வரிசை மற்றும் பின் வரிசையில் விளையாடுவதில் அவர் மிகவும் அனுபவம் பெற்றவர். அவருக்கு நிகராக எவரும் இல்லை. டோனி எந்தச் சூழ்நிலையிலும் ஆட்டத்தின் சவாலைச் சந்திக்க கூடியவர். அனுபவம்தான் எப்போதும் நெருக்கடியைச் சமாளிக்க கூடிய திறமையை பெற்றது. அதில் டோனி சிறந்தவர்” என சேவாக் மேலும் தெரிவித்தார். (ம)

# இலங்கைத் தெரிவுக்குழு கூண்டோடு பதவிவிலகல்
## தொடர் தோல்விகளின் எதிரொலி



இலங்கை அணியின் தொடர் தோல்விகளை அடுத்து தலைமைத் தேர்வாளர் சனத் ஜெயசூரியவும், ஏனைய தேர்வாளர்களும் தத்தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர் என்று விளையாட்டுத்துறை அமைச்சு நேற்று அறிவித்தது.

இலங்கை அணி அண்மைக் காலமாக தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்து வந்தது. சிம்பாப்வேக்கு எதிரான தொடர், பங்களாதேஷுக்கு எதிரான தொடர் ஆகியவற்றில் கூட இலங்கை அணியால் தாக்கத்தைச் செலுத்த இயலவில்லை. இந்தியாவுக்கு எதிராக நடைபெற்றுவரும் தொடரிலும் தொடர்ந்து தடுமாற்றங்களைச் சந்தித்து வருகிறது. சொந்த மண்ணில் இந்தியாவுக்கு எதிராக ஓர் ஆட்டத்தையேனும் வெற்றிபெறுவதற்குத் திராணி யற்றதாக இலங்கை அணி காணப்படுகிறது.

*சொந்த மண்ணில் இந்தியாவுக்கு எதிராக ஓர் ஆட்டத்தையேனும் வெற்றிபெறுவதற்குத் திராணியற்றதாக இலங்கை அணி காணப்படுகிறது. இதனால் அணியின் தெரிவுக் குழு மீதும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் தலைமைத் தேர்வாளர் சனத் ஜெயசூரிய, ஏனைய தேர்வாளர்களான ரொமேஸ் களுவிதரண, ரஞ்சித் மதுருசிங்க, எரிக் உபசாந்த ஆகியோர் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்*

இதனால் அணியின் தெரிவுக் குழு மீதும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் தலைமைத் தேர்வாளர் சனத் ஜெயசூரிய, ஏனைய தேர்வாளர்களான ரொமேஸ் களுவிதரண, ரஞ்சித் மதுருசிங்க, எரிக் உபசாந்த ஆகியோர் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர் என்று விளையாட்டுத்துறை அமைச்சு நேற்று அறிவித்தது.

என்ன காரணங்களுக்காக தாம் பதவியில் இருந்து விலகுகின்றோம் என்று அவர்கள் தமது கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது. எனினும் இது தொடர்பில் எவ்வித உத்தியோகபூர்வமான கருத்துக்களும் நேற்று மாலைவரை வெளியாகவில்லை.

இலங்கை அணி இந்தியாவுக்கு எதிரான ரி-20 ஆட்டத்தில் செப்ரெம்பர் 6ஆம் திகதி விளையாடுகிறது. இந்த ஆட்டத்துக்கு பின்பாக புதிய தெரிவுக்குழு நியமிக்கப்படும். அதுவரை இந்தத் தெரிவுக் குழுவே செயற்படும். (ம)



## ‘தயார்’

“தென்னாபிரிக்க அணியை மூன்று வகையான ஆட்டங்களிலும் வழிநடத்திச் செல்ல தயார்” என்று தெரிவித்தார் பிளாசிஸ்.

ஒருநாள் ஆட்டங்களின் தலைவராக இருந்த வில்லியர்ஸ் அண்மையில் தனது பதவியில் இருந்து விலகினார். பிளாசிஸ் தலைமைத்துவத்தில் மிகச் சிறப்பாகச் செயற்படுகிறார் என்றும், மூன்று வகை ஆட்டங்களுக்கும் அவரையே தலைவராக நியமிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். இதையடுத்தே மூவகை ஆட்டங்களுக்கும் தலைமை தாங்கும் விருப்பத்தை வெளிப்படுத்தினார் பிளாசிஸ். (ம)

### 2,600 கோடி ரூபாவுக்கு பார்சிலோனா அணியுடன்
# ஒஸ்மான் ஒப்பந்தம்

நெய்மார் விலகியதை அடுத்து அவரின் இடத்துக்கு இலங்கை மதிப்பில் சுமார் 2 ஆயிரத்து 600 கோடி ரூபா கொடுத்து ஒஸ்மானை ஒப்பந்தம் செய்தது பார்சிலோனா.

பிரேசில் அணியின் நட்சத்திர வீரரான நெய்மர், கழகத்தைப் பொறுத்த மட்டில் பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்தார். அவரை அந்த அணியில் இருந்து எடுத்து தன்னுடன் ஒப்பந்தம் செய்துள்ளது பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன். இந்த ஒப்பந்தத்துக்காக இலங்கை மதிப்பில் சுமார் 4 ஆயிரம் கோடி ரூபா நெய்மருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

நெய்மரின் விலகலை அடுத்து, பார்சிலோனா பெரும் பின்னடைவைச் சந்தித்தது. ரியல் மட்ரிட்டுடனான இரண்டு ஆட்டங்களில் அடுத்தடுத்துத் தோல்வியடைந்தது. இதனால் நெய்மரின் இடத்துக்கு பதில் வீரரை நியமிக்க பார்சிலோனா கடும் முனைப்புக் காட்டியது. பல வீரர்களுக்கு வலை விரித்தது. இந்த நிலையில் டொட்



மண்ட் அணிக்காக விளையாடிவந்த ஒஸ்மான் டெம்பலை பார்சிலோனா ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்துக்காக ஒஸ்மானுக்கு 2 ஆயிரத்து 600 கோடி ரூபா கொடுக்கப்பட்டுள்ளது.

“உலகின் தலைசிறந்த அணியில் இணைவதன் மூலம் தற்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். இந்தக் கழகத்தில் உலகின் தலைசிறந்த வீரர்கள் உள்ளனர். பார்சிலோனா அதிக அளவில் கிண்ணங்களைக் கைப்பற்ற உதவிசெய்வேன் என்று நம்புகிறேன். பார்சிலோனா மைதானத்தில் விளையாடுவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்” என ஒஸ்மான் தெரிவித்தார். (ம)

# வென்றார் ஹமில்டன்

பெல்ஜியம் கார் பந்தயத் தொடரில் பிரிட்டன் வீரர் லூயிஸ் ஹமில்டன் முதலிடம் பிடித்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தப் போட்டி நடைபெற்றது. ஹமில்டன் முதலிடத்தையும், ஆஸ்திரேலிய வீரர் வெட்டல் இரண்டாம் இடத்தையும், ஆஸ்திரேலிய வீரர் றிக்கார்டோ மூன்றாம் இடத்தையும் பிடித்தனர். (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இளைஞர் யுவதிகள், O/L எழுதியோர், வீட்டுப்பெண்கள்,
தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
மூன்று மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாதுவிடின்
முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்!!
3 மாத சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 02.09.2017
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 04.09.2017
1.காலை 08-10 2.காலை 10-12
பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்
SAAMSON
Experts in English Training
403, வெலிங்டன் சந்தி
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

English Courses 50% off
✓Spoken English 4000/= 8000/=
✓Diploma in English 6000/= 12000/=
✓Trainer Training Diploma 12,000/= 24000/=
✓Spoken Sinhala 4,000/= 8000/=
✓Diploma in Sinhala 7,500/= 15000/=
ஆரம்பம் 05.09.2017 (செவ்வாய்) 9.00 am
Jaffna
021 221 2410
Sir Pon Ramanathan Rd, Thirunelveli, Jaffna.
(பல்கலை எதிரில்)
தொடர்புகளுக்கு:
Mob:076 697 3040
ELAS
Chunnakam
021 224 3660
124, Sir Pon Ramanathan Rd, K.K.S Rd, Chunnakam, (Above DFCC Bank)

# இலங்கை அணியில் திருப்புமுனை வரும்

## கப்புக்கெதர நம்பிக்கை

"இலங்கை அணி தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்துவரும் நிலையில், ஒரு ஆட்டத்தில் வெற்றிபெற்றால் நிச்சயம் திருப்புமுறை ஏற்படும் என்று தெரிவித்தார்." இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை அணியின் பொறுப்புத் தலைவராகச் செயற்பட்ட சாமர கப்புக்கெதர.




பல்லேகலயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்திய இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் கிடைத்த தோல்வியை அடுத்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து இவ்வாறு தெரிவித்தார் கப்புக்கெதர. "அணிக்கு வெளியில் இருந்து எந்தப் பிரச்சினையும் இல்லை. வெற்றிச் சூட்சமத்தை நாங்கள் மறந்துவிட்டோம் என்று நான் நினைக்கிறேன். பல அணிகளுக்கு இதுபோன்ற தோல்வி ஏற்பட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு ஆட்டத்தில் நாங்கள் வெற்றிபெற்றால் போதும், அதிலிருந்து ஏற்றம்பெற்றுவிடுவோம். கடந்த இரண்டு ஆட்டங்களில் எங்களது பந்துவீச்சில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. எங்களது துடுப்பாட்ட வீரர்கள் தங்களது விளையாட்டை மேம்படுத்த வேண்டும். பெரிய ஓட்டங்களைக் குவித்தாலேயே பந்துவீச்சில் எதையாவது முயற்சி செய்யலாம்" என கப்புக்கெதர மேலும் தெரிவித்தார்.

இந்த ஆட்டம் நடைபெறுவதற்கு முன்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கப்புக்கெதர கருத்துத் தெரிவிக்கையில், 'இந்திய அணியை வீழ்த்தக்கூடிய திறமை எமது அணியிடம் உள்ளது. எமது முழுப்பலத்தை வெளிப்படுத்தி நிச்சயம் இந்தியாவை வீழ்த்துவோம்' எனக் குறிப்பிட்டிருந்தார். (ம)

### என்றும் எம் நெஞ்சில்



**மனுவேல் பாலரத்தினம்**

பழகிவந்த பாசமுகம்
பாதியில் மறைந்தாலும்
பக்திமிக்க உம் உறவு
எம்மவற்கோர் எடுத்துக்காட்டு
பண்புமிகு உம் சேவை பாரினில் என்றும்
எம் நெஞ்சில்...

பரலோகில் உம்மைக் காண்போம் என்ற உறுதியுடன்...
நாற்சதுர சுவிசேஷ சபைக்குடும்பம்.

### மரண அறிவித்தல்

**பொன்னுத்துரை சிவகுருநாதன்**



பிறப்பு 15.08.1924 இறப்பு 29.08.2017

நவாலியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, சிவகாமியம்மன் கோயிலடியையும் வவுனியா, பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவகுருநாதன் நேற்று (29.08.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி தம்பையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், "தங்கத்தாத்தா" நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் மருமகனும் காலஞ்சென்ற சிதம்பரேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், குமாரசாமி, சிவபாக்கியம், செல்லம்மா மற்றும் சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பர்வதநாதன் (இந்தியா), அருணகிரிநாதன் (இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்), வரலட்சுமி (வவுனியா), மகாலட்சுமி (நடன ஆசிரியர் டென்மார்க்), லேகா (ஆசிரியர் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலாதேவி (இந்தியா), சுதேசா (வவுனியா), காலஞ்சென்ற பாலசுந்தரம் (இளைப்பாறிய பொறியியலாளர் நீர்ப்பாசனத் திணைக்களம்), சத்தியமூர்த்தி (டென்மார்க்) ஆகியோரின் மாமனும் லதாயினி (லண்டன்), கோபிநாத் (லண்டன்), பிரசாந் (கனடா), கஜதுரஞ்சன் (ஆசிரியர், வவுனியா நெடுங்கேணி ம.வி), சசிதரன் (விஞ்ஞானபீடம்), குகப்பிரியன் (HSBC கொழும்பு வங்கி), கிருஷ்ணப்பிரியா (டென்மார்க்), தான்யா (டென்மார்க்) ஆகியோரின் பேரனும் ஒலிவியா, டில்வேஸ், ஹன்சியா, அஜய்ஸ், நாவீர்யா அஞ்சலி வீராசத்தியன் விக்ரன்றொயோன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.08.2017) வியாழக் கிழமை 99/1, அம்மன்கோவில் வீதி, பண்டாரிக்குளம் இல்லத்தில் மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.99/1, அம்மன்கோவில் வீதி,
பண்டாரிகுளம், வவுனியா.
024 222 4001**

**தகவல்: (மகன்)
சி.அருணகிரிநாதன்**

விற்பனைக்கு
மானிப்பாய் பிரதான வீதியில் அமைந்துள்ள Gym பொருள்கள் விற்பனைக்குண்டு. Gym வாடகைக்கு விடப்படும்
தொடர்பு - 071 0966 795

Win Repair
சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், A/C களும் குறைந்த விலையில் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
0779648942

பணியாளர் தேவை
வரவேற்பாளர்கள் (GCE A/L)
அடிப்படை சம்பளம் 20000.00
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
மூர்த்தி டியிற்றல்
யாழ்ப்பாணம். 0772247428

### முதலாம் ஆண்டு நினைவேந்தல்

மண்ணில் 14 03 1939 — விண்ணில் 30 08 2016



**அமரர் திருமதி நாகேஸ்வரி கதிரவேலு**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொம்பனித் தெரு, ஆமர் வீதி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டு எம்மை விட்டுப் பிரிந்த தாயின், மடிதேடி மனதால் வாடும்.... உயிரோடு, உணர்வோடு, உடலோடு, உதிரத்தோடு ஒன்றாய்க் கலந்த

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

189/1/3/5, மகாவித்தியாலய மாவத்தை,
கொழும்பு – 13

வேலை வாய்ப்பு
நாடளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்து வரும் எமது Everest நிறுவனமானது வடக்கு, கிழக்கில், பல கிளைகளை நிறுவவுள்ளது. இதற்காக பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

| பதவி | சம்பள அளவுத்திட்டம் |
|---|---|
| Distributer | - 12500 - 17500 |
| Supervior | - 17500 - 25000 |
| ASM | - 25000 - 40000 |
| Manager | - 60000 - 100000 |
| Stockkeeper | - 28000 |
| Administation | - 15000 |

O/L, A/L படித்தவர்களுக்கு முன்னுரிமை வழக்கப்படும். ஏனையவர்களுக்கும் பயிற்சியுடன் வேலை வழங்கப்படும். வெளிமாவட்டத்தில் இருந்து வருபவருக்கு உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு. 0775179034, 0217223317

### மரண அறிவித்தல்

**திருமதி பராசத்தி நாகரட்ணம்**



கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசத்தி நாகரட்ணம் நேற்று (29.08.2017) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் அவர்களின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் தெய்வேந்திரன் (கனடா) அவர்களின் அன்புத்தாயும் ஜீவா (கனடா) வின் அன்பு மாமியும் கனடாவில் வசிக்கும் தாரணி, கிஷான், ஜனகன் , ஜனந்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ் சென்ற திருஞானசம்பந்தர், பசுபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் வில்வராணி ஆகியோரின் மைத்துனியும் சிவானந்தன், சிவநேசன் - ஷீலா (கனடா) காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சிவதாசன், சிவசக்தி- இளம்பிறையன் ,சிவமலர் - முருகதாஸ், சிவபாலன் - சுதா (கனடா), பாலகுமரன் - பாலினி, பாலரஞ்சன் - ஜெயந்தி, பாலமுரளீதரன் - காலஞ்சென்ற காயத்திரி, பாலமுகுந்தன் - சசிகலா ஆகியோரின் அன்புமாமியும் கவின்(கனடா), தேவன்(கனடா), Tyler (கனடா) ஆகியோரின பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.**

**தகவல் :
தெய்வேந்திரன் (மகன்)**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.